SAMARASAM
# சமரசம்
மாதம் இருமுறை இதழ்
16-31 ஆகஸ்ட் 2026 ₹25
Volume : 47 Issue : 05
www.samarasam.net



சமரசம் ஆசிரியர்
H.அப்துர் ரகீப் அவர்களுக்கு
காயிதே மில்லத் விருது

வங்கியல் துறையில்
முத்திரை பதித்தவர்
டாக்டர் ஜே.சதக்கத்துல்லாஹ்



மது போதைக்கு
எதிரான பரப்புரைச்
சிறப்பிதழ்






மது போதையின் ஆபத்துகள்

அவை ஏற்படுத்தும்
மோசமான விளைவுகள்

போதையினால் ஏற்படும்
உடல், மன, பொருளாதார,
சமூகப் பாதிப்புகள்

மீள்வதற்கான வழிகள்

மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள்

நிரந்தரத் தீர்வுகள்

ஆகியவற்றை விரிவாக அலசும் ஆக்கங்கள்

# போதை அழிவின் பாதை





- குடும்பத்தை அழிக்கும்,
- பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும்,
- இறைவணக்கத்திற்குத் தடையாக அமையும்,
- அறிவை மங்கச் செய்யும்,
- சமூக ஒற்றுமையை உடைக்கும்,
- குற்றங்களுக்கு வழிவகுக்கும் மிகப்பெரிய சமூகத் தீமையாகும்.


"போதை அழிவின் பாதை;
விழிப்புணர்வே வாழ்வின் பாதை."

₹ 75

www.iftchennai.in 8668057596

## IFTயின் நூல்கள்
## இப்போது மின்னூல்களாக (EPUB)
## சலுகை விலையில் கிடைக்கின்றன!




Scan செய்யுங்கள் EPUB பெறுங்கள்!



## உள்ளே...

● Dr. J. முஹையுதீன் MBBS., MS., MCh., **8**

போதை
வாழ்க்கையை விழுங்கும் இருள்

மது போதைக்கு எதிரான
பரப்புரைச் சிறப்பிதழ்

● கடிதங்கள் ● திருக்குர்ஆன் விரிவுரை ● நபிமொழி விளக்கம் ● புதிர் போட்டி


வந்தே மாதரம் திணிப்பு மதச் சுதந்திரத்திற்கு எதிரானது ● தலையங்கம் 7

போதையில்லா உலகு சமைப்போம்..! ● S. சாகுல் ஹமீது 18

வங்கியல் துறையில் முத்திரை பதித்தவர் டாக்டர்.ஜே.சதக்கத்துல்லாஹ் ● H. அப்துர் ரகீப் 22

இன்னும் 100 ஆண்டுகளுக்குப் பின்..! ● அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது 24

நல்லறங்கள் நிறைந்த சமுதாயம் ● சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி 29

போதை: அமைதியான பேரழிவு ● புதுமடம் ஜாபர் அலீ 32

மது போதை இல்லா நாள் நிச்சயம் வரும் ● மு.முஹம்மது ரியாஸ் 34

சமூக வீழ்ச்சியின் குறியீடு ● கப்ளிசேட் 37

சமரசம் ஆசிரியர் H. அப்துர் ரகீப் அவர்களுக்கு கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் விருது 42

சிறுகதை : குடிமகன் ● ஏ.ஆர்.கமாலுதீன் 46

போதைக்கு எதிரான போர் ஆபரேஷன் தூஃபான் ● குளச்சல் அசீம் 50


அக்கரைப் பச்சை, சிறார் உலகம் அடுத்த இதழில்..


ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*
**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு விளம்பரத் தொடர்புக்கு :*
**M. அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*
**samarasam.advt@gmail.com**

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

Creative Communication Chennai
SCAN & PAY
UPI ID: creative3142@sbi

சமரசம் சந்தாக்கள்,
விளம்பரக் கட்டணங்களை அனுப்ப
QR Codeஐ Scan செய்யவும்

பொறுப்பாசிரியர், சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net

## நெஞ்சுரம் மிக்க மக்கள்

‘அமெரிக்காவிற்கும், இஸ்ரேலுக்கும் அடிபணிந்து வாழும் கோழைகளின் வாழ்வைவிட ஒரு வீரச் சாவு எத்தனை அர்த்தமுள்ளது என்பதையும், ‘வாழும்போது இஸ்ரேலுக்கும், அமெரிக்காவிற்கும் போராளிகள் எப்படி சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தார்களோ அவர்கள் இறந்தபிறகும்கூட எதிரிகளுக்குப் பீதியைத் தருபவர்கள் என்பதையும் வரலாற்றில் அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிறது ஈரான்’ என்ற வரிகள், ஒரு மாபெரும் தலைவரின் அநீதியான படுகொலைக்கு நீதிகேட்டுத் திரண்ட கோடான கோடி மக்களின் அஞ்சாத நெஞ்சுரத்தையே காட்டுகின்றது. ஒன்றுபட்டு மனவுறுதியுடன் நிற்கும் அம்மக்களுக்கு இறைவனும் உடன் சேர்ந்து துணை நிற்கட்டும்.

– நா. இராசசெல்வம், புதுச்சேரி

## வாழ்வியல் படங்களுக்கான அடித்தளம்

ஹபீபி திரைக்காவியத்தைப் பார்த்தேன். மனநிறைவு பெற்றேன். எல்லா பாத்திரங்களும் அசலாக முஸ்லிம் பாத்திரங்களாகவே மாறிவிட்டதில் இயக்குநரின் உழைப்பு தெரிகிறது. திரைக்கதை முதுகெலும்பாக நகர முஸ்லிம்களின் இறை வணக்க முறை அன்றாடப் பழக்க வழக்கங்கள், கலாச்சாரம், பண்பாடுகள் ஆகியவற்றை ஆங்காங்கே இணைத்து பிற சமய மக்களும் விளங்கும்படி அமைத்து படம் முழுவதையும் ரசிக்க வைத்து விட்டனர் ஹபீபி படக் குழுவினர். இதுபோன்ற இஸ்லாமிய வாழ்வியல் படங்களைத் தைரியமாக எடுக்க அடித்தளம் போட்டுள்ள இயக்குநர் மீரா கதிரவனுக்கு மனமார்ந்த வாழ்த்துகள்.

நினைவில் நிற்கும் மகத்தான சாதனைகளைச் செய்து சென்றவிட்ட மௌலானா நத்வி ஸாஹிபைப் போன்ற ஆளுமைகளை மேலும் வழங்க நானும் இறையைப் பிரார்த்திக்கின்றேன். நாசாவின் தனியார் நிறுவனத்தின் (விண்வெளி ஸ்டார்அப்) ஒப்பந்தம் பெற்று நூற்றுக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பும் அளித்து அபார சாதனையால் இந்தியாவுக்குப் பெருமை சேர்த்த அஹமதுக்கு மன மார்ந்த வாழ்த்துகள்.

– ப.சையத் அஹ்மத், துளசேந்திரபுரம்

## மிகச் சிறப்பான படம்

ஒரு முஸ்லிம் குடும்பத்தில் உள்ள வாழ்வியலை மிகச் சிறப்பாக எடுத்து வைத்திருக்கிறது ஹபீபி. பெண்கள் தற்கால வாழ்வில் எதிர்கொள்ளும் சிந்தனைகளை முற்போக்காக பர்வீன் கதாபாத்திரம் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கிறது. மிக நேர்த்தியாக கடையநல்லூர் ஊரைச் சுற்றி உள்ள விவசாய இடங்களைத் துல்லியமாக நேரடியாகக் காண்பது போல் படம் பிடித்திருப்பதை மிக மிக ரசித்தேன். ஆயத்துல்லாஹ் அலீ கமேனியின் இறுதி ஊர்வலத்தில் அவருக்கு ஆதரவாக உலக நாடுகள் கலந்து கொண்டதில் உலக அரசியல் ஆதிக்கம் செய்யும் அமெரிக்க அரசியலுக்கு அடிபணிய மாட்டோம் என்ற உறுதி வெளிப்பட்டது.

– வி.கே.பீம ராஜா, ராஜபாளையம்

## வழிகாட்டும் திசை

ஆணவப் படுகொலை குறித்த தலையங்கத்தின் தீர்வு சிந்திக்கக் கூடியது. விலை போய்விடாதீர்கள் என்ற திசை பகுதி சரியான வழிகாட்டு




## உடனடிச் சட்டம் தேவை

ஆணவப் படுகொலைக்கு என்னதான் தீர்வு? இராஜஸ்தான், கர்நாடகம் போன்று தமிழ்நாடு அரசு கே.என். பாஷா பரிந்துரைகளைப் பெற்று ஆணவப் படுகொலைக்கு எதிரான சட்டத்தை உடனடியாக இயற்ற வேண்டும் என்ற தலையங்கக் கோரிக்கை வரவேற்கத்தக்கது. சாதி, இன, மொழி, மதப் பாகுபாடுகளுக்குத் தீர்வு காணவேண்டும். இன்னும் உயிர்ப்பலி நிகழ்வதை அரசு விரைந்து தடுக்க வேண்டும்.

– கவிஞர் காசீம், கடையநல்லூர்

தலை வழங்கியுள்ளது. ஹபீபி திரைப்படத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சமரசம் விமர்சனம் வெளியிட்டது மகிழ்ச்சி. கூட்டணிக் கட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக உடைந்த இச்சூழலில் திமுக சுய பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். விரல்ரேகையும் திருக்குர்ஆனும் சிந்தனையைத் தூண்டியது.

– ப.குருசாமி, தேனி

## ஆணவம் அடங்காத வரையில்..!

இரு இதயங்களின் மதிப்பை உணராதவர்களின் ஆணவம் அடங்காத வரையில் தலையங்கத்தின் கேள்விக்குப் பதில் கிடைக்கப் போவதில்லை. தவெக ஆட்சியில் லாக்கப் மரணம் நிகழ்ந்திருக்கிறது. இந்த நிலை எப்போது மாறும்?

– எம்.எஸ்.பாரூக், திருப்பாலத்துறை

## ஹபீபிக்கள் தொடர வேண்டும்

ஹபீபி விமர்சனம் மிக அருமை. இது போன்ற படங்கள் தொடர்ந்து வெளிவர வேண்டும். ஈரான் தலைவரின் இறுதி ஊர்வலம் பிரமிக்க வைத்தது. தவெகவின் வெற்றி தமிழ்நாட்டிற்கு நல்லதா என்பதை புரிந்து கொள்ளும் சூழல் விரைவில் உருவாகும்.

– T.M. பெரோஸ்கான், விருத்தாச்சலம்

## உத்வேகம் தந்த கவிதை

ஆணவக் கொலைகள் அதிகரித்திருப்பது கவலையளிக்கிறது. மனிதகுலம் ஒரே குடும்பம் என்ற சிந்தனை மாற்றம் வராதவரை இங்கு எந்த மாற்றமும் சாத்தியமில்லை என்ற தலையங்கத்தின் கூற்று சிந்திக்க வேண்டிய கருத்து. கவிஞர் காசீமின் கைத்தடி கவிதை உத்வேகம் தந்தது. கடைசிப்பக்கச் செய்தி அருமை. அஹமதின் சாதனைக்கும் அதற்கு வித்திட்ட அவரது தந்தைக்கும் பாராட்டுகள்.

– ப.பீர் இலாஹி, உத்தமபாளையம்

## சாதாரண விஷயமல்ல..!

‘ஹபீபி’ ஈரான் படங்கள் போல கலையம்சத்துடன் இஸ்லாமிய வாழ்க்கையை பல சமயத்தினரும் கண்டுகளிக்க ஏற்றவாறு தயாரிக்கப்பட்டுள்ளது சாதாரண விஷயமல்ல! விறுவிறுப்பைக் கூட்டி, இறுதி வரை ரசிக்கும்படி கட்டிக் காத்த இயக்குநர் மீரா கதிரவனுக்கு ஒரு சபாஷ்!

ஈரானின் பக்குவப்பட்ட அரசியலையும் பொதுமக்களின் நாட்டுப் பற்றையும் இஸ்லாத்தின் மீதான அவர்களின் பற்றுறுதியையும் மேலை நாடுகள் குறிப்பாக அமெரிக்கா இன்னும் விளங்காதிருப்பது வாய்ப்புக்கேடே! ஈரான் அமெரிக்கா போர் ட்ரம்புக்கு அவலை எண்ணி உரலை இடித்த கதையாகி விட்டது.

அணு ஆயுதமற்ற வல்லரசாக உலகின் முன் தலை நிமிர்ந்து நிற்கிறது ஈரான். ஈரான் தலைவர் கமேனியின் இறுதி ஊர்வலத்தில் இரண்டு கோடி மக்களும் வடித்த கண்ணீரை போலிக் கண்ணீராக இருக்கலாம் என்று கூறிய ட்ரம்ப் கடுகளவும் ஈரமற்றவர் என்பதை உலகம் உணர்ந்து கொண்டது.

ஒரு போர்வாளைப் பூட்டி வைத்தல் நியாயமா? என்று கேட்டு பொட்டில் அடித்தது போல் அறிவுரை வழங்கிய திருக்குர்ஆன் எனும் நான் கவிதை வெகு அருமை.

– S.A. சபீர் அஹ்மது, ஆணைக்காரன் சத்திரம்

## சிந்தனை செய் மனமே

தவெக வெற்றிக்குப் பின்னால் கட்டுரைக்கு இளங்கோவன் ராஜசேகரன், ராமு மணிவண்ணன், சிவப்பிரியனின் ஆகியோரின் விரிவான பார்வை வலுச் சேர்த்துள்ளது. ஹபீபி புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்துள்ளது. கலை வழியே இஸ்லாமியர்களின் வாழ்வையும், நெசவுத் தொழிலையும் பதிவு செய்த விதம் அருமை. இயக்குநர் மீரா கதிரவனுக்கும், படக் குழுவினருக்கும் பாராட்டுகள். விரல் ரேகையைக் குறித்து ஆழமாய்ச் சிந்தித்தாலே இறைவனை உணர முடியும். திருக்குர்ஆனின் ஒளியில் அறிவியல் ஆய்வு இன்றைய காலத்திற்கு மிகவும் தேவை.

– S. அஜித்தா, M. லைலம்மா,
S. மகுதனன், தேனி

அல்லாஹ்வின் விருந்தாளிகளின் சேவையில் 31வது வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

## இன்ஷா அல்லாஹ்

## 2027 ஹஜ் புக்கிங் நடைபெறுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் 2026லிருந்து 2027 ரமலான் வரை ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்.

## உம்ரா குரூப்:

ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா குழு புறப்படுகிறது. உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

TRUST WORTHY

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**
B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

**தொடர்பு கொள்வீர்**
**சென்னை 044-28594441 / 2 / 3**
**95516 622 31**
**91 98410 786 36**

وَقُولُوا۟ قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

சரம் : 47
மலர் : 05

1448 ரபியுல் அவ்வல் 2 -17 ● 2026 ஆகஸ்ட் 16-31

# வந்தே மாதரம் திணிப்பு மதச் சுதந்திரத்திற்கு எதிரானது

2025 டிசம்பரில் நடந்த நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடரில் வந்தே மாதரம் பாடலின் 150ஆவது ஆண்டைக் கொண்டாடும் வகையில் சிறப்பு விவாதம் நாடாளுமன்றத்தின் இரு அவை களிலும் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து வந்தே மாதரம் பாடல் இசைக்கப்படுவதற்குப் புதிய வழிகாட்டு நெறிமுறைகளை ஒன்றிய உள்துறை அமைச்சகம் ஜனவரி 28ஆம் தேதி வெளியிட்டது.

‘அரசு நிகழ்ச்சிகள், பள்ளிகளில் தேசிய கீதத்துக்கு முன்னதாக வந்தே மாதரம் பாடலின் 6 சரணங்களும் கட்டாயம் பாட அல்லது ஒலிக்கப்பட வேண்டும். குடியரசுத் தலைவர், ஆளுநர் உள்ளிட்டோர் பங்கேற்கும் அனைத்து அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்திலும் முடிவிலும் வந்தே மாதரம் பாடல் ஒலிக்கப்பட வேண்டும். அகில இந்திய வானொலி, தொலைக்காட்சி மூலம் குடியரசுத் தலைவர் நாட்டு மக்களுக்கு உரையாற்றுவதற்கு முன்னும் பின்னும் ஒலிக்கப்பட வேண்டும்’ என்று அதில் கூறப்பட்டுள்ளது. இந்தச் சுற்றறிக்கைக்கு எதிராக முஹம்மது சயீத் நூரி தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

தேசிய கௌரவ அவமதிப்பு தடுப்பு(திருத்த) மசோதா, 2026 (The Prevention of Insults to National Honour (Amendment) Bill, 2026) ஜுலை 29ஆம் நாள் மாநிலங்களவையிலும், ஜூலை 30 ஆம் நாள் மக்களவையிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இம்மசோதாவின் படி வந்தே மாதரம் பாடுவதைத் தடுப்பது, இடையூறு செய்வது குற்றமாகும். இதற்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை, அபராதம் விதிக்கப்படும். இந்த மசோதா வந்தே மாதரம் பாடலைக் கட்டாயமாகப் பாட வேண்டும் என்று வெளிப்படையாகக் கூறவில்லை என்றாலும் அந்தப் பாடலுக்கு எதிராக அவமதிப்பு அல்லது மரியாதைக் குறைவு எனக் கருதப்படும் செயல்களைக் குற்றமாக்குகிறது. இவ்வாறான சொற்கள் தெளிவற்றவையாகவும், தனிநபர் விளக்கத்திற்கு உட்பட்டவையாகவும் இருப்பதால், அவை தவறாகப் பயன்படுத்தப்படும் அபாயம் அதிகம் உள்ளது.

1950இல் வந்தே மாதரம் தேசியப்பாடலாக ஒன்றிய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டபோது, ஒரே இறைவனைத்தவிர வேறு யாரையும் வணங்காத முஸ்லிம்கள் ‘தாயை வணங்குகிறோம்’ என்பதை ஏற்க மறுத்தனர். முஸ்லிம்களாகிய நாங்கள் நாட்டை நேசிக்கிறோம். ஆனால் அதை வணங்க மாட்டோம் என்பதைத் திட்டவட்டமாக அறிவித்தனர்.

வந்தே மாதரம் பாடலின் இறுதி மூன்று பத்திகளில் இந்திய நாட்டை காளியோடும் லட்சுமி யோடும் ஒப்பிட்டு வரிகள் உள்ளன. இதனையும் முஸ்லிம்கள் ஆட்சேபித்தனர். வங்கக் கவிஞர் பக்கிம் சந்திர சாட்டர்ஜி 1876ஆம் ஆண்டு இந்தப் பாடலை எழுதினார். 1882ஆம் ஆண்டு ஆனந்த மடம் என்ற நாவலை அவர் எழுதிய போது இந்தப் பாடலையும் அதில் இணைத்தார். இந்த நாவல் முழுவதும் முஸ்லிம் விரோதக் கருத்துகள் இடம் பெற்றுள்ளன. முஸ்லிம்கள் நாட்டை விட்டு விரட்டப்பட வேண்டியவர்கள் என்பதே இந்த நாவலின் மையக் கருத்தாகும்.

மதச் சுதந்திரத்துடன் நேரடியாக தொடர்புடைய ஒரு விஷயத்தில், மதச் சிறுபான்மையினரி டையே தேவையற்ற அச்சத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தக்கூடிய வகையில் நாடாளுமன்றம் இந்த மசோதாவை நிறைவேற்றியுள்ளது வேதனையளிக்கும் செயல். மாநிலப் பாடலை பின்னுக்குத் தள்ளி மாநில உரிமையைப் பறிப்பது கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது.

நாட்டுபற்று என்பது ஒரு குறிப்பிட்ட பாடலைப் பாடுவதோ, முழக்கமிடுவதோ அல்ல. அரசியலமைப்புச் சட்டம் உறுதி செய்துள்ள அடிப்படை உரிமைகள், மதச் சுதந்திரம், கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான இந்த மசோதாவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும்.

1

# போதை வாழ்க்கையை விழுங்கும் இருள்




டாக்டர் J. முஹையுதீன் எழுதியுள்ள போதை அழிவின் பாதை நூலை அடிப்படையாக வைத்து மூன்று கட்டுரைகளும் தொகுக்கப்பட்டுள்ளன.


**- டாக்டர் J. முஹையுதீன் MBBS., MS., MCh**


உலகம் ஒருபுறம் அறிவியலிலும் தொழில்நுட்பத்திலும் பெரும் முன்னேற்றம் அடைந்து வரும் நிலையில் மறுபுறம் தனி மனித வாழ்வில் மது, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் ஆதிக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இது மிகப்பெரும் சமூக நெருக்கடியாக உருவெடுத்துள்ளது. இன்று போதைப்பொருள் பழக்கம் நகரங் களில் மட்டுமின்றி கிராமங்களிலும் பள்ளி மாணவர்களிடையேயும் தீவிரமாகப் பரவி வருவது மிகுந்த கவலைக்குரியதாகும்.

அறிவையும், மனதையும் மயக்கும் அனைத்தும் போதைப் பொருட்களே! ஆனால் காலப்போக்கில் சமூகத்தின் பார்வை பெரிதும் மாறிவிட்டது. நேற்று வரை போதைப் பொருளாகக் கருதப்பட்ட மது இன்று உற்சாக பானம் என்று இயல்பாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இளைஞர்கள் மட்டுமல்ல; சிறுவர்களும் சிறுமியர்களும் கூட இதை நாகரிகத்தின் அடையாளமாக அணுகத் தொடங்கியுள்ளனர்.

ஊடகங்களும், சமூகமும், சில நேரங்களில் அரசின் கொள்கைகளும், மதுவை சாதாரண நுகர்வுப் பொருளாகச் சித்திரிப்பதால் மதுவும் ஒரு போதைப் பொருளே என்ற அடிப்படை உண்மை மறக்கடிக்கப்படுகிறது. இந்தப் போக்கு தொடர்ந்தால் நாளைய சமூகத்தில் கஞ்சா, அபின் போன்றவையும் சாதாரணமாகிவிடும் அபாயம் உள்ளது. போதையின் உண்மையான முகத்தை இளைய தலைமுறை அறிந்துகொள்வது காலத்தின் கட்டாயம்.

போதை ஒருபோதும் தனிமனிதனை மட்டும் பாதிப்பதில்லை. அது குடும்பம், மனைவி, குழந்தைகள், பணியிடம், சமூகம், நாட்டின் பொருளாதாரம் என அனைத்தையும் பாதிக்கின்றது. இளவயது மரணங்கள், சாலை விபத்துகள், குடும்ப வன்முறை, நீண்டகால நோய்கள் ஆகியவற்றிற்கு மதுவும் பிற போதைப் பொருள்களும் முக்கியக் காரணியாக உள்ளது.


- உலக அளவில் ஆண்டுதோறும் சுமார் 26 இலட்சம் பேர் போதையால் மரணிக்


**Table 1.5 Global deaths attributable to drug use, 2019**

| Drug type | Drug use disorders | HIV | HBV | HCV | RTA | Suicide | Total deaths |
|---|---|---|---|---|---|---|---|
| **Opioid** | 123 848 | 60 679 | 7 287 | 233 941 | 5 351 | 17 383 | 448 489 |
| **Cocaine** | 7 420 | 2 589 | 258 | 8 789 | 2 285 | 4 741 | 26 082 |
| **Amphetamine** | 4 454 | 5 427 | 666 | 21 345 | 9 214 | 5 555 | 46 661 |
| **Cannabis** | – | – | – | – | 14 206 | – | 14 206 |
| **Other** | 46 035 | 346 | 56 | 1 637 | – | – | 48 074 |
| **All drugs** | **181 758** | **69 040** | **8 267** | **265 711** | **31 056** | **27 679** | **583 511** |

கின்றனர் என்பது கவலை அளிக்கும் தகவல் ஆகும்.

- இந்தியாவில் மட்டும் 10 முதல் 75 வயதிற்குட்பட்டவர்களில் சுமார் 14.6 விழுக்காட்டினர் அதாவது ஏறத்தாழ 16 கோடி மக்கள் மதுவைப் பயன்படுத்துகின்றனர் என்று ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.
- இவர்களில் சுமார் 2.9 கோடி பேர் மதுவுக்கு முழுமையாக அடிமையாகி உள்ளனர். இதில் 27.3% ஆண்களும், 1.6% பெண்களும் ஆவர்.
- மது அல்லாத போதைப் பொருள்களின் பயன்பாடும் இந்தியாவில் அதிகரித்து வருகிறது.





- இந்தியாவில் சுமார் 3.1 கோடி மக்கள் ஏதாவது ஒரு வகை கஞ்சாவைப் பயன்படுத்துவதாகவும், இவர்களில் சுமார் 72 இலட்சம் பேர் தீவிர உடல், மன ரீதியான பிரச்னையுடன் வாழ்வதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.
- நாட்டில் சுமார் 2.3 கோடி மக்கள் ஓபியாய்டு வகைப் போதைப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். இவர்களில் 77 இலட்சம் பேர் சிகிச்சை தேவைப்படும் அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக ஹெராயின் மிகவும் ஆபத்தானதும் வேகமாக அடிமைப்படுத்தக் கூடியதுமான போதைப் பொருளாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.
- நோய் நிவாரண மருந்துகளைத் தவறாகப் பயன்படுத்தும் போக்கும் அதிகரித்து வருகிறது. மருத்துவர் பரிந்துரையின்றி தூக்க மாத்திரைகள், வலி நிவாரண ஓபியாய்டு மருந்துகளைப் பயன்படுத்தும் பழக்கமும் இந்தியாவில் அதிகரித்து வருகிறது. போதைக்காக சில இருமல் மருந்துகளையும் கூட பயன்படுத்துகின்றனர். நாடு முழுவதும் சுமார் 1.18 கோடி பேர் இவ்வகை மருந்துகளைத் தவறாகப் பயன்படுத்துவதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன.
- கொகைன், ஆம்பெட்டமின் போன்ற பிற போதைப் பொருள்களின் பயன்பாடு இந்தியாவில் தற்போதைக்குக் குறைவாகக் காணப்பட்டாலும், அவை சமூகத்தில் பரவிவிடாமல் தடுக்க விழிப்பு உணர்வும் தீவிரக் கண்காணிப்பும் காலத்தின் கட்டாயமாகும்.
- போதைப்பழக்கம் இப்போது பெரியவர்களின் பிரச்னை மட்டுமல்ல. பள்ளி, கல்லூரி மாணவர்களிடமும் போதைப் பொருள் பயன்பாடு அதிகரித்து வருகிறது என்று ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.
- அண்மை ஆய்வுகளில் மிகவும் அதிர்ச்சியூட்டும் பல தகவல்கள் வெளிவந்துள்ளன. சுவாசம் வழியாக உள்ளிழுக்கும் (Inhalants) போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதில் குழந்தைகள், 12-18 வயதுடைய பதின்பருவத்தினரின் விகிதம், பெரியவர்களை விட அதிகமாக இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- சமூகக் கல்வி நிறுவனம் (The Institute of Social Education) 2020ஆம் ஆண்டு சென்னை, திருவண்ணாமலை, நீலகிரி மாவட்டங்களில் நடத்திய ஆய்வில், 12 - 18 வயதுடைய பதின்பருவப் பள்ளி மாணவர்களிடையே போதைப் பழக்கம் காணப்படுவது தெரியவந்துள்ளது. 168 பள்ளிகளைச் சேர்ந்த 3,021 மாணவர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில், 9% பேர் தாங்கள் போதைப் பொருள்களைப் பயன்படுத்துவதாக ஒப்புக்கொண்டுள்ளனர்.


போதைப் பொருள் பயன்படுத்தும் மாணவர்களில் 26% பேர் மதுவையும், 10% பேர்

கஞ்சாவையும், 23% பேர் கூல் லிப் (Cool Lip) பொருள்களையும், 22% பேர் புகையிலைப் பொருள்களையும் பயன்படுத்துகின்றனர். அதேபோல் ஒய்ட்னர், ரப்பர் போன்ற பொருள்களை 13% பேர் போதைக்காகப் பயன்படுத்துகின்றனர். இதைத் தவிர, 6% பேர் பிற வகைப் போதைப் பொருள்களையும் பயன்படுத்துவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

### மக்கள் ஏன் போதையை நாடுகிறார்கள்?

42% பேர் மகிழ்ச்சியைக் கொண்டாடும்போதும், 40% பேர் கவலையை மறக்கவும் போதையை நாடுவதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இன்னும் பலர் களைப்பைப் போக்குவதற்காகவும் சிலர் சமூக அங்கீகாரத்தைப் பெறுவதற்காகவும் மது போன்ற போதையை நாடுகின்றனர். ‘இது எப்படித்தான் இருக்கும்?’ என்ற ஆர்வம் கூட பலரை போதையில் தள்ளி விடுகின்றது.




இந்தப் புள்ளிவிவரங்கள் வெறும் எண்கள் அல்ல. ஒவ்வொரு எண்ணிக்கையின் பின்னாலும் ஒரு குடும்பத்தின் கண்ணீர் மறைந்துள்ளது. ஒரு தாயின் கவலை, ஒரு மனைவியின் அமைதியற்ற வாழ்க்கை, ஒரு குழந்தையின் பறிபோகும் எதிர்காலம், பெற்றோரின் ஏமாற்றம், ஒரு சமூகத்தின் பாதுகாப்பின்மை ஆகிய அனைத்தும் அந்த எண்களுக்குள் மறைந்து கிடக்கின்றன.

# 2 உடல்நலத்தை அழிக்கும் போதை

**போதை உடலில் ஏதோ ஓர் உறுப்பை மட்டும் தாக்காது. உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை அனைத்து உறுப்புகளையும் பாதிக்கின்றது. பெரும்பாலான பாதிப்புகள் உடனடியாக வெளிப்படுவதில்லை. ஆண்டுகள் கழித்து மீள முடியாத சேதமாக வெளிப்படும்.**

மதுவின் முக்கிய வேதிப்பொருள் எத்தனால்(Ethanaol). மனித உடல் இதை நச்சு விஷமாகவே கருதுகிறது. இந்த நச்சு இரத்தம் வழியாக மூளை, இதயம், கல்லீரல் அனைத்திற்கும் செல்கிறது. ஆரம்பத்தில் மூளையின் கட்டுப்பாட்டு மையங்களை மந்தமடையச் செய்கிறது. இதனால் ஒரு வித உற்சாகம் ஏற்படும். ஆனால் சிறிது நேரத்தில், மூளையின் மிக முக்கியப் பகுதியான சிறு மூளை பாதிக்கப்பட்டு, நிலை தடுமாற்றம் ஏற்படுகிறது. தொடர்ந்து மதுவைப் பயன்படுத்தினால் காலப்போக்கில் கல்லீரல் அழற்சி (Alcoholic Hepatitis), கல்லீரல் சுருக்கம் (Cirrhosis), கல்லீரல் புற்றுநோய் என அனைத்து விதமான நோய்களும் ஏற்படலாம். கல்லீரல் பாதிப்பினால் வயிறு வீங்கி இரத்த வாந்தி எடுத்து உயிரைப் பறித்துவிடுகிறது.

- மதுவின் எந்த அளவும் முற்றிலும் பாதுகாப்பானது அல்ல என்பதை நாம் உணர வேண்டும். ‘சிறிதளவு மது இதயத்திற்கு

நல்லது' என்ற கருத்து இன்று மறுபரிசீலனை செய்யப்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனம் இதனைத் தெளிவாகக் கூறுகிறது.

- மூளையில் டோபமைன் (Dopamine) அதிகரிப்பால் மது தற்காலிக மகிழ்ச்சியைத் தருகிறது. பின்னர் அதுவே அடிமை ஆகக் காரணமாக அமைந்து விடுகிறது. மது குடிக்கவில்லை என்றால் ஏற்படும் கை நடுக்கம் போன்ற அறிகுறிகளிலிருந்து (Withdrawl Symptoms) தப்பிக்கவே மீண்டும் மீண்டும் மது அருந்தும் நிலை உருவாகிறது. இதுவே முழு அடிமைத் தனம்.

### புகையிலை

புகையிலையில் உள்ள நிக்கோட்டின் என்ற விஷம் வினாடிகளில் மூளையை அடைந்து விடும். மூளையை அடைந்து மகிழ்ச்சி உணர்வுடன் தொடர்புடைய டோபமைன் செயல்பாட்டை அதிகரிக்கிறது. அந்தத் தற்காலிக மகிழ்ச்சி உணர்வே மீண்டும் மீண்டும் புகைக்க வேண்டும் என்ற விருப்பத்தை உருவாக்குகிறது. காலப்போக்கில் அந்த விருப்பம் தேவையாக மாறுகிறது; பின்னர் அந்தத் தேவையே அடிமைத்தனமாக மாறுகிறது.

கஞ்சா போன்ற போதைப் பொருட்களைப் புகையாக உள்ளிழுப்பதற்குச் சிகரெட் அல்லது அதற்கு ஒத்த முறைகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் மறந்துவிடக் கூடாது. புகையிலையை மூலப் பொருளாகக் கொண்ட குட்கா, பான் மசாலா, ஜர்தா போன்றவை இன்று போதைப் பொருளாக மக்களால் பயன்படுத்தப்படுகிறது. இவற்றை சாதாரண சுவைப் பொருளாக மக்கள் பார்க்கின்றனர். ஆனால் இவை மிகக் கொடிய வாய் புற்றுநோயை உருவாக்கும் மூலப்பொருள் ஆகும்.

### கஞ்சா

கஞ்சாவில் உள்ள முக்கிய போதை வேதிப்பொருள் டெட்ராஹைட்ரோ கன்னாபினால் (Tetrahydrocannabinol - THC) ஆகும். இந்த வேதிப்பொருள் மூளையின் நினைவாற்றல், கவனம், சிந்தனை, உணர்ச்சி, முடிவெடுக்கும் திறன் ஆகியவற்றுடன் தொடர்புடைய பகுதிகளைப் பாதிக்கிறது. இளம் வயதில் பயன்படுத்தினால் அறிவாற்றல், மூளை வளர்ச்சியில் நீண்டகால பாதிப்பு ஏற்படுத்துகிறது. சிலருக்கு கண்முன் இல்லாத பொருள் எல்லாம் தெரியத் தொடங்கும். இதனை மாயத் தோற்றம்(Visual hallucination) என்று அழைப்பர். இத்துடன் குடும்ப உறவைப் பாதிக்கும் சந்தேக நோய்(Paranoid) போன்ற மனநலக் கோளாறுகளும் உருவாகும். சிலருக்கு இதைவிட ஆபத்தான போதைப் பொருட்களுக்குள் நுழையும் ஆரம்பப் படியாக இது அமைகிறது.

### ஓபியாய்டுகள் / ஹெராயின்

- இவை மருத்துவத் துறையில் கடுமையான வலியைக் கட்டுப்படுத்தும் வலி நிவாரண மருந்தின் அடிப்படை ஆகும். ஆனால் மருத்துவக் காரணங்கள் இன்றி அதனை தவறாகவும் சட்ட விரோதமாகவும் பயன்படுத்தப்பட்டு, உலக நாடுகளையே பெரும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது. ஓபியம்(Opium) என்பது பாப்பி (Poppy) செடியிலிருந்து பெறப்படும் இயற்கைப் பொருளாகும். ஆனால் அதே மூலப் பொருளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் ஹெராயின் (Heroin) உலகின் மிகவும் ஆபத்தான போதைப் பொருட்களில் ஒன்றாகும்.
- ஹெராயின் செயற்கையான இன்ப உணர்வை மூளையில் உருவாக்குகிறது. அந்த உணர்வு சில நிமிடங்கள் மட்டுமே நீடித்தாலும் அதை மீண்டும் அனுபவிக்க வேண்டும் என்ற வலுவான ஏக்கம் மிக விரைவாக உருவாகிறது. இதுவே மனிதனைப் படிப்படியாக முழுமையான அடிமைத்தனத்திற்குத் தள்ளுகிறது. சில மாதங்களிலேயே உடல் எடை குறைதல், பசியின்மை, சோர்வு, தூக்கக் கோளாறு, மனச்சோர்வு, சமூகத்திலிருந்து விலகி

வாழும் பழக்கம் போன்ற பல மாற்றங்கள் தோன்றத் தொடங்கலாம்.

- இந்த வகை போதைப்பொருள்கள், ஊசி மூலம் செலுத்தப்படுகின்றது. ஒருவர் பயன்படுத்திய ஊசியை மற்றவர் பயன் படுத்துவதால் எயிட்ஸ், மஞ்சள் காமாலை (ஹெபடைட்டிஸ் பி/சி)ஆகிய நோய் களின் பரவல் அதிகரிக்கும் வாய்ப்பும் உள்ளது.

### கொகைன், மெத்தாம் பெட்டமின் (Met-amphetamine)

இவ்வகை போதைப் பொருள்கள் அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகிறது. (கடந்த ஒரு வார காலத்தில் தமிழ்நாட்டில் மெத்தாம்பெட்டமின் உருவாக்கும் தொழிற் சாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது). இவ்வகை போதைப்பொருள்கள் இதயத் துடிப்பை சீர்குலைத்து திடீர் மாரடைப்பு, மூளைப் பாதிப்பை ஏற்படுத்தலாம். சிலபோது உயிரிழப்பு வரை கொண்டு செல்லும் அபாயமும் உள்ளது.

ஒரு நஞ்சு உயிரை ஒரே கணத்தில் பறிக்கலாம். போதை என்னும் நஞ்சு மெதுவாகக் கொன்றுகொண்டே இருக்கும். உயிருடன் இருந்தாலும் உடல், அறிவு, குடும்பம், மரியாதை, எதிர்காலம் சிறிது சிறிதாக அழியும்.

### போதைப் பொருள் தனிநபர் பிரச்னையல்ல, இது ஒரு சமூக நோய்

குடும்பம், பொருளாதாரம், ஆரோக்கியம் என அனைத்தையும் மெல்ல மெல்ல போதை அழித்துவிடும்.

### குடும்பம்

- அன்பு, நம்பிக்கை, பொறுப்பு உணர்வு ஆகிய குடும்பத்தின் தூண்களைப் போதை உடைக்கிறது.

- ஈட்டிய வருமானம் போதைப் பொருள் வாங்குவதற்குச் செலவாகிவிட குழந்தைகளின் கல்வி, உணவு, மருத்துவம் ஆகியவை முற்றிலுமாகப் பாதிக்கப்படுகிறது.

- குடும்ப வன்முறை அதிகரிக்கும் அபாயம் உள்ளதாகப் புள்ளி விவரங்கள் கூறுகிறது. குடும்பப் பெண்களின் நிலை மோசமாகப் பாதிப்படைகிறது. மன அழுத்தம், வன்முறை, சமூக அவமானத்தை பெண்கள் அமைதியாகச் சுமக்கின்றனர். வீட்டில் உள்ள குழந்தைகள் தாழ்வு மனப்பான்மை, பயம், கல்வி ஆர்வமின்மையுடன் வளர்கின்றனர்; இக்குழந்தைகளில் சிலர் பின்னர் அதே (போதை) பாதையைத் தேர்ந்தெடுக்கும் அபாயமும் அதிகம்.

### பொருளாதாரம்

ஒவ்வொரு நாள் இரவிலும் வார இறுதியிலும் போதையில் வாழும் தொழிலாளர்களைக் கொண்டு எவ்வித முன்னேற்றத்தையும் இந்த நாடு சந்திக்க முடியாது. இதனால் உற்பத்தித் திறன் குறைவு, பணியிட விபத்துகள், மருத்துவச் செலவுகள், காவல் நீதிமன்ற சிறைச் செலவுகள் என நாட்டின் பொருளாதாரத்தையே இது அசைத்துவிடுகிறது. (ஆனால் இதைக் குறித்து எந்த அரசும் அக்கறை கொள்வதில்லை) தமிழ்நாட்டில் அரசு நடத்தும் டாஸ்மாக் வருவாய் ஆண்டுக்கு சுமார் ₹45,000 கோடிக்கு மேல் என்றாலும் மது தொடர்பான சுகாதாரச் செலவு, உற்பத்தி இழப்பு உள்ளிட்ட சுமை ஆண்டுக்கு ₹30,000 கோடிக்கு மேல் என மதிப்பிடப்படுகிறது. மொத்தச் சமூகச் செலவு வருவாயை விட அதிகமாக இருக்கலாம் என்று பல ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

### இளைய தலைமுறையின் அழிவு

- போதையால் கல்வி கற்கும் மாணவர்களின் கவனம் குறைகின்றது. கல்வி இடைநிற்றல் அதிகரித்துள்ளது.

- சமூகத்தில் நடைபெறும் பல்வேறு குற்றச்செயல்களின் பின்னணியில் போதைப் பழக்கம் உள்ளது. போதைப் பொருளை வாங்குவதற்குப் பணம் தேவைப்படும்போது இளைஞர்கள் திருட்டு, கொள்ளை, மோசடி, சங்கிலிப் பறிப்பு போன்ற குற்றங்களில் ஈடுபடுகின்றனர்.

• மதுபோதையில் வாகனங்கள் ஓட்டுவதால் ஆயிரக்கணக்கான விபத்துகள் அன்றாடம் ஏற்படுகிறது.

### மீள முடியுமா?

மது அருந்தும் பலர் கூறும் ஒரு வாக்கியம் உண்டு 'நான் நினைத்தால், ஒரே நாளில் போதையை விட்டுவிடுவேன்' இது மருத்துவ அறிவியலுக்கு முரணானது. ஏனெனில் போதையால் மூளையில் நீடித்த மாற்றங்கள் ஏற்பட்டுவிடும். இந்த உடல் ரீதியான மாற்றத்தைத் திடீரென ஒரே நாளில் பழைய நிலைக்குக் கொண்டுவர இயலாது. மருத்துவச் சிகிச்சை, மனநல ஆலோசனை, குடும்ப ஆதரவு, சமூக ஒத்துழைப்பு ஆகியவை இணையும்போது தான் நிலையான குணமடைய முடியும்.

### நோயை ஏற்றுக்கொள்வதே முதல் படி

எனக்குப் பிரச்னையில்லை, எப்போது வேண்டுமானாலும் நிறுத்திவிடுவேன் என்ற மறுப்பு மனநிலையே சிகிச்சையைத் தாமதப்படுத்துகிறது.

### மருத்துவச் சிகிச்சை

ஒவ்வொரு போதைக்கும் மாற்று மருந்துகள் உள்ளன. மதுவுக்கு ஆசையைக் குறைக்கும் மருந்துகள் உண்டு; ஓபியாய்டு போதைக்கு மெதடோன் (Methadone) போன்ற எதிர் மருந்துகள் உண்டு. புகையிலைக்கு நிக்கோட்டின் மாற்றுச் சிகிச்சை உள்ளன. ஆனால் இந்த மருந்துகள் ஒரு முடிவல்ல தொடக்கம் மட்டுமே. உளவியல் ஆலோசனை, குடும்ப அரவணைப்பு, மறுவாழ்வு மையங்கள், வேலைவாய்ப்பு, தொழிற்பயிற்சி ஆகியவையும் அவசியம். தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகள், மனநல மையங்கள், அங்கீகரிக்கப்பட்ட மறுவாழ்வு மையங்கள் தன்னார்வ அமைப்புகள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளன.

## போதைக்கு எதிரான போர்

### கல்வி நிலையங்கள்

ஆண்டுக்கு ஒருமுறை ஜூன் 26 ஆம் தேதி (உலக போதை ஒழிப்பு தினம்) அன்று ஒரு விழிப்பு உணர்வு நிகழ்ச்சியையோ, ஊர்வலத்தையோ நடத்துவது மட்டும் போதாது. பள்ளிப் பாடத்துடன், ஒழுக்கக் கல்வியை இணைத்து தொடர்ந்து கற்பிக்க வேண்டும். மாணவர்களின் நடத்தை மாற்றங்களை ஆசிரியர்கள் கவனித்து உளவியல் ஆலோசகர்கள் துணையுடன் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்த வழிவகை செய்ய வேண்டும். கல்லூரிகளில் போதை எதிர்ப்பு மன்றங்கள், விளையாட்டு கலைக் குழுக்கள் வலுப்படுத்தப்பட வேண்டும். 'உண்மையான சுதந்திரம் என்பது தீமையை மறுக்கும் தைரியமே' என்பதை மாணவ மாணவிகளுக்கு ஊட்ட வேண்டும்.

### ஊடகங்கள்

மதுவை வீரமாகவும், புகைபிடிப்பை ஆண்மையாகவும் சினிமா போன்ற ஊடகங்கள் சித்திரிப்பது இளம் மனங்களைத் திசை திருப்பும் செயலாகும். 'மது வீட்டுக்கும் நாட்டுக்கும் கேடு' என்பன போன்ற எச்சரிக்கை வாசகத்தை விட போதை பற்றிய விழிப்பு உணர்வு கதைகள் ஏற்படுத்தும் உளவியல் தாக்கமே அதிகம். போதையிலிருந்து மீண்டவர்களின் உண்மைக் கதைகள், மருத்துவ நேர்காணல்கள் ஆகியவை ஊடகங்களால் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

### அரசு

குடிமக்களின் உயிர், உடல்நலம், கல்வி, பொருளாதாரம், சமூக ஒழுங்கைப் பாதுகாப்பதே நல்லாட்சியின் அடிப்படை நோக்கமாகும். போதைப் பொருட்கள் இந்த ஐந்து துறைகளையும் நேரடியாகப் பாதிப்பதால், அவற்றைத் தடுப்பது அரசின் முக்கியக் கடமைகளில் ஒன்றாகும்.

ஒரு மக்கள் நல அரசு, போதைப் பழக்கத்தைத் தடுப்பதில் மூன்று முக்கியப் பொறுப்புகளைச் சமநிலையுடன் நிறைவேற்ற வேண்டும்.

1. மது உள்ளிட்ட போதைப் பொருட்கள் ஏற்படுத்தும் தீமைகளை மக்களிடம் தொடர்ந்து எடுத்துரைத்து, தடுப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

2. போதைப் பொருட்களின் உற்பத்தி, கடத்தல், சட்டவிரோத விற்பனையைத் தடுக்க வேண்டும்.

3. போதைப் பழக்கத்திற்கு அடிமை யானவர்களுக்கு உரிய மருத்துவச் சிகிச்சை, மறுவாழ்வு வழங்கி அவர்களை மீண்டும் சமூகத்தில் இணைக்க வேண்டும்.

இந்த மூன்று நோக்கங்களும் சமநிலை யுடன் செயல்படுத்தப்பட்டால்தான் முழுமை யான வெற்றியை அடைய முடியும். ஆனால் நடைமுறையில் பல இடங்களில் சட்ட அமலாக்கமும் சிகிச்சை நடவடிக்கை களும் அதிகக் கவனம் பெறுகின்றன; அதே நேரத்தில், தடுப்பு விழிப்பு உணர்வு, ஆரம்ப கட்டத் தலையீடுகளுக்கு போதிய முன்னுரிமை வழங்கப்படவில்லை. இந்த நிலை மாற வேண்டும்.

## மது விலக்கு சாத்தியமா?

சவூதி அரேபியா, குவைத் உள்ளிட்ட பல நாடுகளில் போதைக்கு முழுத் தடை உள்ளது; வெளிநாடுகளிலிருந்து இந்நாடு களுக்குப் போதைப்பொருள் கொண்டு வந்தால் அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும். இன்னும் சில நாடுகள் கட்டுப்படுத்தப்பட்ட விற்பனை, அதிக வரி, விளம்பரத் தடை ஆகியவற்றைப் பின்பற்று கின்றன.

வரலாற்றைப் பார்க்கும் போது அமெ ரிக்கா, பின்லாந்து, நார்வே, ஐஸ்லாந்து போன்ற பல மேற்குலக நாடுகள் ஒரு காலத் தில் (1920-1930களில்) தேசிய அளவில் முழுமையான மதுவிலக்கை அமல்படுத்தி யிருந்தன. ஆனால் சட்ட விரோத உற்பத்தி, கள்ளச்சந்தை, குற்றச்செயல்கள், போன்ற காரணங்களால் பின்னர் அந்த நாடுகள் தங்களது கொள்கைகளை மாற்றிக் கொண்டன.

இதனால் மதுவிலக்குக் கொள்கையினால் எவ்வித பலனும் இல்லை. அது நீர்த்துப்போன கொள்கை; நடைமுறைக்குச் சாத்தியமில்லாத ஒன்று என்ற வாதம் முன்வைக்கப்படு கின்றது. அதற்கு முன் வைக்கப்படும் முக்கிய காரணம்:

மது விலக்கை அமல்படுத்தினால், மக்கள் கள்ளச் சாராயத்தையும், விஷச்சாராயத்தை யும் நாடுவார்கள் (சாராயம் என்பதே விஷம் தான் என்பதை இங்கே மறந்து விட்டனர்.)

ஆனால் இவை உண்மையல்ல. விஷச் சாராய படுகொலைகளுக்கும் மது விலக்குக் கொள்கைகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என ஆய்வுகள் கூறுகின்றன.

ஏனெனில் மது சட்டபூர்வமாக விற்பனை செய்யப்பட்டு வரும் உலகின் பல நாடு களிலும் சட்டவிரோதமாக மது தயாரிக்கப் பட்டுள்ளது. இன்னும் இது போன்ற கள்ளச் சாராயத்தில் மெத்தனால்(Methanol) கலக்கப் பட்டுள்ள நிகழ்வுகளும் நடந்து உள்ளது. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தும் உள்ளனர். (பார்க்க: https://pmc.ncbi.nlm.nih.gov/articles/PMC8303512/pdf/foods-10-01625.pdf )

விஷச்சாராயப் பிரச்னை என்பது சட்ட விரோத உற்பத்தி, போலி விற்பனை, பலவீனமான கண்காணிப்பு ஆகியவற்றோடு தொடர்புடைய உலகளாவிய பொது சுகா தாரப் பிரச்னையாகும். மெத்தனால் போன்ற எரிசராயத்தைக் கலப்பதால் பார்வையிழப்பு, நிரந்தர ஊனம், மரணம் போன்ற கடுமையான விளைவுகள் ஏற்படுகின்றன என்றால் அரசு நடத்தும் மதுக் கடைகளில் விற்கப்படுவது பாலோ தேனோ அல்ல அவையும் விஷமே! அவற்றால் ஏற்படும் நோய்களின் - மரணங்கள் பட்டியலை முன் பகுதியில் ஏற்கனவே விளக்கி விட்டோம்.

மதுவிலக்கு வெற்றிபெற தெளிவான சித்தாந்தம், பொதுமக்கள் ஒத்துழைப்பு, சமூக விழிப்பு உணர்வு, நீண்டகாலக் கொள்கை நோக்கம் அவசியம். சட்டம் மட்டும் போதாது.

# 3 போதை ஒழிப்பில் இஸ்லாத்தின் வெற்றி

*இஸ்லாம் வெறும் வழிபாடு அல்ல; உடல், மனம், அறிவு, குடும்பம், பொருளாதாரம், சமூகம் அனைத்தையும் பாதுகாக்கும் வாழ்வியல் நெறி. ஒரு சமூகத்தின் நம்பிக்கை, உயிர், அறிவு, பரம்பரை, செல்வம் ஆகிய ஐந்தையும் போதை நேரடியாகப் பாதிக்கிறது.*

## மனித உடல் - இறைவனின் அமானிதம்

இஸ்லாம் மனிதனின் உடலை இறைவனால் ஒப்படைக்கப்பட்ட அமானிதம் (பொறுப்பு) என்று கருதுகிறது. மனிதன் தனது உடலை விருப்பம்போல் அழித்துக் கொள்ளும் உரிமை அவனுக்கு இல்லை. அதைப் பாதுகாப்பதும் ஆரோக்கியமாக வைத்திருப்பதும் இறைவன் வழங்கிய பொறுப்பாகும்.

அதனால்தான் திருக்குர்ஆன் கூறுகிறது: ‘உங்களை நீங்களே மாய்த்துக்கொள்ளாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது பேரருளாளனாக இருக்கின்றான்.’ (திருக் குர்ஆன் 4:29)

இந்த வசனம் தற்கொலையை மட்டுமல்ல; மனிதனை மெதுவாக அழிக்கும் எந்தவொரு செயலையும் தவிர்க்க வேண்டும் என்ற பரந்த வழிகாட்டுதலையும் வழங்குகின்றது.

போதை ஒழிப்பு முறையை படிப்படியான அணுகுமுறையாக திருக்குர்ஆன் கையாண்டுள்ளது.

## முதல் நிலை - சிந்திக்க வைத்தது

முதலில் திருக்குர்ஆன் மனிதர்களின் சிந்தனையைத் தூண்டியது; மதுவின் தீமையை அவர்களின் உள்ளத்தில் உணரச் செய்தது.

‘மது மற்றும் சூதாட்டம் குறித்து உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறுவீராக: அவ்விரண்டிலும் பெரும் பாவம் இருக்கிறது. மக்களுக்குச் சில பயன்களும் அவற்றில் உள்ளன. எனினும், அவற்றின் பாவம் அவற்றின் பயனைவிட மிகப் பெரியதாகும்.’ (திருக் குர்ஆன் 2:219)

இந்த வசனம் உடனடியாக மதுவைத் தடை செய்யவில்லை. ஆனால் ஒரு முக்கியமான சிந்தனையை உருவாக்கியது: ‘சில பயன்கள் இருக்கலாம்; ஆனால் அவற்றால் ஏற்படும் தீமை அதைவிட மிக அதிகமானது’

## இரண்டாம் நிலை - தொழுகையின் வழியாக மாற்றத்தைத் தொடர்ந்தது

அடுத்த கட்டத்தில், திருக்குர்ஆன் தொழுகை என்னும் ஒழுங்கான ஆன்மிகப் பயிற்சியின் மூலம் போதையிலிருந்து மனிதனை விலக்குவதற்கான வழியை அமைத்தது.

‘இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் என்ன கூறுகிறீர்கள் என்பதை அறியாத அளவிற்குப் போதையிலிருக்கும் நிலையில் தொழுகையை நெருங்காதீர்கள்’ (திருக் குர்ஆன் 4:43)

இந்த வசனம் இரண்டு முக்கியமான செய்திகளை வழங்குகிறது:

இறைவனை வணங்குவதற்கு மனிதன் முழுமையான அறிவுத் தெளிவுடன் இருக்க வேண்டும்.

போதை மனிதனின் சிந்தனை, நினைவாற்றல், உணர்வுத் தெளிவைப் பாதிக்கிறது.

## மூன்றாம் நிலை - முழுமையான தடை

இறுதியில் திருக்குர்ஆன் தெளிவான

கட்டளையின் மூலம் மதுவிற்கும் சூதாட்டத் திற்கும் முற்றுப்புள்ளி வைத்தது.

'இறைநம்பிக்கை கொண்டவர்களே! மது, சூதாட்டம், பலிபீடங்கள், குறிபார்க்கும் அம்புகள் ஆகியவை அருவருக்கத்தக்க ஷைத் தானியச் செயல்களாகும். எனவே, அவற் றைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்; அதன் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.' (திருக்குர்ஆன் 5:90)

இந்த இறை வசனம் அருளப்பட்ட உடன், நபித்தோழர்கள் 'நாங்கள் விலகிக் கொண்டோம்' என்று உடனே ஏற்று, மதீனா தெருக்களில் மதுவைக் கொட்டினார்கள்.

இஸ்லாம் போதையின் அனைத்து வாசல்களையும் இழுத்து மூடிவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறி னார்கள்: 'அறிவை மயக்கும் ஒவ்வொரு பொருளும் போதையாகும்; போதைகள் அனைத்தும் தடைசெய்யப்பட்டவையாகும்.' (நூல்: முஸ்லிம்)

இங்கு போதை என்பது திராட்சை மதுவை மட்டும் குறிக்கவில்லை. மனித னின் அறிவையும் பகுத்தறிவையும் சுய கட்டுப்பாட்டையும் இழக்கச் செய்யும் கஞ்சா, ஹெராயின், கோகைன், ஓபியம், மெத்தாம் பெட்டமின் ஆகிய அனைத்தும் இந்த நபிமொழியின் அடிப்படையில் தடை செய்யப்பட்டவையாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி னார்கள்: 'ஒரு பொருளை அதிக அளவில் உட்கொண்டால் போதை ஏற்படும் எனில், அதன் சிறிய அளவும் தடைசெய்யப்பட்ட தாகும்' (நூல்: அபூதாவூத், திர்மிதி)

நான் சிறிதளவு மட்டுமே அருந்துகிறேன். எனக்குப் போதை ஏறாது. என்று சிலர் கூறு வார்கள்.

ஆனால் இஸ்லாம் அளவை அடிப்படை யாகக் கொள்ளவில்லை; பொருளின் இயல் பையும் அதன் போதைத் தன்மையையுமே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

'மது பத்து வகைகளில் சபிக்கப்பட் டுள்ளது: மது, அதைப் பிழிபவர், யாருக்காக அது பிழியப்படுகிறதோ அவர், அதை விற் பவர், அதை வாங்குபவர், அதைச் சுமந்து செல்பவர், யாருக்காக அது சுமந்து செல் லப்படுகிறதோ அவர், அதன் விலையைப் பயன்படுத்துபவர், அதைக் குடிப்பவர், அதை ஊற்றிக் கொடுப்பவர்.' (நூல்: இப்னு மாஜா)

இந்த நபிமொழி இஸ்லாத்தின் சமூகப் பொறுப்பு உணர்வை வெளிப்படுத்துகிறது. இன்று உலகம் முழுவதும் போதைப் பொருள் விற்பனை பல பில்லியன் டாலர் மதிப்புள்ள சட்டவிரோத வணிகமாக வளர்ந்துள்ளது. உற்பத்தி, விற்பனை, வாங்குதல், சுமத்தல், ஊற்றிக் கொடுத்தல் உள்ளிட்ட பத்து தரப்பினரும் சபிக்கப்பட்டுள்ளனர்.

**மது, அதைப் பிழிபவர், யாருக்காக அது பிழியப்படுகிறதோ அவர், அதை விற்பவர், அதை வாங்குபவர், அதைச் சுமந்து செல்பவர், யாருக்காக அது சுமந்து செல்லப்படுகிறதோ அவர், அதன் விலையைப் பயன்படுத்துபவர், அதைக் குடிப்பவர், அதை ஊற்றிக் கொடுப்பவர் ஆகியோர் சபிக்கப்பட்டவர்கள்.**

## மதுவை அன்பளிப்பாக வழங்கலாமா?

ஒருவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மதுவை அன்பளிப்பாகக் கொண்டு வந்தார். அப்போது நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள்:

‘அல்லாஹ் இதனைத் தடை செய்து விட்டான்’ என்று கூறினார்கள். அதற்கு அவர்: ‘அப்படியானால், இதை விற்றுவிடலாமா?’ என்று கேட்டார். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள்: ‘அதனை அருந்துவதைத் தடை செய்த இறைவனே, அதனை விற்பதையும் தடை செய்துள்ளான்’ என்று பதிலளித்தார்கள். அதன் பிறகு, அந்த மனிதர் மதுவைக் கொட்டிவிட்டார். (நூல்: அபூதாவூத், திர்மிதி)

இந்த நிகழ்வு ஒருவர் மதுவை அருந்தாமல் இருப்பது மட்டும் போதாது; அதை அன்பளிப்பாக வழங்குதல், விற்பனை செய்தல் அல்லது அதன் மூலம் இலாபம் ஈட்டுதல் போன்ற செயல்களும் அனுமதிக்கப்படுவதில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

## போதையில் மருந்து உள்ளதா?

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கப்படும் ஒரு முக்கியமான வழிகாட்டல்:

‘அல்லாஹ் உங்களுடைய நிவாரணத்தை, உங்களுக்குத் தடைசெய்யப்பட்ட பொருட்களில் அமைக்கவில்லை.’ (நூல்: அபூதாவூத் பிற நபிமொழித் தொகுப்புகள்)

இதன் பொருள் தடைசெய்யப்பட்ட பொருட்களை ஒருவர் தன்னிச்சையாக மருந்து என்று கருதி பயன்படுத்தக் கூடாது என்பதாகும். ஒரு பொருள் மருத்துவ ரீதியாகத் தேவையா, மாற்று மருந்து உள்ளதா, எந்த அளவு பயன்படுத்தப்பட வேண்டும் என்பவற்றைத் தகுதியான மருத்துவர்களே அறிவியல் அடிப்படையில் தீர்மானிக்க வேண்டும்.

## சட்ட நடவடிக்கை

போதைப் பொருளைத் தடை செய்ததோடு மட்டுமல்லாமல் அந்தத் தடையை நடைமுறை வாழ்க்கையில் எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்பதையும் இஸ்லாம் வழிகாட்டியுள்ளது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும், அவர்களுக்குப் பின் வந்த ஆட்சியாளர்களும் இதற்கான நடைமுறை




**நூல் கிடைக்குமிடம் :**

இஸ்லாமிய நிறுவனம்
அறக்கட்டளை (IFT).
138, IFT லேன்,
பெரம்பூர் நெடுஞ்சாலை,
சென்னை - 12.
தொடர்புக்கு : 8668057596
விலை : ரூ. 75

எடுத்துக்காட்டுகளை உலகிற்கு வழங்கியுள்ளனர்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மது அருந்தியவருக்கு பேரீச்ச மரக்கிளைகளாலும் காலணிகளாலும் சுமார் நாற்பது அடிகள் தண்டனை வழங்கினார்கள். (நூல்: முஸ்லிம்)

இரண்டாம் கலீஃபா உமர்(ரலி) அவர்களின் காலத்தில் இந்தத் தண்டனையின் அளவு அதிகரிக்கப்பட்டது. ஒருவன் மது அருந்தினால் போதையில் உளறுவான்; உளறினால் பொய்யாக அவதூறு கூறுவான். எனவே அவதூறுக்குரிய தண்டனையைப் போல எண்பது அடிகள் வழங்கலாம் என்று அலீ(ரலி) அவர்கள் ஆலோசனை வழங்கினார்கள். அதை ஏற்றுக்கொண்டு உமர்(ரலி) அவர்கள் எண்பது அடிகள் வழங்க உத்தரவிட்டார்கள்.

## இஸ்லாம் வழங்கும் தீர்வு

- மனிதனின் உள்ளத்தை இறைநம்பிக்கையால் வலுப்படுத்த வேண்டும்.
- குடும்பத்தை அன்பால் பாதுகாக்க வேண்டும்.
- சமூகத்தை ஒழுக்கத்தால் கட்டியெழுப்ப வேண்டும்.
- சட்டத்தை நீதியுடன் செயல்படுத்த வேண்டும்.
- நோயுற்றவர்களுக்கு உரிய சிகிச்சையும் மறுவாழ்வும் வழங்க வேண்டும்.
- இளைஞர்களுக்கு இலட்சியமிக்க வாழ்க்கைப் பாதையை உருவாக்க வேண்டும்.
- நன்மையை ஏவி தீமையை தடுத்துக் கொண்டு இருக்க வேண்டும்.

இதுவே போதையற்ற சமூகத்தை உருவாக்கும் நிலையான வழியாகும்.



# போதையில்லா உலகு சமைப்போம்!

● S. சாகுல் ஹமீது

மது போதை என்பது ஆல்கஹால் (Alcohol) கலந்த பானங்களை அருந்துவதன் மூலம் மனிதனின் மூளை, நரம்பு மண்டலம், சிந்தனை, உணர்வு, பேச்சு, நடத்தை, முடிவெடுக்கும் திறன் ஆகியவை பாதிக்கப்படும் ஒரு நிலையாகும். இது வெறும் குடிப்பழக்கம் மட்டுமல்ல; உடல், மனம், குடும்பம், சமூகம், பொருளாதாரம் ஆகிய அனைத்தையும் மெதுவாகச் சீரழிக்கும் ஒரு சமூகப் பேரிடராகும்.

### மனித குலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் மது, போதை

மது மனித குலத்திற்கு நன்மையைவிட தீமையையே அதிகமாக ஏற்படுத்துகிறது. மது அருந்துவதை ஆதரிப்பவர்கள் மகிழ்ச்சிக்காக, மன அழுத்தம் குறைய, நட்பை வளர்க்க, கொண்டாட்டத்தின் ஒரு பகுதி என்று பல காரணங்களைக் கூறலாம். ஆனால் அவை அனைத்தும் தற்காலிக உணர்வுகள் மட்டுமே. அதற்குப் பின்னால் ஏற்படும் பாதிப்புகள் நீண்ட காலமும், பல நேரங்களில் ஈடு செய்ய முடியாதவையும் ஆகும்.

### உடல்நலத்தில்..!

மது மனித உடலின் முக்கிய உறுப்புகளான கல்லீரல், இதயம், மூளை, கணையம், நரம்பு மண்டலம் போன்றவற்றைப் பாதிக்கிறது. கல்லீரல் சிதைவு(Liver Cirrhosis), பல்வேறு வகையான புற்றுநோய்கள், உயர் இரத்த அழுத்தம், பக்கவாதம் போன்ற நோய்களின் அபாயத்தை அதிகரிக்கிறது.

### மனநலத்தில்..!

மது மன அமைதியைத் தருவதுபோல் தோன்றினாலும், நீண்டகாலத்தில் மனச்சோர்வு, பதட்டம், கோபம், நினைவாற்றல் குறைவு, தற்கொலை எண்ணம் போன்ற கடுமையான மனநலப் பிரச்னைகளை உருவாக்குகிறது.

### குடும்பத்தில்..!

ஒரு குடிகாரனால் அதிகம் பாதிக்கப்படுவது அவரது குடும்பமே. குடும்ப வருமானம் வீணாகிறது. கணவன்-மனைவி உறவில் விரிசல் ஏற்படுகிறது. குழந்தைகளின் கல்வி, எதிர்காலம், மனநலம் பாதிக்கப்படுகிறது. குடும்ப வன்முறையின் முக்கிய காரணிகளில் மதுவும் ஒன்றாகும்.

### சமூகத்தில்..!

சாலை விபத்துகள், கொலை, பாலியல் வன்முறை, சண்டை, பொது அமைதிக்குக் குந்தகம், வேலை இழப்பு, குற்றச்செயல்கள் போன்ற பல சமூகப் பிரச்னைகளில் மதுவின் தாக்கம் குறிப்பிடத்தக்கது.

### பொருளாதாரத்தில்..!

ஒருவர் மதுவுக்குச் செலவிடும் பணம் அவரது குடும்பத்தின் உணவு, கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படைத் தேவைகளிலிருந்து பறிக்கப்படுகிறது. அரசுக்கு

வருமானம் கிடைத்தாலும், மதுவால் ஏற்படும் சிகிச்சைச் செலவுகள், விபத்துகள், சட்டம் ஒழுங்கு பராமரிப்பு போன்றவற்றுக்கான செலவுகள் மிக அதிகம்.

### ஏன் மதுவை மக்கள் நாடுகிறார்கள்?

மனிதன் பிறக்கும்போதே மதுப் பழக்கத்துடன் பிறப்பதில்லை. சூழல், மனநிலை, சமூக அழுத்தம், தவறான நம்பிக்கைகள், எளிதில் கிடைக்கும் வாய்ப்பு ஆகியவையே ஒருவரை மதுவை நோக்கி இழுத்துச் செல்கின்றன. பெரும்பாலானோர் மதுவை நாடுவதற்குக் காரணம் அதன் சுவை அல்ல; அவர்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சில சூழ்நிலைகளே.

நண்பர்களின் அழுத்தம்(Peer Pressure) இளைஞர்கள் மத்தியில் மதுப் பழக்கம் தொடங்குவதற்கான மிகப்பெரிய காரணங்களில் ஒன்று. ஒரு முறை குடித்தால் என்ன, ஆண்மையின் அடையாளம், கூட்டத்தோடு ஒத்துப்போக வேண்டும் போன்ற வார்த்தைகள் பலரை முதல் முறையாக மதுவைத் தொடச் செய்கின்றன.

மன அழுத்தத்திலிருந்து தப்பிக்க, வேலைப் பளு, குடும்பப் பிரச்னை, பொருளாதார நெருக்கடி, தோல்வி, தனிமை, மன வேதனை போன்றவற்றிலிருந்து தற்காலிகமாகத் தப்பிக்க சிலர் மதுவை நாடுகிறார்கள். ஆனால் மது பிரச்னையைத் தீர்ப்பதில்லை; மாறாக புதிய பிரச்னைகளை உருவாக்குகிறது. ஒரு முறை சுவைத்துப் பார்ப்போம் என்ற ஆர்வம் பலரின் முதல் தவறாகிறது. அந்த ஒரு முறை பலருக்கு வாழ்நாள் முழுவதும் தொடரும் பழக்கமாக மாறிவிடுகிறது.

நேரடியாக மதுவை விளம்பரப்படுத்த முடியாவிட்டாலும் திரைப்படங்கள், இணையத் தொடர்கள், சமூக ஊடகங்கள் ஆகியவற்றில் மது அருந்துவதை நாகரிகம், வெற்றி, மகிழ்ச்சி, ஆண்மை அல்லது உயர்ந்த வாழ்க்கையின் அடையாளமாகக் காட்டும் காட்சிகள் இளைஞர்களிடம் தவறான எண்ணத்தை ஏற்படுத்துகின்றன.

மதுக்கடைகள் அதிகமாக இருப்பது, சட்டரீதியாக விற்பனை செய்யப்படுவது, சமூகத்தில் அதை சாதாரணமாக ஏற்றுக்கொள்ளும் மனநிலை ஆகியவை மதுப் பழக்கத்தை அதிகரிக்கின்றன.

வீட்டிலேயே மது அருந்தும் பழக்கம் இருந்தால் குழந்தைகள் அதை இயல்பான ஒன்றாகக் கருதும் அபாயம் உள்ளது. பல ஆய்வுகள், குடும்பச் சூழல் மதுப் பழக்கத்தில் முக்கிய பங்கு வகிப்பதைக் காட்டுகின்றன. சிலர் மது குடித்தால் மன அழுத்தம் குறையும். தூக்கம் நன்றாக வரும். சோர்வு நீங்கும், தன்னம்பிக்கை அதிகரிக்கும் என்று நம்புகிறார்கள். ஆனால் இவை அறிவியல் அடிப்படையில் தவறான நம்பிக்கைகள். மது சிறிது நேரம் மயக்கத்தைத் தரலாம்; ஆனால் நீண்ட காலத்தில் மன அழுத்தத்தையும் உடல் நலக் கோளாறுகளையும் அதிகரிக்கிறது.

திருமணம், நண்பர்கள் சந்திப்பு, பிறந்த நாள் விழா, விருந்து போன்ற நிகழ்ச்சிகளில் மது அருந்துவது ஒரு கலாச்சாரம் போல சில இடங்களில் உருவாக்கப்பட்டுள்ளது. இது புதியவர்களையும் மதுப் பழக்கத்திற்கு இழுக்கிறது.

மன அழுத்தத்திற்குத் தீர்வு - ஆலோசனை, குடும்ப ஆதரவு, இறைநம்பிக்கை, உடற்பயிற்சி.

தனிமைக்குத் தீர்வு - நல்ல நண்பர்கள், சமூக உறவுகள்.

தோல்விக்குத் தீர்வு - மீண்டும் முயற்சி செய்வது.

துயரத்திற்குத் தீர்வு - பொறுமை, நம்பிக்கை, உதவி நாடுதல்.

மது, துயரத்திலிருந்து விடுதலை தருவதில்லை புதிய துயரங்களுக்கே கதவைத் திறக்கிறது.

### மது இல்லாமல் வாழ முடியாதா?

நிச்சயமாக வாழ முடியும். உலகில் கோடிக்கணக்கான மக்கள் வாழ்நாள் முழுவதும் மதுவைத் தொடாமலேயே ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும், வெற்றிகரமாகவும் வாழ்ந்து வருகிறார்கள். உணவு,

தண்ணீர், காற்று, தூக்கம் போன்றவை வாழ்க்கைக்குத் தேவையானவை. ஆனால் மது என்பது மனிதன் உருவாக்கிய ஒரு பழக்கம் மட்டுமே; அது வாழ்க்கைக்குத் தேவையான பொருள் அல்ல.

மது அருந்தாமல் இருப்பதால் உடலில் எந்தக் குறைபாடும் ஏற்படாது. மாறாக மது இல்லாத வாழ்க்கையே நல்ல உடல்நலத்தை, தெளிவான சிந்தனையை, நீண்ட ஆயுளை, மன அமைதியை, குடும்ப மகிழ்ச்சியை வழங்குகிறது.

தொடர்ந்து மது அருந்துபவர்களுக்கு, ஒரு கட்டத்தில் உடலும் மனமும் அதற்கு அடிமையாகி விடுகின்றன. அப்போது மது இல்லாமல் வாழ முடியாது என்று தோன்று கிறது. உண்மையில் அவரால் வாழ முடியா தது மதுவின்றி அல்ல! மதுவின் அடிமைத் தனத்திலிருந்து விடுபட முடியாமல் இருப் பதால்தான். அடிமைத்தனம் ஒரு நோய். அதற்குச் சரியான சிகிச்சை, ஆலோசனை, குடும்ப ஆதரவு, உறுதியான மனவலிமை இருந்தால் அதிலிருந்து மீண்டு வர முடியும்.

மது அருந்துவதை நிறுத்தினால் உடல் நலம் மேம்படும். கல்லீரல் உள்ளிட்ட உறுப்பு களின் பாதிப்பு குறையும். மனநலம் சீராகும். குடும்ப உறவுகள் வலுப்பெறும். பொருளா தாரம் மேம்படும். குழந்தைகளின் எதிர்காலம் பாதுகாக்கப்படும். சமூக மரியாதை உயரும்.

பலர் மதுவை விட்டுவிட்டு புதிய வாழ்க் கையைத் தொடங்கியுள்ளனர். ஒரு காலத் தில் மதுவுக்கு அடிமையாக இருந்த ஆயிரக் கணக்கானோர் இன்று மருத்துவ சிகிச்சை, மறுவாழ்வு மையங்கள், குடும்ப ஆதரவு, மன உறுதியின் மூலம் மதுவை முழுமையாக விட்டுவிட்டு நல்ல வாழ்க்கை வாழ்கின்றனர். மது இல்லாமல் வாழ முடியாது என்பது உண்மையல்ல. மது இல்லாமலும் சிறப்பாக வாழ முடியும் என்பதே உண்மை.

### தமிழக அரசு ஏன் மதுவை விற்கிறது?

தமிழகத்தில் மதுபானங்களின் சில்லறை விற்பனையை அரசு நிறுவனமான TAS-MAC மூலம் மேற்கொள்கிறது. 2003 முதல் சில்லறை விற்பனை உரிமை அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. மது விற்பனை யிலிருந்து அரசுக்கு கணிசமான வருவாய் கிடைக்கிறது. இந்த வருவாய் மூலம் நலத் திட்டங்கள், உள்கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற பல்வேறு அரசுச் செலவுகளுக்கு நிதி கிடைக்கிறது என்று அரசு விளக்குகிறது. தமிழக அரசின் வருவாயில் மது வரி, மது விற்பனை முக்கிய பங்காற்றுவதாக பொருளாதார ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

அரசின் வாதப்படி மது விற்பனையை தனியாரிடம் விட்டால் கட்டுப்பாடற்ற போட்டி, அதிக விற்பனை, சட்டவிரோத விற்பனை அதி கரிக்கலாம். அதனால் அரசே நேரடியாக விற்பனை செய்தால் கண்காணிக்க எளிதாக இருக்கும் என்று கூறப்படுகிறது. தரமற்ற, உயி ருக்கு ஆபத்தான கள்ளச்சாராயம் பரவாமல் தடுக்க, அரசின் கட்டுப்பாட்டில் தரநிலையுடன் விற்பனை செய்வது ஒரு காரணமாகக் கூறப்படு கிறது.

ஆனால் அரசின் வருவாயைவிட மது வால் ஏற்படும் மருத்துவச் செலவுகள், விபத்துகள், உற்பத்தித் திறன் இழப்பு, குடும்பச் சீரழிவு போன்ற சமூகச் செலவுகள் அதிகமாக இருப்பதை பல ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. குடும்ப வன்முறை, சாலை விபத்துகள், வறுமை, உடல்நலப் பாதிப்புகள் போன்றவை மதுவுடன் தொடர் புடைய முக்கிய சமூகப் பிரச்னைகளாக உள்ளன. எனவே அரசுக்கு வருமானம் கிடைக்கிறது என்பதாலேயே மது விற்பனை நியாயப்படுத்தப்படுமா என்ற விவாதம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தமிழக அரசு மதுவை விற்பதற்குக் கூறும் காரணங்கள் வருவாய், கட்டுப்பாடு, கள்ளச் சாராயத் தடுப்பு என்பவையாகும். ஆனால் ஒரு சமூக நலக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, அரசின் பொருளாதாரத் தேவையும், மக்களின் உடல்நலம், குடும்ப நலனும் சமநிலைப்படுத்தப்பட வேண்டிய அவசியம் உள்ளது. இதனால்தான் பல சமூக இயக்கங்கள், மத அமைப்புகள்,

மருத்துவர்கள், பொதுமக்கள் மதுவிலக்கு அல்லது மதுப் பயன்பாட்டைக் குறைக்கும் கொள்கைகளை வலியுறுத்தி வருகின்றனர். ஓர் அரசின் உண்மையான செல்வம் அதன் கருவூலத்தில் குவியும் வருவாய் அல்ல; ஆரோக்கியமாகவும், ஒழுக்கமாகவும், நிம்மதியாகவும் வாழும் மக்களே அதன் மிகப்பெரிய செல்வம்.

### மதுப் பழக்கத்திற்கு மருத்துவத் தீர்வு

ஒரு மாத்திரை சாப்பிட்டால் உடனே குணமாகிவிடும் நோய் அல்ல இது. மதுவுக்கு அடிமையாதல் என்பது மருத்துவம், உளவியல், குடும்ப ஆதரவு, சமூக ஒத்துழைப்பு ஆகிய அனைத்தும் இணைந்து சிகிச்சையளிக்க வேண்டிய ஒரு நிலையாகும். மது அருந்துபவரை வெறுக்க வேண்டாம் மதுப் பழக்கத்தை வெறுக்க வேண்டும். அவரைத் தண்டிப்பதைவிட, சிகிச்சை அளித்து மீட்டெடுப்பதே சிறந்த தீர்வு. முதலில், மதுவை விட்டுவிட வேண்டும் என்ற மன உறுதி தேவை. எந்தச் சிகிச்சையும் பலன் தர வேண்டுமானால், நான் இந்தப் பழக்கத்திலிருந்து வெளியே வர வேண்டும் என்ற எண்ணம் முதலில் வர வேண்டும். மாற்றத்தின் முதல் மருந்து மன உறுதியே. மருத்துவரின் ஆலோசனையைப் பெற வேண்டும்.

### ஆன்மிக, ஒழுக்க வழிகாட்டுதல்

இறைநம்பிக்கை, தொழுகை, துஆ, நல்லொழுக்கம், குடும்பப் பொறுப்பு போன்றவை பலருக்கு மதுப் பழக்கத்திலிருந்து விலக மனவலிமையை அளிக்கின்றன. மதுவுக்கு அடிமையான மனிதனுக்குத் தேவை தீர்ப்பு அல்ல சிகிச்சை. வெறுப்பு அல்ல வழிகாட்டுதல். புறக்கணிப்பு அல்ல மறுவாழ்வு.

சரியான மருத்துவச் சிகிச்சை, உளவியல் ஆலோசனை, குடும்ப ஆதரவு, சமூக ஒத்துழைப்பு, உறுதியான மனவலிமை இருந்தால் ஆயிரக்கணக்கானோர் மீண்டது போல யாரும் மீண்டு வர முடியும். ஒருவர் மதுவை விட்ட நாளே அவரது உடல்நலம் மீளத் தொடங்குகிறது; குடும்பத்தின் நம்பிக்கை மலரத் தொடங்குகிறது; குழந்தைகளின் எதிர்காலம் மீண்டும் ஒளிரத் தொடங்குகிறது.

### இஸ்லாம் ஏன் மதுவைத் தடை செய்கிறது?

இஸ்லாம் மதுவைத் தடை செய்திருப்பது மனிதனின் சுதந்திரத்தைப் பறிப்பதற்காக அல்ல; மாறாக மனிதனின் உயிர், அறிவு, குடும்பம், செல்வம், சமூகத்தைப் பாதுகாப்பதற்காக ஆகும். இஸ்லாமிய மார்க்கத்தின் உயர்ந்த நோக்கங்களில் ஒன்று மனித அறிவைப் பாதுகாப்பது. மனிதனை மற்ற படைப்புகளிலிருந்து உயர்த்துவது அவனுடைய பகுத்தறிவாகும். அந்த அறிவை மழுங்கடிக்கும் எந்தப் பொருளும் இஸ்லாத்தில் ஏற்றுக்கொள்ளப்படாது.

இஸ்லாம் மதுவைத் தடை செய்ததன் பின்னணியில் ஆழமான மனிதநேயக் காரணங்கள் உள்ளன. அறிவைப் பாதுகாக்க; உயிரைக் காக்க; குடும்பத்தைப் பாதுகாக்க; பெண்களின் கண்ணீரைத் துடைக்க; குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாதுகாக்க; சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்ட; எனவே மதுவிலக்கு என்பது வெறும் மார்க்கக் கட்டளை மட்டுமல்ல; மனிதகுல நலனுக்கான ஒரு முழுமையான வாழ்க்கை வழிகாட்டுதலாகும்.

இன்று உலகம் மருத்துவ ஆய்வுகள், சமூக அறிவியல், பொருளாதார ஆய்வுகள் மூலம் மதுவின் தீமைகளை உணர்ந்து வருகிறது. ஆனால் பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பே இஸ்லாம், மனித அறிவையும், குடும்பத்தையும், சமூகத்தையும் பாதுகாக்கும் நோக்கில் மதுவைத் தடை செய்து மனிதகுலத்திற்கு ஒரு நிலையான வழிகாட்டுதலை வழங்கியது.

மது இல்லாத ஒரு சமூகத்தை உருவாக்குவது ஒரு கனவு அல்ல. அது நம் தலைமுறைக்கான கடமை. ஒரு துளி மதுவால் ஒரு குடும்பத்தின் சிரிப்பு கண்ணீராக மாறக் கூடாது. ஒரு பாட்டில் மதுவுக்காக ஒரு குழந்தையின் கல்வி பறிபோகக் கூடாது. ஒரு கணவனின் மதுப் பழக்கத்தால் ஒரு மனைவியின் வாழ்க்கை சிதறிப் போகக் கூடாது. ஒரு தந்தையின் போதையால் ஒரு குழந்தையின் எதிர்காலம் இருளடையக் கூடாது.

# வங்கியல் துறையில் முத்திரை பதித்தவர்

# டாக்டர்.ஜே.சதக்கத்துல்லாஹ்



**எனது இனிய நண்பரும் இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) மூத்த அதிகாரியு மான டாக்டர் ஜே.சதக்கத்துல்லாஹ் 2026 ஜூலை 27ஆம் நாள் இறைவனிடம் மீண்டார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். (நாம் இறைவனிடமிருந்து வந்தோம். அவனிடமே மீளக் கூடியவர்களாக இருக்கின்றோம்)**

டாக்டர் சதக்கத்துல்லாஹ் பழகுவதற்கு இனிமையானவர். சென்னை மண்டல அலு வலகத்தின் பிராந்திய இயக்குநராகத் திறம்பட பணியாற்றியவர். கல்வி, பொது விழிப்பு உணர்வு தொடர்பாக அவரது பங்களிப்புக்கு எடுத்துக்காட்டாக செப்டம்பர் 2014ஆம் ஆண்டில் நிரந்தர டிஜிட்டல் நிதிக் கல்வி காட்சி யகத்தை நிறுவியதையும், மாணவர்களுக்கான மூன்று மாத நிதி, பொருளாதார பயிற்சித் திட் டங்களை அறிமுகப்படுத்தியதையும், சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக பல அமைப்பு களுடன் இணைந்து செயல்பட்டதையும் குறிப் பிடலாம்.

2010 முதல் 2013 வரை இந்திய ரிசர்வ் வங்கியின் முக்கிய பயிற்சி நிறுவனமான RESERVE BANK STAFF COLLEGE முதல்வராகப் பணியாற்றினார். பயிற்சி, கல்வித்துறையில் சிறந்த பங்காற்றினார். புனேவில் உள்ள COLLEGE OF AGRICULTURAL BANKING, EMIR-ATES INSTITUTE FOR BANKING AND FINAN-CIAL STUDIES ஆகிய நிறுவனங்களில் வங்கி அதிகாரிகள் நிதித்துறை நிபுணர்களுக்கு பயிற்சி அளித்தார்.

LOYOLA INSTITUTE FOR BUSINESS ADMIN-ISTRATION (LIBA) உள்ளிட்ட கல்வி நிறுவனங் களின் நிர்வாகக் குழுக்களில் பங்காற்றினார். சேமிப்பு, தொடர் வைப்பு, அடிப்படை வங்கிச் சேவைகள் போன்றவற்றை ஆடியோ விஷுவல் தொழில்நுட்பம் மூலமாகப் பொது மக்களுக்குப் புரியும் வகையில் இந்தியாவின் முதல் நிரந்தர டிஜிட்டல் நிதிக்கல்வி காட்சி யகத்தை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகித்தார். முதுகலை மாணவர்களின் நடை முறை ஆராய்ச்சித் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் மூன்று மாத கால நிதி, பொருளாதாரப் பயிற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தினார்.

தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களில் செயல்படும் பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்(NGO), சிறு கடன் நிறுவனங் களுடன் இணைந்து பாமர மக்களிடையே வங்கி, நிதிக்கல்வி பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்தினார். RBI சென்னை பிராந்திய இயக்குநராகப் பணியாற்றியபோது தமிழ் நாடு, புதுச்சேரி மாநிலங்களுக்கு உட்பட்ட பகுதிகளின் நிர்வாகத்தில் முத்திரை பதித்தார். சண்டிகர் பிராந்திய இயக்குநராகவும் பொறுப்பு வகித்துள்ளார். அந்தப் பொறுப்பில் இருந்த போது பஞ்சாப், ஹரியானா மாநிலங் களின் வங்கி, நிதி தொடர்பான நடவடிக்கை களை மேற்பார்வை இட்டார்.

### தீபக் மொஹந்தி குழுவின் சென்னை வருகை

2015ஆம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கி, நிதி உள்ளடக்கத்தை (Financal inclu-sion) மேம்படுத்துவதற்கான இடைக்கால செயல்திட்டத்தை உருவாக்குவதற்காக தீபக் மொஹந்தி தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இந்தக் குழுவினர் நாடு முழு வதும் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று வங்கி அதிகாரிகள், நிதி நிறுவனங்கள், சமூக அமைப்புக்கள், நிதி உள்ளடக்கத் துறையில் பணியாற்றும் நிறுவனங்களுடன் ஆலோ சனை நடத்தினர். அந்த வகையில் சென் னையில் 16.09.2015 அன்று ஆலோச னைக் கூட்டம் நடந்தது. டாக்டர். ஜே.சதக்கத் துல்லாஹ் அவர்களும் அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தார். அன்றைக்கு RBI கவர்ன ராக இருந்த Dr. ரகுராம் ராஜன் அவர்கள் ஜே.சதகத்துல்லாஹ் அவர்களுடன் இணைந்து எனது இல்லம் வருகை தந்து மேற்சொன்ன கூட்டத்தில் அவசியம் கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டதை இந்த நேரத்தில் நினைவு கூர்கின்றேன்.

ஐந்து ஆண்டுக்கான இடைக்கால நிதி உள்ளடக்கச் செயல்திட்டத்தை உருவாக்கு வதே தீபக் மொஹந்தி குழுவின் முக்கிய நோக்கமாகும். வட்டி இல்லாத நிதி முறை INTEREST FREE FINANCE, நிதி உள்ளடக்கம் தொடர்பான வாய்ப்புகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. இது இந்தியாவில் வங்கி சேவைகளைப் பெறமுடியாத மக்களுக்கு மாற்று நிதி முறைகள் குறிப்பாக இஸ்லாமிய நிதி முறைமையின் சாத்தியக்கூறுகள் பற்றி விவாதிக்க ஒரு வாய்ப்பாக அமைந்தது.

### சென்னை வட்டமேசை மாநாடு

2018 நவம்பர் 10 அன்று சென்னை ITC Grand chola ஹோட்டலில் WIFE - UEF வட்டமேசை மாநாடு நடைபெற்றது. இது சர்வ தேச வணிக, நிதி தொடர்பான நிகழ்ச்சி ஆகும். United Economic Forum (UEF) , World Islamic Economic Forum Foundation (WIEF) ஆகிய இரண்டு அமைப்புகளின் கூட்டு முயற்சியில் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்சிக்கு முன்னதாக நானும், டாக்டர். ஜே.சதக்கத்துல்லாஹ் அவர் களும் இணைந்து டெல்லியில் இஸ்லாமிக் எகனாமிக் பைனான்சில் மன்னர் பைசல் விருது பெற்ற Dr. நஜாதுல்லாஹ் சித்திகி அவர்களிடம் ஆலோசனைகளை பெற்றுக் கொண்டோம்.

இந்தியாவில் வணிக, உள்கட்டமைப்பு வளர்சிக்கான புதுமையான மாற்று நிதி முறைகள் என்பதே மாநாட்டின் கருப்பொருள் ஆகும். சர்வதேச அளவில் கிடைக்கக்கூடிய இஸ்லாமிய ஷரிஆ அடிப்படையிலான நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தி தமிழ்நாடு உள்ளிட்ட இந்தியா முழுமைக்குமான உள்கட் டமைப்பு திட்டங்கள், வணிக நிறுவனங்கள், முதலீட்டு வாய்ப்புக்களுக்காக நிதி திரட்டுதல் ஆகியவை குறித்து ஆராய்வதுதான் மாநாட் டின் முக்கிய நோக்கமாக இருந்தது.



கோவா இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ் மென்ட்(GIM), மலேசியாவைச் சேர்ந்த WIEF Young Leaders Network (WYN) உடன் இணைந்து 2018ஆம் ஆண்டு அக்டோபர் 16-17 தேதிகளில் சர்வதேச தொடக்க நிறுவன (Startup) மாநாடான WIEF IdeaLab 2018 நிகழ்வை இணைந்து நடத்தியது. இந்த நிகழ்ச்சி யில் நானும் சதக்கத்துல்லாஹ்வும் கலந்து கொண்டு Management Institute முக்கியமான நிர்வாகிகளைச் சந்தித்து இந்தியாவின் சூழ் நிலை பற்றி விவாதித்தோம்.

வர்த்தகக் கண்காட்சி(Trade Expo)யில் பல்வேறு தொழில் துறைகள், நிறுவனங்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்களைச் சேர்ந்த 200க்



கும் மேற்பட்ட வர்த்தக அரங்குகள் இடம் பெற்றன. இதில் கொள்கையிலிருந்து நடை முறைக்கு என்ற மையக்கருத்தில் இஸ்லாமிய நிதியியல் முறைகளை நடைமுறையில் எவ் வாறு செயல்படுத்துவது என்பது குறித்து சிறப்பு கருத்தரங்குகள் நடைபெற்றன. இந்த நிகழ்வில் நானும், டாக்டர் சதக்கதுல்லாஹ் அவர்களும் பங்கேற்று உரையாற்றினோம். இது போன்று பல்வேறு களப் பணிகளில் அவருடன் இணைந்து பணியாற்றியுள்ளேன்.

டாக்டர் சதக்கத்துல்லாஹ் தமது வாழ் வியல் அனுபங்களைக் கனவோடு நில்லாமல் என்ற நூலாகவும் தொகுத்துள்ளார். வங்கியியல் துறையிலும், சமுதாயப் பணிகளிலும் அயராது பாடுபட்டு முத்திரை பதித்த டாக்டர் ஜே. சதக்கத்துல்லாஹ் அவர்களின் பிழைகளை அல்லாஹ் மன்னித்து அவருக்கு உயரிய சுவனத்தை வழங்கப் பிரார்த்திக்கின்றேன். அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், நண்பர்கள் அனைவருக்கும் அல்லாஹ் அழகிய பொறுமையை வழங்குவானாக!

**- H. அப்துர் ரகீப்,** பொதுச்செயலாளர், ICIF, ஆசிரியர், சமரசம்




# இன்னும் 100 ஆண்டுகளுக்குப் பின்..!

**• அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது**

இன்னும் நூறு ஆண்டுகளில் நானும் நீங்களும் நம்மில் எவரும் இந்தப் பூமிப்பந்தில் இருக்கப் போவதில்லை என்பது ஒரு யதார்த்தம். அப்போது நாம் சிரமப்பட்டு உழைத்து, சம்பாதித்துக் கட்டிய வீடுகளில் யாரோ எவரோ குடியிருப்பார்கள். நாம் வேலை பார்த்த இடங்களில், நாம் வகித்த பதவிகளில் வேறு ஆட்கள் இருப்பார்கள்.

அப்போது நம்மை நினைவுகூர்பவர்கள் இருப்பார்களா? எத்தனை பேர் இருப்பார்கள்? அவர்கள் எப்போதெல்லாம் நம்மை நினைவுபடுத்துவார்கள் என்பது ஐயத்திற்குரியது. நாம் நமது பூட்டனாரை, பூட்டியை வாழ்வில் எத்தனை முறை நினைவுபடுத்தியிருக்கின்றோம்? நாம் நமது பாட்டனாரை, பாட்டியை இறுதியாக எப்போது நினைவுகூர்ந்தோம்? நினைத்துப் பார்த்தோம்?

நானும் நீங்களும் எந்தவொரு உலக வாழ்க்கையை அலட்டிக் கொள்கின்றோமோ, எந்தவொரு வாழ்க்கைக்காகக் கவலை கொள்கின்றோமோ, பலபோது கண்ணீர் வடிக்கின்றோமோ எந்தவொரு வாழ்க்கைக்காகப் போட்டி போடுகின்றோமோ, பொறாமை கொள்கின்றோமோ, புறம் பேசுகின்றோமோ, பகைமை பாராட்டுகின்றோமோ, வெறுப்புக் கொள்கின்றோமோ அந்த வாழ்க்கை இன்னும் நூறு ஆண்டுகளில் முடிந்திருக்கும்.

நமக்கு முன்னரும் எத்தனை எத்தனை பரம்பரைகள் இப்படி வாழ்ந்து விட்டுப் போய்விட்டார்கள். நமக்குப் பிறகும் அப்படி பல பரம்பரைகள் வரும்; போகும். இது ஒரு தொடர் கதை. உலக வாழ்வின் இந்த யதார்த்தத்தை, நிலையற்ற தன்மையை நாம் புரிந்து செயல்படத் தவறினால் நாம் பெரும் இழப்புக்குரியவர்களாக மாறி விடுவோம்.



யார் இந்த தற்காலிக வாழ்வில் புத்திசாலியாக இருக்க முடியும்? கிடைத்துள்ள குறுகிய ஆயுளை வெறுமனே நுகரந்து முடிக்காமல் இதனை முதலீடு செய்பவரே புத்திசாலி. 'தனது ஆசாபாசங்களை அடக்கி மரணத்திற்கு பின்புள்ள வாழ்வுக்காகச் செயல்படுபவனே புத்திசாலி' என்பது நபி வாக்கு. (திர்மிதி)

பணம், பட்டம், பதவி, பேர், புகழ் என்று உலக மாயைகளில் சிக்கி தனது வாழ்க்கையைத் தொலைத்து விட்டு இறுதி நேரத்தில் கவலை கொள்வதில், கைசேதப்படுவதில் எந்தப் பயனுமில்லை.

எந்தவொரு மனிதனும் இந்த உலகை விட்டுப் பிரியும் தருவாயில் எப்படி அங்கலாய்ப்பான்

என்பதையும் அப்போது அவன் அங்கலாய்ப் பதில் எந்தப் பயனும் இருக்காது என்பதையும் புனித திருக்குர்ஆன் அற்புதமாகச் சித்திரிக் கிறது:

‘அவர்களில் ஒருவருக்கு மரணம் வரும் போது, அவர்: ‘என் இறைவனே! என்னை (உலகிற்கு) திருப்பி அனுப்புவாயாக!’ என்று கூறுவான். நான் செய்யாமல் விட்டுவந்த நல்ல காரியங்களைக் செய்வதற்காக’ (என்றும் கூறுவான்)

இந்தக் கோரிக்கைக்கு இறைவன் அளிக்கும் பதில் மிகக் கடுமையானதாக இருக்கும்.

‘அவர்களில் ஒருவனுக்கு மரணம் வரும் போது, அவன்; ‘என் இறைவனே! என்னைத் திரும்ப (உலகுக்குத்) திருப்பி அனுப்பு வாயாக!’ என்று கூறுவான். நான் விட்டு வந்ததில் நல்ல காரியங்களைச் செய்வதற் காக’ (என்றும் கூறுவான்). அவ்வாறில்லை! அவன் கூறுவது வெறும் வார்த்தையே(யன்றி வேறில்லை) அவர்கள் எழுப்பப்படும் நாள் வரையும் அவர்கள் முன்னே ஒரு திரையிருக் கிறது.’ (திருக்குர்ஆன் 23: 99,100)

ஒரு மனிதன் தனது இறுதி நேரக் கவ லையை எப்படி வெளிப்படுத்துவான் என்ப தைத் திருக்குர்ஆன் மற்றோர் இடத்தில் குறிப் பிடுகின்றது. ‘என் (மறுமை) வாழ்க்கைக்காக நன்மையை நான் முற்படுத்தி (அனுப்பி) யிருக்க வேண்டுமே!’ என்று அப்போது மனிதன் கூறுவான்.! (திருக்குர்ஆன் 89:24)

இன்னுமோர் இடத்தில் திருக்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. ‘அந்நாளில் அநியாயக்காரன் தன்னிரு கைகளையும் கடித்துக்கொண்டு; ‘அத்தூதருடன் நானும் - (நேரான) வழியை எடுத்துக் கொண்டிருக்க வேண்டாமா?’ எனக் கூறுவான். எனக்கு வந்த கேடே! (என்னை வழி கெடுத்த) ஒருவனை நண்பனாக ஆக்கிக் கொள்ளாது இருந் திருக்க வேண்டாமா? நிச்சயமாக, என்னி டம் நல்லுபதேசம் வந்த பின்னரும் அதிலி ருந்து அவன் என்னை வழி கெடுத்தானே! மேலும் ஷைத்தான் மனிதனுக்கு மிகவும் சதி செய்பவனாக இருக்கிறான்!’ (என்று புலம்பு வான்).’ (திருக்குர்ஆன் 25: 27-29)

‘பெரும்பாலான மனிதர்கள் உலக வாழ்க் கையின் உண்மைகளை மறந்து உறங்கிக் கொண்டிருக்கின்றார்கள். மரணத்தை அடுத்தே அவர்கள் விழித்துக் கொள்வார்கள்’ என்று சொன்னார்கள் அலீ (ரலி) அவர்கள்.

நாம் அவ்வாறானவர்களாக இருந்து விடக்கூடாது. வாழும் போதே நாம் விழித் துக் கொள்ள வேண்டும்; விழிப்புடன் இருக்க வேண்டும்; உலக வாழ்வு பற்றிய உண்மைகளைப் புரிந்து நிலையான மறுமை வாழ்வுக்காக நம்மைத் தயார்படுத்தும் முயற்சியில் முனைப்புக் காட்ட வேண்டும்.

இந்த வகையில் ஒரு பக்கம் இறைவனுக் குரிய கடமைகளை நிறைவாக நிறைவேற்று வதில் நமது கவனத்தைக் குவிக்க வேண்டும். மறுபக்கம் மனிதர்களுக்குரிய கடமைகளைச்




செவ்வனே நிறைவேற்றுவதில் ஆர்வம் கொள்ள வேண்டும்.

குறிப்பாக நாம் எல்லா மனிதர்களையும் ஜீவராசிகளையும் நேசிக்க வேண்டும்; அன்பை விதைக்க வேண்டும்; வெறுப்பை, பகை மையை, குரோதத்தை வேரறுக்க வேண்டும். நண்பனோ, எதிரியோ யாராக இருந்தாலும் எவருக்கும் நம்மால் அநீதி இழைக்கப்படலா காது. அனைவருடனும் நீதியாகவும், நியாய மாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

நமது எஞ்சியுள்ள வாழ்க்கையை அர்த்த முள்ள வகையில், பயன்மிக்க வகையில் அமைத்துக் கொள்ள வல்ல ரஹ்மான் நம் அனைவருக்கும் அருள்புரிவானாக!

# அவனே சாட்சியாக இருக்கிறான்

இவர்களிடம் கூறும்: 'நான் உங்களிடம் எந்தக் கூலியையும் கேட்கவில்லை. அவ்வாறு கேட்டிருந்தாலும் அதனை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். என்னுடைய கூலி அல்லாஹ்வின் பொறுப்பிலேயே உள்ளது. அவன் அனைத்து விஷயங்களுக்கும் சாட்சியாக இருக்கின்றான்.'[69] இவர்களிடம் கூறும்: 'என்னுடைய இறைவன் (என்னுள்) சத்தியத்தை உதிக்கச் செய்கின்றான்.[70] அவன் மறைவான உண்மைகளை நன்கறிபவனாக இருக்கின்றான்'. கூறுவீராக: 'சத்தியம் வந்துவிட்டது. இனி, அசத்தியத்தினால் எதுவும் செய்ய முடியாது!'

கூறுவீராக: 'நான் வழிதவறிப் போய்விட்டால், எனது வழிகேட்டின் தீய விளைவு என்னையே சாரும். நான் நேர்வழியில் இருக்கிறேனென்றால், அது என்னுடைய இறைவன் எனக்கு அனுப்புகின்ற வஹியின் காரணத்தினாலாகும். அவன் எல்லாவற்றையும் செவியுறுபவனும் அருகிலேயே உள்ளவனுமாவான்.'[71]

(மேலும்) அந்தோ! இவர்கள் திகைப்புற்றுத் தடுமாறிக் கொண்டிருக்கும் வேளையில் இவர்களை நீர் காண வேண்டுமே! இவர்களால் எங்கும் தப்பித்துச் செல்ல முடியாது. மாறாக அருகிலிருந்தே பிடிக்கப்படுவார்கள்.[72] அப்போது இவர்கள் கூறுவார்கள்: 'நாங்கள் அதன் மீது நம்பிக்கை கொண்டோம்.'[73] ஆயினும் அவர்களை விட்டு தூரமாகச் சென்று விட்ட ஒன்றை எங்ஙனம் அவர்களால் கைக்கொள்ள முடியும்?[74]

● அத்தியாயம் 34 ஸபா ● திருவசனங்கள் : 47-52

**69.** குற்றம் சுமத்துபவர்கள் என்ன வேண்டுமானாலும் குற்றம் சுமத்திக் கொண்டுதான் இருப்பார்கள். ஆனால் அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவன். நான் எந்த ஆதாயத்தையும் எதிர்பார்த்திராத மனிதன் ஆவேன். இந்தப் பணியை நான் எந்தவொரு சொந்த ஆதாயத்துக்காகவும் மேற்கொள்ளவில்லை என்பதற்கு அவனே சாட்சியாவான்.

**70.** மூலத்தில் யக்திஃபூ பில் ஹக் என்கிற சொற்கள் ஆளப்பட்டுள்ளன. இதற்கு, 'அவன் வஹியின் மூலமாக சத்தியத்தைப் பற்றிய அறிவை என்னுள் உதிக்கச் செய்கின்றான்' என்று பொருள் கொள்ளலாம். இரண்டாவதாக, 'அவன் சத்தியத்தை மேலோங்கச் செய்கின்றான்; அசத்தியத்தின் தலை மீது சத்தியத்தால் அடிக்கின்றான்' என்றும் பொருள் கொள்ளலாம்.

**71.** இன்றைய காலத்தைச் சேர்ந்த ஒரு சில மனிதர்கள் இந்த வசனத்துக்கு, 'அன்பு நபிகளாரை வழிகெடுக்க முடியும்; இன்னும் சொல்லப்போனால் நபிகளார்(ஸல்)

28 ஆம் பக்கம் பார்க்க...

● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

# மகத்தான பொறுமையாளன் அவன்

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'துன்புறுத்துகின்ற சொல்லைக் கேட்டு பொறுமையை மேற்கொள்வதில் அல்லாஹ்வை மிஞ்சியவர் எவருமே இலர். மக்கள் அவனுக்குக் குழந்தைகள் உண்டு என்று வாதிட்டார்கள். அதற்குப் பிறகும் அவன் அந்த மக்களுக்கு நலத்தை நல்குகின்றான். அவர்களுக்கு வாழ்வாதாரங்களை அருளுகின்றான்.'**

அறிவிப்பாளர் : அபூ மூஸா அஷ்அரி(ரலி)
நூல் : புகாரி

இறைவன் மிக மிக அதிகமாக சகிப்புத் தன்மை கொண்டவன் ஆவான். இறைவனின் உரிமைகளை, இறைவனின் மகத்துவத்தை இம்மியளவுகூடப் பொருட்படுத்தாமல் கூசாமல் பொய்யுரைத்த மக்களை (இறைக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க மறுத்தவர்களை) அவன் விரும்பினால் கண் மூடி கண் திறப்பதற்குள் அழித்தொழித்துவிட்டிருக்க முடியும். ஆனால் அவன் மிக மிகப் பொறுமையோடும் மிதமிஞ்சிய சகிப்புத்தன்மையோடும் நடந்து கொள்கின்றான்.

இப்படிப்பட்டவர்களை அவன் உடனுக்குடன் அழித்தொழிப்பதில்லை. அதற்கும் மேலாக அவர்களுக்கு வாழ்வாதாரங்களை, நல வாழ்வை அருளுகின்றான். இதன் காரணமாக இறைவனுக்கு மாறு செய்பவர்களின் இறை மறுப்புத்தனமான செயல்கள் அதிகரிக்கின்றன; அவர்களின் அறியாமையும் கூடிக் கொண்டே போகின்றது.

இறைவனின் சகிப்புத்தன்மை வரலாறு நெடுக வெளிப்பட்டுக் கொண்டே வந்துள்ளது. ஆனால் ஆயுள்காலம் முடிந்துவிடுகின்ற போது இறைவனுக்கு மாறு செய்து வாழ்ந்தவர்களை இறைவனின் கோபத்திலிருந்து எவராலும் காப்பாற்றிவிட முடியாது. இறைவன் உடனுக்குடன் தண்டிக்காமல் கால அவகாசத்தை நீட்டித்துக் கொண்டே போவதைப் பார்த்து மக்கள் மயக்கத்தில் ஆழ்ந்து விடுகின்றார்கள்.

இந்த உலகத்தில் தாம் எதை வேண்டுமானாலும் செய்யலாம்; எப்படி வேண்டுமானாலும் ஆணவத்தோடும் அகம்பாவத்தோடும் நடந்துகொள்ளலாம்; எவருமே பிடிக்க மாட்டார்கள் என அவர்கள் நினைக்கத் தொடங்கி விடுகின்றார்கள்.

ஆனால் தீர்ப்புக்கான நேரம் வருகின்ற போது அவர்களின் இந்த நினைப்பு வெற்றுக் கற்பனையே அன்றி வேறொன்றுமில்லை என்பதை அவர்கள் தெள்ளத் தெளிவாக உணர்ந்து கொள்கின்றார்கள். வாழ்நாள் முழுவதும் தாம் எத்தகைய தவறான நம்பிக்கையிலும் மயக்கத்திலும் உழன்று கிடந்தோம் என்பதை உணர்கின்றார்கள்.

மேலும் வேறு எவரையோ அல்ல, தம்மைத்தாமே அல்லவா தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டு கிடந்தோம் என்று அந்தக் கணத்தில் அவர்கள் உணர்கின்றார்கள்.

நபிமொழி விளக்கம் ✦ மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான் ✦ தமிழில் : அபூ ஹானியா

26 ஆம் பக்கத் தொடர்ச்சி...

வழிதவறியிருக்கின்றார்கள்' என்று பொருள் கற்பிக்கின்றார்கள். 'இதனால்தான் வல்லமையும் மாண்பும் நிறைந்த அல்லாஹ் நபிகளாரின் நாவிலிருந்தே, 'நான் வழி தவறிப்போனால் என்னுடைய வழிகேட்டுக்கு நானே பொறுப்பாவேன்' எனச் சொல்ல வைத்திருக்கின்றான்' என்றும் இவர்கள் வாதிடுகின்றார்கள்.

மேலும் இந்தத் தவறான கற்பிதத்தின் அடிப்படையில் 'நபிகளாரின் வாழ்க்கை, (அல்லாஹ் காப்பாற்றுவானாக!) நேர்வழி காட்டுதல், வழிகேடு ஆகிய இரண்டையும் கொண்ட கலவையாக இருந்தது' என்றும், 'எந்தவொரு மனிதரும் நபிகளாரை முழுக்க முழுக்க நேர்வழியில் இருப்பவராக விளங்கிக் கொண்டு நபிகளாரை முழுமையாகப் பின்பற்றத் தொடங்கிவிடக் கூடாது என்பதற்காகத்தான் வல்லோன் அல்லாஹ் நபிகளாரையே குறைஷிகளின் முன்னால் இவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க வைத்திருக்கின்றான்' என்றும் இந்த அக்கிரமக்காரர்கள் நிறுவ விரும்புகின்றார்கள்.

இத்தனைக்கும் உரைத் தொடரை ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்கின்ற எந்தவொரு மனிதரும் இங்கு, (அல்லாஹ் காப்பாற்றுவானாக) 'நான் வழிதவறிப் போய்விட்டல்..' என்கிற சொற்கள் ஏதோ நபிகளாரே வழிகெட்டுப் போய்விட்டார்கள் என்கிற பொருளில் ஆளப்படவில்லை என்பதையும் அதற்கு மாறாக, 'என் மீது நீங்கள் குற்றம் சுமத்துவதைப் போன்று நான் வழிதவறிப் போய்விட்டேன் எனில், மேலும் நீங்கள் ஐயம் கொள்வதைப் போன்று அவ்வாறு வழிகெட்டுப் போனதன் விளைவு தான் தூதுத்துவம் தொடர்பான என்னுடைய பிரகடனமும் ஏகத்துவக் கோட்பாட்டின் பக்கம் என்னுடைய அழைப்பும் எனில், என்னுடைய வழிகேட்டின் தீயவிளைவு என்னையே சாரும். அதற்கு நீங்கள் பொறுப்பாளராக மாட்டீர்கள்.

ஆனால் அதே சமயம் நான் நேரிய வழியில் இருக்கின்றேன் எனில் (அதுதான் யதார்த்தமும்கூட) என்னுடைய அதிபதியிடமிருந்து எனக்கு வஹி வருவதும் அதன் மூலமாக எனக்கு நேர்வழி பற்றிய ஞானம் கிடைப்பதும்தாம் அதற்குக் காரணமாகும். என்னுடைய அதிபதி எனக்கு மிகவும் அருகில்தான் இருக்கின்றான். மேலும் அவன் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டுதான் இருக்கின்றான். நான் வழிகெட்டுப் போய் உள்ளேனா அல்லது அவனிடமிருந்து நேர் வழியைப் பெற்றவனாக உள்ளேனா என்பதை அவன் நன்கு அறிகின்றான்' என்கிற பொருளில்தான் இவையெல்லாமே இங்கு சொல்லப்பட்டிருக்கின்றன என்பதைத் தெள்ளத்தெளிவாக விளங்கிக் கொள்வார்.

**72.** மறுமை நாளன்று ஒவ்வொரு குற்றவாளியும் அவர் சற்றும் எதிர்பாராத நிலையில் பிடிக்கப்படுவார். ஏதோ அவரைப் பிடிக்கின்ற பணியில் அமர்த்தப்பட்டவர் அவருக்கு அருகிலேயே எங்கோ மறைந்து இருந்தவாறு அவரைக் கண்காணித்துக் கொண்டிருக்க, குற்றவாளி தப்பித்து ஓடிவிட எத்தனித்த அந்த நொடியிலேயே அவர் மீது பாய்ந்து மடக்கிப் பிடித்துவிடுவதைப் போன்று எல்லாமே மிக மிக வேகமாக நடந்து முடிந்துவிடும்.

**73.** உலக வாழ்வில் இறைத்தூதர் எடுத்துரைத்த போதனையை ஏற்றுக் கொண்டு அதன் மீது நம்பிக்கை கொள்ள முன் வருவதை இது குறிக்கும்.

**74.** போதனையை ஏற்றுக் கொண்டு அதன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டிய இடமோ உலகமாக இருந்தது. இவர்களோ அந்த உலகத்திலிருந்து இப்போது வெகு தொலைவில் வந்துவிட்டார்கள். மறுமையை அடைந்து விட்ட பிறகு பாவமன்னிப்புக்கான, நம்பிக்கை கொள்வதற்கான வாய்ப்பும் சாத்தியமும் இவர்களுக்கு எங்கிருந்து கிடைக்கப் போகின்றது?

(தொடரும்)

# நல்லறங்கள் நிறைந்த சமுதாயம்

● சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி

● தமிழில் :
T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

மக்களுக்கு அதிக அளவில் பயனளிக்கின்ற, நீடித்த நன்மையளிக்கின்ற, நல்லறங்களை விரும்பிச் செய்கின்ற, தொடர்ந்து இடைவிடாமல் இயங்குகின்ற இந்த நடத்தை ஒட்டுமொத்த சமூகத்துக்குள்ளும் வேரூன்றி விடுகின்ற போது ஸாலிஹான அமல்கள் ஒரு சமூகப் பண்பாக, ஒரு சமூக வலிமையாகவே மாறிவிடுதற்குப் பெயர்தான் நல்லறங்கள் மிக்க சமுதாயம். நம்முடைய நாட்டில் லங்கர் என்கிற அன்னதானக் கூடங்களை நடத்துவதும் பசித்தவர்களுக்கு உணவளிப்பதும் சீக்கியர்களின் அடையாளமாகியிருக்கின்றது.

எந்தவொரு சமூகத்திலும் இது போன்று ஏதேனுமோர் நல்லறம் எல்லாராலும் பரவலாக மேற்கொள்ளப்படுகின்ற போது அவை இடைவிடாமல் தொடர்ந்து மேற்கொள்ளப் படுகின்ற போது இறுதியில் அதுவே அந்தச் சமூகத்தாரின் கூட்டுப் பண்பாக, சமூகப் பழக்கமாக, அடையாளத்தின் ஒரு பகுதியாக மாறிவிடுகின்றது. முஸ்லிம் உம்மத்தின் அடையாளமும் இது போன்று ஸாலிஹான அமல்களுடன் பின்னிப் பிணைந்துவிடுவது அவசியமாகும்.

ஒட்டுமொத்த முஸ்லிம் உம்மத்தும் மனிதர்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக மும்முரமாகவும் சுறுசுறுப்பாகவும் இயங்கிக் கொண்டே இருக்கின்ற துடிப்புமிக்க சமூக மாக, மனித குலத்திற்கான அருட்கொடையாகக் கொண்டாடப்படுகின்ற சமூகமாக மக்க ளால் அறியப்படும் அளவுக்கு ஒட்டுமொத்த சமுதாயத்தின் செயல்பாடுகளும் அமைய வேண்டும். திருக்குர்ஆனில், ‘மனித இனத்தைச் சீர்ப்படுத்துவதற்காக தோற்றுவிக்கப் பட்டிருக்கும் மிகச் சிறந்த சமூகத்தவர்’ (திருக்குர்ஆன் 3:110) என்றும், ‘நன்மையின் பக்கம் அழைக்கக்கூடிய ஒரு குழுவினர் உங்களிடையே கண்டிப்பாக இருந்திட வேண்டும்’ (திருக்குர்ஆன் 3:104) என்றும், ‘இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியைக் கடைப்பிடிப்பவராகவும் அல்லாஹ்வுக்காக சான்று வழங்குபவராகவும் திகழுங்கள்’ (திருக் குர்ஆன் 4:135) என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ள வசனங்களில் இந்தத் தொலைநோக்கு தான் கிடைக்கின்றது.

செயல்துடிப்பு நிறைந்த, ஸாலிஹான அமல்களில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டே இருக்க விரும்புகின்ற சமுதாயத்துக்குள் பெரும் எண்ணிக்கையில் மக்களுக்கு நன்மை சேர்க்கும் நிறுவனங்கள் நிறுவப்படுகின்றன. அதற்கும் மேலாக மனித குலத்தின் வெற்றி, நலம், வளவாழ்வு ஆகியவற்றுக்காக ஆய்வு, ஆராய்ச்சி, தேடல், புதுமை, கண்டுபிடிப்பு நிறைந்த சூழல் பரவிவிடுகின்றது. வள்ளல் குணமும், மக்களுக்கு நன்மையைத் தருகின்ற போக்கும் சமூக நடைமுறையாகவே(social norm) ஆகிவிடுகின்றன. சமூக நல மேம்பாடு, சமூக வளவாழ்வுக்கான ஏற்பாடுகள் ஆகியவற்றோடு வளர்ச்சி, முன்னேற்றம் ஆகிய இலக்குகள் சார்ந்த ஆக்கப்பூர்வமான பணிகளோடும் சமூகம் பிணைந்து விடுகிறது.

இவ்வாறு நல்லறங்கள் நிறைந்த, நன்மைகள் மலிந்த, செயல்துடிப்பு மிக்க சமுதாயத்தில் ஒன்றுமே செய்யாமல் முடங்கிக் கிடக்கின்ற நடத்தையும், சோம்பலும், உதவாக்

கரையான போக்குகளும், பயனற்ற வாழ்வும், வேலையற்ற வாழ்வும் களங்கங்களாகவே பார்க்கப்படுகின்றன. பயனற்ற, யாதொரு நன்மையையும் அளிக்காத செயல்பாடுகளுக்கும், குழிபறிக்கின்ற, குஷிப்படுத்துகின்ற அரசியல் நடத்தைகளுக்கும், அற்ப அரசியல் ஆதாயங்களுக்காக எதனையும் செய்கின்ற போக்குகளுக்கும், வீணான செயல்களுக்கும் மக்களிடம் நேரமும் இருப்பதில்லை.

சமுதாயமும் இது போன்றவற்றை விரும்புவதில்லை. இந்த விவகாரத்தில் திருக்குர்ஆன் எந்த அளவுக்குக் கறாராக இருக்கின்றது எனில் வீணானவற்றிலிருந்து விலகி இருக்கின்ற பண்பை 'இறைநம்பிக்கையாளர்களின் அதிமுக்கியமான பண்புகளில் ஒன்றாக அறிவித்துள்ளது. மக்களின் கவனத்தையும் மனங்களையும் தம் பக்கம் சுண்டி இழுத்து பயனுள்ள பணிகளிலிருந்து கவனத்தைத் திசை திருப்பி அலட்சியத்தில் ஆழ்த்திவிடுகின்ற, எந்தப் பயனும் அல்லாத பொழுதுபோக்குகளையும் அது கண்டித்து ஒதுக்கிவிடுகின்றது.

திருக்குர்ஆன் அறிவிக்கின்றது: 'மேலும், வீணானவற்றை விட்டு விலகியிருக்கின்றார்கள்;' (திருக்குர்ஆன் 23:3). 'லகூ'- வீணானவை' குறித்து விளக்கமளிக்கின்ற போது மௌலானா சையத் அபுல் அஃலா மௌதூதி(ரஹ்)எழுதுகின்றார்:

'பயனில்லாதவற்றையும், தேவையோ பொருத்தமோ இல்லாதவற்றையும், முற்றிலும் வீணானவற்றையும் 'லகூ' என்று சொல்வார்கள். எவ்விதமான இலாபமும் தராதவை; பயனுள்ள விளைவோ, நன்மையோ அளித்திடாதவை; உண்மையான தேவை எதனையும் கொண்டிராதவை; நல்லதொரு நோக்கம் எதனையும் பெற்றிராதவை ஆகிய அனைத்துமே 'லக்வியாத்'- வீணானவை ஆகும்.

**நல்லறங்களில் திளைக்கின்ற சமுதாயத்தின் அடையாளங்கள்**

நல்லறங்கள் மிக்க சமுதாயத்தின் அடையாளங்காக இன்னும் பலவற்றைச் சொல்ல முடியும். அதாவது அந்தச் சமுதாயத்தின் சூழல் எந்த அளவுக்கு உயர்ந்தோங்கி நிற்கும் எனில் அங்கு மந்தகதியில் பணிகள் நடப்பதும், செயல் திறனற்ற போக்கும் அருவருப்பாகப் பார்க்கப்படும். பொது நலனுக்காக வேண்டி தொழில் முனைகிற போக்கும் (Enterprising) வீர தீரச் சாகசங்களில் ஈடுபடுகிற(Adventurous) ஆர்வமும் வேரூன்றி இருக்கும்.

நேரத்தை சிறப்பாக, முழுமையாக, கச்சிதமாகப் பயன்படுத்திக் கொள்கின்ற பண்பு நீக்கமற நிறைந்து இருக்கும் (அத்தியாயம் அல்அஸ்ர்). காலைப் பொழுதுகள் வெகுவிரைவாகத் தொடங்கிவிடும். (என் இறைவனே! அதிகாலைப் பொழுதுகளில் என்னுடைய உம்மத்துக்கு பரக்கத்தை (பெருக்கத்தை, நல்லருளை) வழங்குவாயாக! என்பது நபிகளாரின் பிரார்த்தனை).

மேலும் ஒவ்வொரு நொடியும் நிமிடமும் செயல்படுவதற்கான அவகாசமும் பயனுள்ள பணிகளில் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப்படும். (மறுமை நிலைநிறுத்தப்பட்டுவிட, உம்மில் எவரேனும் ஒருவரின் கைகளில் பேரீச்ச மரக்கன்று இருக்கின்றது எனில் கணக்குக் காட்டுவதற்காக நிற்பதற்கு முன்னால் அந்தக் கன்றை நட்டுவிடுவதற்கான சாத்தியம் இருக்கின்றது எனில் அவர் அதனை அவசியம் நட்டுவிட வேண்டும் என்பது அன்பு நபிகளாரின் அமுத வாக்கு).

மக்களுக்கு நன்மையளிக்கின்ற பொதுக் காரியங்களிலும் சேவைப் பணிகளிலும் அதிகமதிகமாக ஈடுபடுவதில் மக்கள் மத்தியில் போட்டி நிலவும். (மேலும், ஒவ்வொருவருக்கும் அவரவர் திரும்பக்கூடிய திசை இருக்கின்றது. எனவே, நீங்கள் நன்மைகள் புரிவதில் முந்துங்கள்' (திருக்குர்ஆன் 2:148).

ஸாலிஹான அமல்கள் நிறைந்த சமுதாயத்தின் சூழலின் மற்றுமோர் முக்கியமான பரிமாணம் அங்கு நன்மையானவற்றில் அதிகமதிகமாக ஒருவருக்



கொருவர் ஒத்துழைக்கின்ற சூழல் நிலை பெற்று இருக்கும். எந்த இடத்தில் எத்தகைய நல்லறங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் அதற் காக ஒத்துழைப்பதற்கும், ஆதரவுக்கை நீட்டுவதற்கும், அதனைவலுப்படுத்துவதற்கும் மக்கள் ஓடோடி வரக்கூடிய சூழல் இருக்கும். ('எப்பணி நல்லதாகவும் இறையச்சத்திற்கு உரியதாகவும் உள்ளதோ அதில் எல்லோரு டனும் ஒத்துழையுங்கள். ஆனால் எது பாவமானதாகவும் வரம்பு கடந்ததாகவும் உள்ளதோ அதில் எவருடனும் ஒத்துழை யாதீர்கள்'. திருக்குர்ஆன் 5:2). பயனுள்ள பணிகளின் போது ஒருவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் அவரைப் பாராட்டி ஊக்குவித்து ஊக்கமளிப்பதும் ஒத்துழைப்பில் அடங்கும். புதிய முயற்சிகளுக்குக் கை கொடுத்து ஆதரவளிப்பதும் அடங்கும்.

பயன்தரும் பணி எதுவானாலும் தனக் குள் இழப்புக்கான அச்சுறுத்தலையும்(Risk) கொண்டிருக்கின்றது. சமுதாயம் உற்ற துணையாக இருக்கின்ற போதுதான் அந்த அச்சுறுத்தலை எதிர்கொண்டு காரிய மாற்று வதற்கான உத்வேகமும் ஊக்கமும் பிறக்கும். நன்மையான காரியங்களுக்கு நல்ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்குவதில் குறுங்குழு சார்பு நிலைகள் தடைக்கற்களாக ஆகிவிடக் கூடாது; வயது, அனுபவம் ஆகிய அளவுகோல்களோ, போட்டி, பொறாமை, சமகால சண்டைகள் போன்றவையோ தடைகளாய் ஆகிவிடக் கூடாது.

அதற்கு மாறாக ஆண்களும், பெண்களும், முதியவர்களும், இளைஞர்களும் எல்லோரும் தத்தமது ரசனை, விருப்பம், ஆற்றல், திறமை ஆகியவற்றுக்கேற்ப விதவிதமான நன்மையான காரியங்களில் தம்முடைய நேரத்தைச் செலவிட்டுக்கொண்டே இருக் கின்ற, ஒட்டுமொத்த சமுதாயமும் பரந்த மனதுடனும் விரிந்த உள்ளத்துடனும் அவர் களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் மனமு வந்து நல்குகின்ற சூழல் நிலவ வேண்டும். சுருங்கச் சொல்ல வேண்டும் எனில் ஸாலி ஹான அமல்களில் மும்முரமாக ஈடுபடுகின்ற பேரார்வமும் பெரு எழுச்சியும் ஒட்டுமொத்த

> ***ஸாலிஹான அமல்கள் நிறைந்த சமுதாயத்தின் சூழலின் மற்று மோர் முக்கியமான பரிமாணம் அங்கு நன்மையானவற்றில் அதிகமதிகமாக ஒருவருக் கொருவர் ஒத்துழைக்கின்ற சூழல் நிலைபெற்று இருக்கும்.***

சமுதாயத்திலும் நிறைந்து விடுகிற போது நன்மை, நலம், சேவை, நீதி போன்றவை வெறு மனே ஒரு சில உத்தமர்கள் கடைப்பிடிக்கின்ற மாண்புகளாகச் சுருங்கி இருப்பதில்லை.

அதற்கு மாறாக இவை யாவும் ஒட்டு மொத்த சமுதாயத்தின் கூட்டு முன்னுரி மையாக, பண்பாடாக மாறி விடுகின்றன. மனிதர்களின் நலன்கள், பலவீனர்களுக்கான உதவிகள், கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி, வாழ்க்கை மேம்பாடு ஆகியவற்றுக்காக வகை வகையான நிறுவனங்கள், சமூக இயக்கங்கள் முளைக்கத் தொடங்கிவிடுகின்றன. உணர் வற்ற ஜடத்தனம், தேக்கம், முடக்கம், அக்கறையின்மை ஆகியவற்றுக்குப் பதிலாக ஒத்துழைப்பு, பொறுப்பு உணர்வு, ஒருங் கிணைந்த போராட்டம் போன்றவை நிறைந்த சமூகச் சூழல் உருவாகின்றது.

ஒரு கட்டுக்கோப்பான, தீர்க்கமான, நீடித்து நிற்கிற கூட்டுச் சக்தியாக நன்மை பேருருவம் எடுக்கின்றது. ஸாலிஹான அமல்களைப் பேரார்வத்துடன் மேற்கொள் கின்ற ஆர்வம் தனி மனிதர்களில் மட்டுமே காணப்படக்கூடிய பேரார்வமே குறுகியிராமல் ஒட்டுமொத்த சமுதாயத்திலும் அந்தப் பேரார்வமும் பெரும் முயற்சிகளும் நீக்கமற நிறைந்திருந்ததும் ஒட்டுமொத்த சமுதாயத் தின் கூட்டு நடத்தையாக, சமூகப் பழக்க மாக, பண்பாட்டு அடையாளமாக, சமூகச் சின்னமாக அவை மாறியிருந்ததுதான் நபித் தோழர்களிடமும் இஸ்லாத்தின் தொடக்கக் காலகட்டத்து முஸ்லிம் சமுதாயத்திடமும் இருந்த முக்கியமான சிறப்பியல்பாகும்.

தொடரும்



# போதை

## அமைதியான பேரழிவு

• புதுமடம் ஜாபர் அலீ

போதைப்பொருள் ஒரு தனிநபரின் தவறான பழக்கம் மட்டுமல்ல; அது ஒரு சமூகத்தின் அடித்தளத்தையே அசைத்துப் பார்க்கும் அமைதியான பேரழிவு. போர், பயங்கரவாதம், இயற்கைப் பேரிடர் போன்றவை ஏற்படுத்தும் அழிவுகளை நாம் கண்களால் காண முடியும். ஆனால் போதைப்பொருள் ஏற்படுத்தும் அழிவு அமைதியாக நிகழ்கிறது. ஓர் இளைஞனின் கனவுகளை அழித்து, ஒரு குடும்பத்தின் நிம்மதியைப் பறித்து, ஒரு சமூகத்தின் எதிர் காலத்தை மெதுவாகச் சிதைத்துக்கொண்டே செல்கிறது.

தமிழ்நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக போதைப்பொருள் கடத்தல், பயன்பாடு அதிகரித்து வருவது கவலைக்குரிய ஒன்றாக உள்ளது. இதனைத் தடுக்க மாநில அரசு ‘போதை இல்லா தமிழ்நாடு’ என்ற இலக்குடன் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இருப்பினும் ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்களின்படி 2019ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 4,329 போதைப்பொருள் வழக்குகள் பதிவு செய்யப்பட்ட நிலையில் 2023ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 10,126 ஆக உயர்ந்துள்ளது. இந்த உயர்வைத் தடுக்க சட்ட நடவடிக்கைகள் மட்டுமே போதுமானதல்ல; சமூக விழிப்பு உணர்வும் குடும்பப் பொறுப்பும் இணைந்தால்தான் இந்தச் சவாலை எதிர்கொள்ள முடியும்.

போதைப்பொருளின் முதல் பலி குடும்பம். ஒரு வீட்டில் ஒருவர் போதைக்கு அடிமையானால் அந்த வீட்டில் சிரிப்பு மறைந்து விடுகிறது. பெற்றோரின் நம்பிக்கை உடைகிறது. கணவன் மனைவி உறவு சிதைகிறது. குழந்தைகள் அன்பான சூழலில் அல்ல, அச்சம் நிறைந்த சூழலில் வளர்கிறார்கள். குடும்ப வருமானம் போதைக்காக வீணாகி கடன், வறுமை, குடும்ப

வன்முறை, விவாகரத்து போன்ற சிக்கல்கள் ஒன்றன் பின் ஒன்றாக உருவாகின்றன. இறுதியில் பாதிக்கப்படுவது ஒரு மனிதன் அல்ல; ஒரு தலைமுறையே! போதைப்பொருளின் தாக்கம் குடும்பத்தைத் தாண்டி சமூகத்தையும் விழுங்குகிறது.

திருட்டு, வழிப்பறி, கொலை, பாலியல் வன்முறை, சாலை விபத்துகள் உள்ளிட்ட பல குற்றங்களின் பின்னணியில் போதை முக்கிய காரணியாக உள்ளது. கல்வியை இடைநிறுத்தும் மாணவர்கள், வேலைவாய்ப்பை இழக்கும் இளைஞர்கள், உழைக்கும் திறனை இழக்கும் மனிதவளம் இவை அனைத்தும் ஒரு மாநிலத்தின் வளர்ச்சியையே தடுக்கின்றன. எந்தச் சமூகத்தின் மிகப் பெரிய செல்வமும் அதன் இளைஞர்கள்தான். அந்தச் செல்வம் போதையின் பிடியில் சிக்கினால் நாட்டின் எதிர்காலமே கேள்விக்குறியாகிவிடும்.

போதைப்பொருள் மனித உடலையும் மனதையும் ஒருசேரத் தாக்குகிறது. மூளை, இதயம், கல்லீரல் போன்ற உறுப்புகளைப் பாதிப்பதோடு மனச்சோர்வு, கோபம், வன்முறை மனநிலை, தற்கொலை எண்ணம் போன்ற மனநலப் பிரச்னைகளையும் உருவாக்குகிறது. இதனால் மருத்துவச் செலவுகள் உயர்கின்றன; குடும்பங்கள் பொருளாதார ரீதியாகவும் சிதைகின்றன.

இந்தப் பிரச்னையை காவல்துறை மட்டும் தீர்க்க முடியாது. வீட்டில் பெற்றோர் குழந்தைகளுடன் பேச வேண்டும். பள்ளிகளில் ஆசிரியர்கள் விழிப்பு உணர்வை ஏற்படுத்த வேண்டும். கல்லூரிகள் பொறுப்பேற்க வேண்டும். மத அமைப்புகள் சமூக விழிப்பு உணர்வை வலுப்படுத்த வேண்டும். ஊடகங்கள் பரபரப்பை அல்ல, பொறுப்பு உணர்வை விதைக்க வேண்டும். அரசு கடத்தல் கும்பல்களை இரும்புக்கை கொண்டு ஒடுக்க வேண்டும். அதே நேரத்தில் போதைக்கு அடிமையானவர்களைக் குற்றவாளிகளாக மட்டுமல்லாமல், மறுவாழ்வு தேவைப்படும் மனிதர்களாகவும் அணுக வேண்டும்.

போதைப் பொருளுக்கு எதிரான போராட்டம் காவல்துறையின் போராட்டம் மட்டுமல்ல; அது ஒவ்வொரு பெற்றோரின் போராட்டம், ஒவ்வொரு ஆசிரியரின் போராட்டம், ஒவ்வொரு குடிமகனின் போராட்டம். இன்று நாம் அமைதியாக இருந்தால், நாளை நம் வீட்டு வாசலையே போதை தட்டும். ஒரு சமூகத்தை ஆயுதங்கள் இல்லாமல்கூட அழிக்க முடியும் என்பதற்கு போதைப் பொருளே மிகப்பெரிய சான்று. எனவே ‘போதை இல்லா தமிழ்நாடு’ என்பது அரசின் திட்டமாக மட்டும் இருக்கக் கூடாது; ஒவ்வொரு குடும்பத்தின் உறுதிமொழியாக மாற வேண்டும். அதுவே நம் பிள்ளைகளுக்கும், நம் சமூகத்திற்கும், நம் நாட்டிற்கும் நாம் செய்யும் மிகப் பெரிய முதலீடாக இருக்கும்.

**போதைப் பொருளுக்கு எதிரான போராட்டம் காவல்துறையின் போராட்டம் மட்டுமல்ல; அது ஒவ்வொரு பெற்றோரின் போராட்டம், ஒவ்வொரு ஆசிரியரின் போராட்டம், ஒவ்வொரு குடிமகனின் போராட்டம். இன்று நாம் அமைதியாக இருந்தால், நாளை நம் வீட்டு வாசலையே போதை தட்டும். ஒரு சமூகத்தை ஆயுதங்கள் இல்லாமல்கூட அழிக்க முடியும் என்பதற்கு போதைப் பொருளே மிகப்பெரிய சான்று.**

# மது போதை இல்லா நாள் நிச்சயம் வரும்



**ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு, புதுச்சேரி மண்டலம் மது, போதைக்கு எதிராக 'போதை இல்லா தமிழ்நாடு' பரைப்புரையை 2026 ஆகஸ்ட் 15 முதல் 31 வரை நடத்த திட்டமிட்டுள்ளது. இந்தப் பரப்புரையின் அமைப்பாளரான மு.முஹம்மது ரியாஸை சமரசம் இதழுக்காகச் சந்தித்தோம்.**

- **மது போதை எதிர்ப்புப் பரப்புரை எதற்காக?**

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கடந்த 75 ஆண்டுகளாக இந்த மண்ணில் பல்வேறு களங்களில் மக்கள் பணி ஆற்றி வருகிறது. மக்கள் பிரச்னையை முன்வைத்து, சமுதாய நலன்களைக் காக்க எத்தனையோ பரப்புரைகளை நாங்கள் முன்னெடுத்துள்ளோம். அதுபோலவே மனிதகுலத்தை நாசப்படுத்தும் மது போதையிலிருந்து மனித சமுதாயத்தை மீட்டெடுக்க இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளோம்.

- **இந்தப் பரப்புரையின் பங்கேற்பாளர்கள் யார்?**

மது போதை எதிர்ப்புப் பரப்புரையை தனி இயக்கம் சார்ந்த வேலையாக முன்னெடுத்துச் செல்லாமல் தமிழக பொதுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து மது போதைக்கு எதிராக போராடி மது போதை இல்லா தமிழ்நாட்டை உருவாக்குவதே எங்களின் நோக்கம். ஏற்கனவே பல மாநிலங்களில் மது ஒழிப்பு சாத்தியமாகி இருக்கிறது. அதுபோலவே தமிழ்நாட்டிலும் சாத்தியப்படுத்த முடியும் என்று மீண்டும் மக்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

- **பொதுமக்களிடம் விழிப்புஉணர்வை ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் திட்டங்கள் என்ன?**

முகநூல், யூடியூப் ஷார்ட்ஸ், இன்ஸ்டாகிராம் ரீல்ஸ், ட்விட்டர் பதிவுகள், செய்தித்தாள் கட்டுரைகள், மின் சுவரொட்டிகள், பொது இடங்களில் டிஜிட்டல் திரை காணொளி வாகனம், மாரத்தான், பேரணி, மனிதச் சங்கலி நிகழ்ச்சி, துண்டுப் பிரசுரம் விநியோகம், முக்கிய இடங்களில் ஃபிளெக்ஸ் பலகை, செல்ஃபி பாயிண்ட், கார்னர் பாயிண்ட், சமரசம் சிறப்பிதழ், கார், ஆட்டோ ஸ்டிக்கர்கள் விநியோகம் எனப் பல வழிகளிலும் மக்களிடம் விழிப்பு உணர்வை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

கண்காட்சி(Expo), போதை விழிப்புஉணர்வு குறித்த புத்தகம் வெளியீடு, பத்திரிகையாளர் சந்திப்பு, சமூக ஊடக செல்வாக்காளர்கள் (Influencers) சந்திப்பு, பாட்காஸ்ட், வட்ட மேஜை மாநாடு ஆகியவற்றையும் முன்னெடுக்க உள்ளோம்.

- **மாணவர்களிடம் போதைப் பழக்கம் அதிகரித்து வருகிறதே.. அவர்களுக்காக சிறப்புக் கவனம் செலுத்துகின்றீர்களா?**

மாணவர்களையும் நாம் கவனத்தில் கொண்டுள்ளோம். ஆகஸ்ட் 29ஆம் நாள் மாணவர்களுக்கான விளையாட்டு நிகழ்ச்சி, உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியைத் திட்டமிட்டுள்ளோம். பள்ளிகளில் விழிப்பு உணர்வு நிகழ்ச்சிகள், கல்லூரி விடுதிகள் மாணவர்கள் சந்திப்பு, இளைஞர்களுக்கு போதைப் பொருள் அடிமைத்தனத்தின் ஆபத்துகள் குறித்து விழிப்பு உணர்வு ஏற்படுத்த திட்டங்கள் வகுத்துள்ளோம்.

- **அரசின் கவனத்தை ஈர்க்க என்ன செய்யப் போகின்றீர்கள்?**

தமிழ்நாட்டில் 22.5% மக்கள் போதைக்கு அடிமையாகியுள்ளனர். இளையோர் மத்தியில் போதைப்பொருள் பயன்பாடு ஐந்து ஆண்டுகளில் 210% அதிகரித்துள்ளது, இது ஒரு வளர்ந்து வரும் நெருக்கடியாகும். எனவே அரசின் கவனத்தைப் பெற திட்டமிட்டுள்ளோம்.

QR குறியீட்டுடன் கூடிய கையெழுத்து இயக்கம் மேற்கொள்ளப்பட்டு மாவட்ட ஆட்சியரிடம் சமர்ப்பிக்கப்படும். துறை சார்ந்த அமைச்சர்கள், ஆளுநரைச் சந்திப்பதன் மூலம் இந்தப் பரப்புரைக்கு அரசின் ஆதரவைப் பெற உள்ளோம். கொள்கை மாற்றங்களுக்கான பரிந்துரைகளையும் வழங்க உள்ளோம். 234 சட்டமன்ற உறுப்பினர்கள், 40 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கடிதம், மின்னஞ்சல் அனுப்புதல், நேரடி சந்திப்புக்கும் திட்டம் வகுத்துள்ளோம்.

- **போதைக்கு அடிமையானவர்களை மீட்க திட்டம் உள்ளதா?**

போதைப்பொருள் அடிமைத்தனம் என்பது ஒரு சிக்கலான நோயாகும். இது உளவியல், உயிரியல், சமூக காரணிகளால் தூண்டப்படலாம். மன அழுத்தம், பதட்டம், மனச்சோர்வு போன்ற மனநலப் பிரச்னைகள், சமூக அழுத்தம், தனிமை, போதிய ஆதரவின்மை ஆகியவை மக்கள் போதைக்கு அடிமையாகி, அதிலிருந்து மீள சிரமப்படுவதற்கு முக்கிய காரணிகளாகும். போதைக்கு அடிமையானவர்களை மீட்டெடுக்க அரசு, தன்னார்வ நிறுவனங்களுடன் சேர்ந்து முயற்சி மேற்கொள்வோம்.

- **TASMAC வருவாய் ஏன் ஒரு கொள்கை முரண்பாட்டை உருவாக்குகிறது?**

‘பாம்பால் உடலை மட்டுமே அழிக்க முடியும்; ஆனால் மதுவின் சாபமோ உள்ளிருக்கும் ஆன்மாவையே சிதைத்துவிடுகிறது’ என்றார் காந்தி. தேர்தல் காலங்களில் மது படிப்படியாக ஒழிக்கப்படும் என்று அறிவிப்பதோடு முடிந்துவிடுகிறது.

தமிழ்நாட்டில் போதைப்பொருள் அடிமைத்தனம் ஓர் ஆழமான நிதிக் காரணங்களுடன் கூடிய பொதுச் சுகாதார அவசர நிலையாக உருவாகியுள்ளது. இந்த நெருக்கடியின் தீவிரத்தை எடுத்துக்காட்டவும், கொள்கை வகுப்பவர்கள், பொதுமக்களை விழிப்பு உணர்வூட்டவும், நிலையான தீர்வுகளை நோக்கிப் பயணிப்பதை வலியுறுத்துவதும் இந்தப் பரப்புரையின் ஒருபகுதி.

TASMAC மொத்த மாநில வருவாயில் 14 முதல் 16 விழுக்காடு பங்களிக்கிறது. இது அரசுக்கு கணிசமான வருவாயை ஈட்டினாலும் மறுபுறம் மதுபான பயன்பாடு,

> ***தமிழ்நாட்டில் 22.5% மக்கள் போதைக்கு அடிமையாகியுள்ளனர். இளையோர் மத்தியில் போதைப்பொருள் பயன்பாடு ஐந்து ஆண்டுகளில் 210% அதிகரித்துள்ளது, இது ஒரு வளர்ந்து வரும் நெருக்கடியாகும். எனவே அரசின் கவனத்தைப் பெற திட்டமிட்டுள்ளோம்.***

போதை அடிமைத்தனத்தால் ஏற்படும் சமூக, சுகாதாரச் செலவுகளையும் அதிகரிக்கிறது. இது வருவாய் ஈட்டுதல், பொது சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கான அரசின் கடமை ஆகிய வற்றுக்கு இடையே ஒரு கட்டமைப்புசார் முரண்பாட்டை உருவாக்குகிறது.

ஒருபுறம் அரசு மக்கள் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்று பல்வேறு சுகாதாரத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. சாலை விபத்துகளைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கிறது. போதைப் பழக்கத்திற்கு எதிராக விழிப்பு உணர்வு ஏற்படுத்துகிறது. இளைஞர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறுகிறது. மறுபுறம், அரசின் கட்டுப்பாட்டில் மதுபான விற்பனை நடைபெறுகிறது. இதுதான் கொள்கை முரண்பாடு.

ஓர் அரசு மக்கள் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்ற கொள்கையையும், 'மதுபான விற்பனையிலிருந்து அதிக வருவாய் பெற வேண்டும்' என்ற நோக்கத்தையும் ஒரே நேரத்தில் முன்னெடுக்கும்போது, இந்த இரண்டிற்கும் இடையிலான முரண்பாட்டை நாம் விவாதிக்க வேண்டியிருக்கிறது.

- **அரசுக்கு நீங்கள் வைக்கும் கோரிக்கை என்ன?**

அரசு மதுபான விற்பனையைப் படிப்படியாகக் குறைப்பதற்கான நீண்டகால கொள்கையை உருவாக்க வேண்டும். மதுவால் ஏற்படும் சமூக, பொருளாதாரச் செலவை அரசு முறையாக ஆய்வு செய்து பொதுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

மதுவைச் சார்ந்த வருவாய்க்கு மாற்றாக புதிய, நிலையான வருவாய் வழிகளை உருவாக்க வேண்டும். இளைஞர்களை போதைப் பழக்கத்திலிருந்து பாதுகாக்க வலுவான விழிப்பு உணர்வு, மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மதுவால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆலோசனை, சமூக ஆதரவு வழங்க வேண்டும்.

ஓர் அரசின் வெற்றி, எவ்வளவு வருவாய் ஈட்டியது என்பதில் மட்டும் இல்லை. அரசின் உண்மையான வெற்றி எத்தனை குடும்பங்களைப் பாதுகாத்தது? எத்தனை இளைஞர்களின் எதிர்காலத்தைக் காப்பாற்றியது? எத்தனை உயிர்களைப் பாதுகாத்தது? என்பதில்தான் இருக்கிறது. வருவாய் முக்கியமா? மக்களின் வாழ்க்கை முக்கியமா? அரசின் கஜானா முக்கியமா? குடும்பங்களின் நிம்மதி முக்கியமா? இன்றைய வருவாய் முக்கியமா? நாளைய தலைமுறையின் எதிர்காலம் முக்கியமா? எனவே பூரண மதுவிலக்கு அமல்படுத்த வேண்டும்.

- **இந்தப் பரப்புரையின் நீண்டகால இலக்குகள் என்ன?**

போதைப்பொருள் இல்லாத தலைமுறையை உருவாக்குவது, அடிமைத்தனத்தால் ஏற்படும் சமூக, பொருளாதார சுமையைக் குறைப்பது, ஒவ்வொரு குடிமகனுக்கும் ஆரோக்கியமான, பாதுகாப்பான எதிர்காலத்தை உறுதி செய்வது ஆகியவை இந்தப் பரப்புரையின் நீண்டகால இலக்குகளாகும்.

- **இந்தப் பரப்புரையின் மூலம் மது, போதையை ஒழித்துவிடலாம் என நம்புகின்றீர்களா?**

மது போதையை ஒழிப்பதற்காகத்தான் இந்தப் பரப்புரையை நடத்துகின்றோம். ஆனால் ஒரே மாதத்தில் இது நடந்துவிடாது. இது நீண்டகாலப் பயணம். வெறும் சட்டங்களினால் மட்டுமே ஒரு தீமையை முழுமுற்றாக ஒழித்துவிட முடியாது. சிந்தனை மாற்றமே அனைத்திற்கும் தீர்வு. மக்கள் மாற வேண்டும். மது, போதையின் தீமைகளைத் தொடர்ந்து எடுத்துரைக்க வேண்டும். இந்த உடல் ஓர் அமானிதம், இதைச் சீரழிக்கும் உரிமை எவருக்கும் இல்லை என்ற உணர்வு வேண்டும். இறையச்சம் இல்லாமல் இந்த உணர்வைக் கொண்டு வர முடியாது. மது போதை ஒழிக்க முடியாத தீமையல்ல. எல்லாரும் ஒன்றிணைந்தால் முற்றிலும் மது, போதையை ஒழிக்க முடியும். மது போதை இல்லா நாள் நிச்சயம் வரும். அது வரை நாம் தொடர்ந்து போராடிக் கொண்டே இருப்போம்.

● கப்ளிசேட்

# மது

# சமூக வீழ்ச்சியின் குறியீடு

மது என்பது பழங்காலத்திலிருந்தே மனித சமூகத்தின் ஒரு கொடிய நோயாக இருந்து வருகிறது. இது எண்ணற்ற மனித உயிர்களைப் பலிவாங்கி வருகிறது. உலகம் முழுவதும் மில்லியன் கணக்கான மக்களுக்குப் பயங்கரமான துயரத்தை ஏற்படுத்துகிறது. சமூகம் எதிர்கொள்ளும் பல பிரச்னைகளுக்கு மதுவே மூல காரணமாகும்.

அதிகரித்து வரும் குற்ற விகிதங்கள், அதிகரித்து வரும் மனநோய்கள் உலகம் முழுவதும் மில்லியன் கணக்கான சீரழிந்த குடும்பங்கள் பற்றிய புள்ளிவிவரங்கள் மதுவின் அழிவு சக்திக்கு மௌனமான சாட்சியங்களை வழங்குகின்றன.

மது அருந்துவதால் உடனடியாக மரணம் ஏற்படாவிட்டாலும், படிப்படியாக என்னென்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை அறிந்து கொள்வது அவசியமாகும். மதுவின் பொதுவான மூலக்கூறு ஈத்தைல் ஆல்கஹால் (Ethyl alcohol) ஆகும். மது அருந்துவதால் கிளர்ச்சி(Excitement) ஏற்படுவதால் தயக்கங்களில் இருந்து மெதுவாக விடுதலையும், சுதந் திரமான மனநிலையும் ஏற்படுகிறது. ஆல்கஹாலின் அணுக்கள் மிகச் சிறியதாக இருப்பதால், நொதிகளின்(Enzymes) உதவியுடன் செரித்து ரத்தத்தில் கலக்காமல், சவ்வூடுபரவல் மூலம் நேரடியாக வெகுவிரைவில் ரத்தத்தில் கலக்கிறது. அதனால்தான் உடனடியாக போதை ஏற்படுகிறது.

வேடிக்கையாக மிகுந்த தன்னம்பிக்கை ஏற்படுத்துவதைப்போல தோன்றும். சுய கட்டுப்பாட்டை மெதுவாக இழக்கும் போது ரகசியங்களை உளர ஆரம்பிப்பார்கள். நல்ல மரியாதையும், பண்புகளும் மறக்க ஆரம்பிக்கும். ஆடை ஒழுங்காக உள்ளதா எனக் கவனம் இருக்காது. இரத்தத்தில் 20 மி.கி ஆல்கஹால் இருந்தாலே பார்க்கும் திறன் குறையும். இரத்தத்தில் 30 மி.கி ஆல்கஹால் இருந்தால் தசை கட்டுப்பாடு இழக்கும். தொடு உணர்வுகள் குறையும். சிந்தனை, புரிந்துணர்வு, மதிப்பிடும் திறன் ஆகியவை குறையும். இரத்தத்தில் 50 மி.கி ஆல்கஹால் இருந்தால் வாய் வார்த்தைகள் குளறுதல், நடையில் தள்ளாட்டம், அதிக மயக்கம், ஞாபகமறதி, அதிகக் குழப்பம், ஆகியவை ஏற்படும். பார்வைத்திறன் குறைவதால் நல்ல வெளிச்சத்தில் உள்ள பொருட்களை மட்டுமே பார்க்க முடியும்.

காலம், நேரம், தூரம் மதிப்பீடுகள் குறையும். அதனால் சாலையில் வரும் வாகனங்களின் வேகம், எவ்வளவு தூரத்தில் வருகிறது என்று கணிக்க முடியாததாலேயே மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டினால் நிறைய விபத்துகள் ஏற்படுகின்றன. மது அருந்துவதால் உடல் நலத்தில் பாதிப்புகள் ஏற்படுவதைத் போலவே மனநலத்திலும் கடுமையான பாதிப்புகள் ஏற்படுகின்றன. மன அழுத்தம், பதட்டம், மனச்சோர்வு, நினைவாற்றல் குறைவு, தீர்மானம் எடுக்கும் திறன் குறைவு, குடும்பத் தகராறுகள், பொருளாதாரச் சிக்கல்கள், வேலைத் திறன் குறைதல், மரியாதை இழப்பு, விபத்துகள், உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

உடலில் கல்லீரல் பாதிப்பு (சிரோஸிஸ் கொழுப்பு கல்லீரல் நோய்), உயர் ரத்த அழுத்தம், இதய நோய்கள், வயிற்றுப் புண், செரிமான கோளாறுகள், மூளை, நரம்பு மண்டல

பாதிப்புகள், சில வகை புற்றுநோய்களின் அபாயம் அதிகரிப்பு என நோய்களின் கூடாரமாக உடல் மாறிப் போகிறது.

தமிழக மக்கள் இன்னும் தொடர்ந்து முப்பது ஆண்டுகள் மதுவைக் குடித்தால், தமிழர்களின் DNAவே அழியும். மதுவை ஒழிப்பதே சரியான தீர்வாக இருக்கும் என்று பொது சுகாதார நிபுணர் குழந்தைசாமி அதிர்ச்சியான ஒரு தகவலை தெரிவிக்கிறார். ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது, 1971ஆம் ஆண்டு தமிழகத்தில் மதுவிலக்கு விலக்கிக் கொள்ளப்பட்டது. அன்று முதல் இன்று வரை இரண்டு தலைமுறைகளாக தமிழக மக்கள் மது குடிக்கின்றனர். அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளின் மரபணுவிலும் இதன் தாக்கம் இருக்கும். மூன்றாம் தலைமுறையும் தொடர்ந்து மதுவைக் குடித்தால், குழந்தைகளே மதுவுக்கு அடிமையாகும் வாய்ப்புள்ளதாகக் கடுமையாக எச்சரிக்கிறார்.

1971ஆம் ஆண்டு மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டு மது குடிப்பது எல்லோருக்கும் எளிதாக்கப்பட்டது. அதனை இன்னும் எளிமையாக்கும் விதமாக 1983ஆம் ஆண்டு டாஸ்மாக் உருவாக்கப்பட்டு மது விற்பனையை அரசே நேரடிக் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டது. டாஸ்மாக் மது விற்பனையில் அரசுக்கு ஏராளமான வருமானங்கள் கிடைத்தாலும் மதுவின் விளைவால் பல குடும்பங்கள் நடுத்தெருவிற்கு வந்து விடுகின்றன. பல குழந்தைகள் தந்தையை இழந்தும், பல பெண்கள் கணவனை இழந்தும் மிகப்பெரிய சமூக வீழ்ச்சியைச் சந்திக்கின்றனர்.

டாஸ்மாக் மதுக்கடைகளை மூட பல பொதுநல அமைப்புகளும், பாதிக்கப்பட்ட குடும்பங்களும் பல்வேறு போராட்டங்களை நடத்தினாலும், ஆட்சி மாறியும் இன்றுவரை டாஸ்மாக் அவலம் தொடரவே செய்கிறது.

அதிலும் பள்ளிகள், கல்லூரிகள், குடியிருப்புகள், மத வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றிக்கு அருகில் இருக்கும் கடைகளை மூட வேண்டும் என்று போராட்டங்கள் நடத்தினாலும், பெரிய மாற்றங்கள் எதுவும் நடைபெறவில்லை. மதுபான வருமானத்திற்குப் பதிலாக வேறு வருமானங்களை ஏற்பாடு செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில் பெறுப்பேற்றுள்ள தவெக அரசு 700க்கு மேற்பட்ட மதுபானக் கடைகளை மூடி விட்டதாகக் கூறப்படுகிறது.

தமிழகத்தில் டாஸ்மாக்(TASMAC) வரலாறு என்பது மதுவிலக்குக் கொள்கைகள், அரசியல் மாற்றங்கள், அரசு வருவாய் சார்ந்த பல கட்டங்களைக் கொண்டது. இது 1937ஆம் ஆண்டு மதுவிலக்குடன் தொடங்கி 1983ஆம் ஆண்டு டாஸ்மாக் உருவாகும் வரை இந்த மது விலக்கு பல பரிணாமங்களைப் பெற்றது. 1937 ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தில் சேலம் மாவட்டத்தில் ராஜாஜியால் முதன் முதலாக மதுவிலக்கு கொண்டு வரப்பட்டது. 1947-71 வரை தமிழகத்தில் முழு மதுவிலக்கு அமலில் இருந் தது. 1971ஆம் ஆண்டு கலைஞர் தலைமையிலான அரசு மதுவிலக்கை தளர்த்திகள், சாராயம் விற்பனைக்கு அனுமதி அளித்தது. இது 1974ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது.

1983 மே23 ஆம் தேதி அன்றைய முதல்வர் MGR ஆட்சிக்காலத்தில் இந்திய



தயாரிப்பான வெளிநாட்டு மதுபானங்களை (IMFL) மொத்தமாக விற்பனை செய்ய தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (TASMAC) தொடங்கப்பட்டது. தொடக்கக் காலத்தில் டாஸ்மாக் மொத்த விற்பனையாளராக மட்டுமே இருந்தது. ஆனால் சில்லறை விற்பனை, பார்கள் தனியார் வசம் இயங்கி வந்தன. MGR மதுபானத்தை உற்பத்தி செய்வதற்கு தமிழ்நாடு ஸ்பிரிட் கார்ப்பரேசன் (டாஸ்கோ) என்ற நிறுவனத்தைத் தொடங்கி வைத்தார். மது அருந்தும் ஏழைகளுக்கு மலிவான, நல்ல தரமான மதுபானத்தை வழங்குவதே நோக்கம் என்று கூறப்பட்டது. 1987ஆம் ஆண்டு டாஸ்கோ கைவிடப்பட்டு மதுபான உற்பத்தியை தனியார் நிறுவனங்கள் கையகப்படுத்தின.

2003ஆம் ஆண்டு சில்லறை மதுபானக் கடைகளை அரசே ஏற்று நடத்தும் முடிவை எடுத்தது. தனியார் ஏல முறைகள் மாற்றப்பட்டு, முழுமையான சில்லறை, மொத்த விற்பனை உரிமையை டாஸ்மாக் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. தமிழ்நாட்டின் சொந்த வரி வருவாயில் ஆண்டு விற்பனை 50,000 கோடியைக் கடந்து செல்கிறது. மது அருந்தும் பொதுமக்களின் ஆரோக்கியத்தைப் பாதிக்கும் கள்ளச்சாராயம் போலி மதுபான விற்பனையை ஒழிப்பதற்கே சில்லறை விற்பனையை அரசாங்கமே கையகப்படுத்தியது என்று கூறப்பட்டது.

ஆண்டுதோறும் டாஸ்மாக் வருமானம் அதிகரித்துக்கொண்டே சென்றது. மாவட்ட ஆட்சியர்களால் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு மதுபானம் விற்கப்பட்டது. 1937ஆம் ஆண்டு மெட்ராஸ் மாகாணத்தில் சேலம் மாவட்டத்தில் முதன் முதலில் ராஜாஜியால் அமல்படுத்தப்பட்ட மதுவிலக்கு கொஞ்சம் கொஞ்சமாக தமிழகம் முழுவதும் அமல்படுத்தப்பட்டது. மதுவிலக்கால் ஏற்பட்ட இழப்பை ஈடுகட்ட அன்றைய காங்கிரஸ் அரசால் விற்பனை வரி அறிமுகப்படுத்தப்பட்டது.



**இந்த மது அடிமைகளிடமிருந்து உறிஞ்சப்படும் பணத்தில், அரசு இலவசங்களை வழங்குவது வெட்கக்கேடானது. மதுபானத்தின் அமைப்புகள் ஊழல்கள் நிறைந்ததாகவும், ஒழுக்கக் கேடுகளின் கூடாரமாகவும் மாறி உள்ளது.**

மது அருந்த விரும்பிய தனி நபர்களுக்கு அரசாங்கமே அனுமதிச் சீட்டை வழங்கியது. இந்திய விடுதலைக்குப் பிறகும் 1952ஆம் ஆண்டு வெற்றி பெற்று ஆட்சி அமைத்த காங்கிரஸ், மதுவிலக்கைப் பின்பற்றியது. மெட்ராஸ் மாகாணத்திலிருந்து பிரிக்கப்பட்ட ஆந்திரப் பிரதேசம், மைசூர் (கர்நாடகா) ஆகியவை மதுவிலக்கைப் பின்பற்றவில்லை. புதுச்சேரியும், காரைக்காலும் மதுவிலக்கைப் பின்பற்றவில்லை.

டாஸ்மாக் விற்பனையகங்கள் இந்திய தயாரிப்பான வெளிநாட்டு மதுபான வகைகளை விற்பனை செய்கிறது. விஸ்கி, பிராந்தி, ஜின் போன்ற மதுபானங்களை விற்கிறது. இவை கரும்பு பாகிலிருந்து தயாரிக்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட சாராயத்திலிருந்து உருவாக்கப்படுகின்றன. சுத்திகரிக்கப்பட்ட சாராயத்துடன் ரசாயனங்களைக் கலந்து, ஆக்டிவேட் கார்பன் மூலம் சுத்திகரிக்கப்படும் செயல் முறைகளில் இருந்து ஆல்கஹால் உருவாகிறது. ஆல்கஹால் பல தொழில்களுக்குப் பயன்பட்டாலும், மனித நுகர்வுக்கான ஆல்கஹால் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட தரநிலைகளுக்கு இணங்க வேண்டும்.

அனுமதிக்கப்பட்ட அதிக பட்ச வீரியம் 75 டிகிரி ப்ரூஃப் ஆகும். இது கன அளவில் 42.8% ஆல்கஹாலுக்குச் சமமானதாகும். சுத்திகரிக்கப்படாத நிலையில், சுத்திகரிக்கப்பட்ட சாராயத்தில் 95.6% ABV உள்ளது. மேலும் இதனை இப்படியே உட்கொண்டால் குடல்களை எரித்து விடும். டாஸ்மாக் கடைகளில் விற்கப்படும் வீரியம் குறைக்கப்பட்ட இந்திய தயாரிப்பு வெளிநாட்டு மதுபானமும் ஒரு மெதுவான விஷமாகும். (Slow poison). இது இறப்பை விரைவுபடுத்துகிறது.

ஆகவே உயர்நீதிமன்றம் தலையிட்டு டாஸ்மாக் கடைகளில் விற்கப்படும் இந்திய தயாரிப்பான வெளிநாட்டு மதுபானங்களின் தரத்தை சரிபார்க்க உத்தரவிட்டது. டாஸ்மாக் கடைகளில் விற்கும் மதுபானங்களின் தரம், நம்பகத் தன்மை, ஆல்கஹால் அளவு ஆகியவை கடுமையான கவலைகளை எழுப்புகின்றன. ஆல்கஹாலின் அளவு, கடுமையான தரக்கட்டுப்பாடுகளைப் பராமரிக்க வேண்டிய சூழலில், இந்தியா முழுவதுமுள்ள இந்திய தயாரிப்பு வெளிநாட்டு மதுபான உற்பத்தியாளர்கள் டாஸ்மாக் நிறுவனத்தால் ஓரங்கட்டப்பட்டு தமிழகத்தில் ஆளும், எதிர்கட்சிகளின் முக்கியப் பிரமுகர்களுக்கு சொந்தமான உள்ளூர் மதுபான ஆலைகளுக்கு ஆர்டர் கொடுக்கப்படுகின்றன. இதனால் இதனை எந்த அரசியல் கட்சிகளும் பெரிதாகக் கண்டு கொள்வதில்லை.

டாஸ்மாக் அதிகாரிகள் கொள்முதல் செயல்முறைகள் மிகுந்த ஊழல்கள் நிறைந்ததாக உள்ளன. சில தெளிவற்ற தரம் குறைவான பிராண்டுகள் தங்கள் மீது திணிக்கப்படுவதாகவும் அவற்றின் ஆல்கஹால், ரசாயன உள்ளடக்கங்கள் குறித்து தங்களுக்குத் தெளிவாகத் தெரியாது என்றும் அதிகாரிகள் கூறுவதிலிருந்து இதில் கொள்ளை லாபம் கிடைப்பதால் இதனை அரசியல்வாதிகள் சரியாக பயன்படுத்திக் கொள்கின்றார்கள்.

ஒரு கோடிக்கும் அதிகமான டாஸ்மாக் குடி அடிமைகள் ஒரு நாளைக்கு தங்கள் வருமானத்தில் பாதியை சாராயத்திற்காக மட்டுமே செலவு செய்கின்றனர். இது தமிழ் சமூகத்தின் குறைந்த வருமானம் ஈட்டும் அடித்தட்டு மக்களின் பொருளாதாரம், வாழ்வாதாரம், ஆரோக்கியத்தைச் சிதைத்து அவர்களை மிகவும் கீழான நிலைக்குத் தள்ளியுள்ளது. இந்த மது அடிமைகளிடமிருந்து உறிஞ்சப்படும் பணத்தில், அரசு இலவசங்களை வழங்குவது வெட்கக்கேடானது. மதுபானத்தின் அமைப்புகள் ஊழல்கள் நிறைந்ததாகவும், ஒழுக்கக் கேடுகளின் கூடாரமாகவும் மாறிஉள்ளது.

ஆட்சியிலுள்ள கட்சிகள் தங்களின் சுய லாபத்துக்காக மதுவிலக்கை ஏதாவது ஒரு காரணம் கூறி அமல்படுத்துவதில்லை. டாஸ்மாக் கடைகளை மூடச் சொல்லி நடத்தப்பட்ட போராட்டங்கள் எல்லாம் ஆட்சியாளர்களால் நசுக்கப்பட்டன. டாஸ்மாக்கிற்கு எதிராகப் பாடியதற்காக நாட்டுப்புற கலைஞர் கோவன் கைது செய்யப்பட்டார். காந்தியவாதி சாம்பா சிவராவ் காணாமல் போனார். சென்னை பெருவெள்ளத்தின் போது மற்ற கடைகள் எல்லாம் மூடப்பட்டிருந்த நிலையிலும் டாஸ்மாக் மதுபானக் கடைகள் திறக்கப்பட்டு பரபரப்பாக இயங்கின.

தமிழகத்தில் கள்ளக்குறிச்சி பகுதியில் கள்ளச்சாராயம் அருந்தி 66 பேர் உயிரிழந்த சம்பவம் நாட்டையே உலுக்கியது. மதுபானங்கள் விற்பனையை வரைமுறைப் படுத்தும் வகையில் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத் திருத்த மசோதா திமுக அரசால் 2024 ஜூன் 29ஆம் தேதி சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டு ஆளுநர் அனுமதியுடன் சட்டமாக்கப்பட்டது. சட்டவிரோதமாக 100 லிட்டர் மதுவுக்கு மேல் ஏற்றுமதி, இறக்குமதி, இருப்பு வைத்திருந்தால் மூன்று முதல் ஏழு ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனையும், 2 முதல் 3 இலட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்.

50-100 லிட்டர் வரை சட்டவிரோதமாக ஏற்றுமதி, இறக்குமதி, இருப்பு வைத்திருந்தால் 2 முதல் 5 ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனையும், 1 முதல் 2 லட்சரூபாய் அபராதமும் விதிக்கப்படும். 50 லிட்டர் வரையிலான மதுபானங்களை சட்டவிரோதமாக ஏற்றுமதி, இறக்குமதி, இருப்பு வைத்திருந்தால் 1 முதல் 3 ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனையும், 50,000 முதல் ஒரு இலட்சம் வரை அபராதமும் விதிக்கப்படும்.

மதுவை உட்கொள்வதால் இறப்பை ஏற்படுத்தும் சட்டவிரோதமான மதுபானங்களை விற்பனை செய்தால், ஆயுள் கால கடுங்காவல் தண்டனையும், பத்து இலட்சத்திற்குக் குறையாத அபராதமும் விதிக்கப்படும். மது அருந்துவதற்கு உரிமம் இல்லாத இடங்களை மதுபானம் அருந்த பயன்படுத்தினால் வேறு எதற்கும் பயன்படுத்த முடியாமல் அந்த

இடம் பூட்டி சீல்வைக்கப்படும். கள்ளச் சாராய விற்பனையைத் தடுக்க இவ்வாறு கடுமையான சட்டம் அமல்படுத்தப்பட்டது.

மதுவைத் தொடர்ந்து உட்கொண்டவர்கள் திடீரென நிறுத்தினாலும் அது அவர்களின் மனங்களை கடுமையாகப் பாதிக்கிறது. மது விலக்கை அரசாங்கம் கொண்டு வரும்போது, மதுவால் அடிமையானவர்களை அதிலிருந்து மீட்கத் தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். சுகாதார பாதுகாப்பு, போதை மீட்பு மையங்கள், போதை எதிர்ப்பு விழிப்பு உணர்வு ஆகியவற்றை உருவாக்க வேண்டும். மதுவிலக்கைத் திறம்படச் செயல் படுத்த கடுமையான சட்ட அமலாக்கம், காவல் துறை செயல்பாடுகளை உருவாக்க வேண்டும்.

மதுவை ஒழிப்பது சட்ட நடவடிக்கை களால் மட்டுமே சாத்தியமில்லை. தனிநபர், குடும்பம், சமூகம், அரசு ஆகிய அனைத்து தரப்பினரும் இணைந்து செயல்பட வேண்டும். பள்ளி, கல்லூரி நிலையிலேயே மதுவின் தீமைகள் குறித்து விழிப்பு உணர்வு ஏற்படுத்த வேண்டும். குடும்பங்களில் நல்ல இணக்கமான உறவுகள் இருக்க வேண்டும். குடும்பத்தினர்கள் கண்காணிக்க வேண்டும். மதுவுக்கு அடிமையானவர்களுக்கு மறு வாழ்வு(De-Addiction) மையங்களை அதிகரிக்க வேண்டும். இளைஞர்களை விளையாட்டு, கலை, சமூகசேவை போன்ற நேர்மறையான செயல்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும். திரைபடங்கள், விளம்பரங்கள், சமூக ஊட கங்கள் ஆகியவை மதுவை கவர்ச்சியாகக் காட்டுவதை நிறுத்த வேண்டும். பெண்கள், சமூக அமைப்புகள் உள்ளூர் நிர்வாகம் இணைந்து விழிப்புஉணர்வு இயக்கங்களை நடத்த வேண்டும்.

வேலை வாய்ப்பு, பொருளாதாரச் சிக்கல்கள், மதுவை நாடும் காரணங்களை ஆராய்ந்து அதனைச் சரிசெய்ய குடும்பங்கள் சமூகம் அரசு என அனைவரும் முயல வேண்டும். மது இல்லாத சமூகமே எல்லா வகை களிலும் வளர்ச்சியை நோக்கி நகர முடியும் என்ற புரிதல்களை உருவாக்க வேண்டும்.


HIJAZ
LEATHERS PVT. LTD.,

Tanners & Exporters of
Finished Leathers & Fashion Gloves

HEAD OFFICE :
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

TANNERY :
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

GLOVE FACTORY :
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com



# சமரசம் ஆசிரியர் H. அப்துர் ரகீப் அவர்களுக்கு கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் விருது

**SDPI** சார்பாக ஒவ்வொரு ஆண்டும் சமூகத்தின் பல்வேறு துறைகளில் சிறப்பாகப் பங்காற்றிய ஆளுமைகளுக்கு தமிழ்ச்சுடர் விருதுகள் வழங்கப் பட்டு வருகின்றன. பத்தாவது ஆண்டாக நடைபெறும் இந்த விருது வழங்கும் விழா இந்த ஆண்டு சென்னை புரைசைவாக்கத்திலுள்ள YMCA அரங்கில் ஆகஸ்ட் 01ஆம் நாள் நடைபெற்றது.

2026ஆம் ஆண்டிற்கான கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் விருது ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மேனாள் தமிழ்நாடு தலைவரும் சமரசம் மாதமிருமுறை இதழின் ஆசிரியரு மான H.அப்துர் ரகீப் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இவ்விழாவில் கவி.கா.மு.ஷெரீஃப் விருது சேயன் இப்ராகிமுக்கும், சட்ட மேதை டாக்டர் அம்பேத்கர் விருது முனைவர் சபூர் அலீக்கும், பேரறிஞர் அண்ணா விருது ஆழி செந்தில் நாதனுக்கும், புரட்சியாளர் பழனிபாபா விருது மர்ஹூம் S.M.பாக்கருக்கும், அன்னை தெரேசா விருது ஜாஸ்மின் அபுபக்கருக்கும், வணிக மேதை B.S. அப்துர் ரஹ்மான் விருது முஹம்மது யஹ்யாவுக்கும், அறிவுக்கடல் சயீத் சாஹிப் விருது A. யா மொய்தீனுக்கும், கல்வித் தந்தை மௌலானா அபுல்கலாம் ஆசாத் விருது மரியஸீனா ஜான்சனுக்கும், தந்தை பெரியார் விருது சத்யராஜுக்கும் வழங்கப்பட்டது.

**இந்த நிகழ்வில் ஏற்புரையாற்றிய சமரசம் ஆசிரியர் H.அப்துர் ரகீப் அவர்கள் தாம் கடந்து வந்த பாதையை நெகிழ்வுடன் குறிப்பிட்டார்.**

‘நான் வணிகத்தில் சிறந்த வாணியம் பாடியைச் சேர்ந்த தோல் வியாபாரி. எனது பாட்டனார் குண்டு அப்துல் சத்தார் இந்தியாவிலேயே முதன் முதலில் மைசூரில் தோல் வியாபாரம் செய்தவர். நான் இஸ்லா மியக் கல்லூரியில் பி.எஸ்.சி வேதியியல் துறையில் பட்டம் பெற்றேன். வசதியான குடும்பச் சூழலில் வாழ்ந்தாலும் பொரு ளாதார இழப்பின் காரணமாக நான் உயர் கல்விக்குச் செல்ல முடியவில்லை. என் விருப்பம் பொருளாதார, அரசியல் சார்ந்த கல்வியாக இருந்தது. பிறகு ஒரு தோல் நிறு வனத்தில் 7 ஆண்டுகள் எனது பணியைத் தொடர்ந்தேன். பிறகு லெதர் கார்மெண்ட்ஸ் கம்பெனியைத் தொடங்கினேன். வட்டி இல்லாமல் வியாபாரம் செய்ய வேண்டும் என்பது எனது இலக்காக இருந்தது.

அல்ஹம்துலில்லாஹ் 25 ஆண்டு களாக இலண்டனில் பெரிய தொழில் நிறுவனத்துடன் எந்தவித வட்டியும் இல் லாமல் வியாபாரம் செய்தேன். பெரிய தொழிலதிபர்கள் வங்கியில் கோடிக் கணக்கில் கடன் வாங்க முடிகிறது. ஒரு விவ சாயியோ, மாணவனோ எளிதில் கடன் வாங்க முடிவதில்லை. எனவே இந்தியா வில் வட்டி இல்லாத வங்கி உருவாக வேண்டும் என்பதற்காக என் வியாபாரத்தை விட்டு விட்டு முழுமையாகப் போராடிக் கொண்டிருக்கின்றேன்.

தொழுகை, நோன்பு, ஹஜ் குறித்து முஸ்லிம்கள் தெரிந்து வைத்துள்ள அளவு ஜகாத் குறித்து தெரிந்து கொள்ளவில்லை. முஸ்லிம்களிடம் இது குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்தி கூட்டு ரீதியான ஜகாத் விநியோக முறையைக் கொண்டு வர வேண்டும். இஸ்லாம் வறுமை இல்லாத சமுதாயத்தை உருவாக்கிக் காட்டியது. அதுபோல் கூட்டு ஜகாத் மூலம் நம்மால் வறுமையை முழுமையாக ஒழிக்க முடியும். அதற்காக நான் பாடுபட்டுக்

கொண்டிருக்கின்றேன். அதுபோல பெண்களுக்கான முக்கியத்துவத்தை நாம் வழங்க வேண்டும்.



M.A. ஜமீல் அஹமத்

எனக்கு வழிகாட்டியாக இருந்த வாணியம்பாடியைச் சேர்ந்த மட்டக்கார் எம்.ஏ.ஜமீல் அஹமத் சாஹிப் அவர்களை இந்த நேரத்தில் நான் நினைவு கூர்கின்றேன். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் செயல்மிக்க தலைவர்களில் ஒருவரான அவர்தம் வாழ்க்கையே இப்பணிக்காக அர்பணித்தார். இஸ்லாமிய நிறுவனம் அறக்கட்டளையின் உருவாக்கத்திலும், சமரசம் இதழ் தொடங்குவதற்காகவும், இஸ்லாமிக் சென்டர் வேலூர் உருவாக்கத்திலும் மூலவிதையாக இருந்தவர். திருக்குர்ஆனை அழகிய செந்தமிழில் கொண்டுவர அவர் எடுத்துக் கொண்ட முயற்சி அசாதாரணமானது. தமிழுக்கே புதிய அகராதிச் சொல்லை அதன் மூலம் கொடுத்துள்ளார். இந்த விருது வழங்கிய SDPIக்கு என் நன்றி.

H.அப்துர் ரகீப் அவர்கள் வாணியம்பாடியைச் சேர்ந்த H.அப்துல் மாலிக் சாஹிப் - ஷர்ஃபுன் நிஸா ஆகியோருக்கு 1948 ஆகஸ்ட் 15இல் மகனாகப் பிறந்தார். இவர் தோல் தொழில் நுட்பத்தில் இளங்கலைப் பட்டமும், பத்திரிகைத் துறையில் முதுகலை பட்டமும் பெற்றார்.

இவரது பாட்டனார் குண்டு அப்துல் சத்தார் சாஹிப் மிகப் பெரிய தோல் பதனிடும் தொழிற்சாலையின் உரிமையாளரும், தொழிலதிபரும் ஆவார். மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்களின் நண்பருமாவார். மௌலானா அபுல் கலாம் ஆசாத்துடன் சேர்ந்து இவரது பாட்டனாரும் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்காற்றி உள்ளார்.



இவரது துணைவியார் காகா சஃபூரா பேகம் உம்ராபாத்தில் உள்ள புகழ்பெற்ற ஜாமிஆ தாருஸ் ஸலாமின் பொறுப்பாளரான காகா முஹம்மத் உமர் சாஹிப் அவர்களின் மகளாவார். இளமையிலேயே இஸ்லாத்தின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டு இஸ்லாமிய இயக்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்டு துடிதுடிப்புடன் செயல்பட்டவர்.

H.அப்துர் ரகீப் அவர்கள் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், தமிழ்நாடு புதுச்சேரியின் மாநிலத் தலைவராகவும், இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்(IFT)யின், பொதுச்செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர். இவரது பொறுப்புக் காலத்தில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்களின் ஆன்மிக பயிற்சிற்காக இஸ்லாமிக் சென்டர் வேலூர், இஸ்லாமிக் சென்டர் மதுரை ஆகியவற்றை உருவாக்குவதில் உற்ற துணையாக திகழ்ந்தவர். தொலைக்காட்சி வரலாற்றில் முதன் முதலாக இஸ்லாமிய நிகழ்ச்சியை நடத்துவதற்கு வித்திட்டவர். இவரது அரும் பெரும் முயற்சியால் 1999ஆம் ஆண்டு மானுட வசந்தம் தொலைக்காட்சித் தொடர் தொடங்கப்பட்டது. சகோதர சமுதாயச் சொந்தங்களுக்கு இஸ்லாத்தைச் சொல்வதில் இத்தொடர் மிக முக்கியப் பங்காற்றியது.

சுனாமி பேரழிவின்போது அயராது பாடுபட்டவர் H.அப்துர் ரகீப். வீடுகளையும், உடைமைகளையும் இழந்து துன்பத்திற்குளான சகோரர்களின் துயரைத் துடைக்கும் வகையில் நாகூரில் 100 வீடுகளையும், கோட்டக்குப்பத்தில் 20க்கும் மேற்பட்ட வீடுகளையும் கட்டிக் கொடுக்க ஜமாஅத்தே இஸ்லாமியின் தலைவர் என்கின்ற முறையில் மும்முரமாக செயல்பட்டவர். 20க்கும் மேற்பட்ட கிராமங்களை ஜமாஅத்தின் சார்பாக தத்தெடுத்து அக்கிராம மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்காக உழைத்தவர்களில் முதன்மையானவர்.

தற்போது National Committee on Islamic Bankingயின் ஒருங்கிணைப்பாளராகவும், அகில இந்திய முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியத்தின்(All India Muslim Personal Law Board) நிறுவன உறுப்பினராகவும், வாணியம்பாடி இஸ்லாமிய பைத்துல் மாலின் தலைவராகவும், Human Welfare Foundation, New Delhiயின் அறங்காவலராகவும், சமரசம் மாதம் இருமுறை இதழின் ஆசிரியராவும், Board of Islamic Publication, New Delhi உறுப்பினராகவும், உம்ராபாத்தில் உள்ள ஜாமியா தாருஸ்ஸலாம் பல்கலைக்கழகத்தின் செயற்குழு உறுப்பினராகவும், தில்லியில் உள்ள சஹுலத் மைக்ரோ ஃபைனான்ஸ் சொசைட்டியின் அறங்காவலராகவும் Indian Centre for Islamic Finance, New Delhi பொதுச் செயலாளராகவும் பணியாற்றி வருகிறார்.

கடந்த இருபது ஆண்டுகளாக இந்தியா முழுவதும் வட்டியில்லா வங்கி (Interest Free Banking) முறையின் கருத்தை மக்களிடையே பரப்பி வருகிறார். வட்டியில்லா வங்கி முறை மூலம் சமூக ஒற்றுமையையும் பொருளாதார நீதியையும் ஏற்படுத்த வேண்டும் என்பதே இவரது நோக்கமாகும்.

இந்தியாவில் இஸ்லாமிய வங்கி, வட்டியில்லா வங்கி முறையை அறிமுகப்படுத்தும் நோக்கில் இந்திய நிதியமைச்சர், இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர், துணை ஆளுநர் திட்டக்குழுவின் துணைத் தலைவருடன் கலந்துரையாடியுள்ளார். வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தில்(Banking Regulation Act) திருத்தம் செய்வதற்கான தனியார் உறுப்பினர் மசோதா(Private Member's Bill) தொடர்பான வரைவு ஆவணத்தை நிபுணர்களுடன் இணைந்து தயாரித்துள்ளார்.

மரபுவழி வங்கிகளுடன் இணைந்து வட்டியில்லா வங்கி சேவை சாளரங்கள் (Interest Free Banking Windows) அமைப்பதற்கான விரிவான ஆவணத்தை நிபுணர்களுடன் இணைந்து தயாரித்து, இந்திய ரிசர்வ் வங்கிக்கும் நிதி அமைச்சகத்திற்கும் சமர்ப்பித்துள்ளார். டாக்டர் ரகுராம் ராஜன் தலைமையில் திட்டக் குழுவின் நிதித்துறை சீர்திருத்த உயர்மட்டக் குழுவுடன் கலந்துரையாடி, அதன் பரிந்துரைகளில் வட்டியில்லா வங்கி குறித்த கருத்துகள் இடம்பெற வழிவகுத்துள்ளார்.

இஸ்லாமிய நிதி, வங்கி முறையின் அவசியம், பயன்பாடு, சமூகப் பங்களிப்பு குறித்து பல்வேறு ஊடகங்கள் வாயிலாக தொடர்ந்து விழிப்பு உணர்வு ஏற்படுத்தியுள்ளார். அல் ஜாமியா அல்இஸ்லாமியா, இஸ்லாமிக் டெவலப்மெண்ட் வங்கியின் இஸ்லாமிய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனம் (Islamic Research and Training Institute & IRTI) இணைந்து நடத்திய சர்வதேச இஸ்லாமிய வங்கி மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுத் தலைவராகப் பணியாற்றியுள்ளார்.

இஸ்லாமிய வங்கியுடன் இந்தியாவில் கூட்டு ரீதியான ஜகாத் குறித்தும் H.அப்துர் ரகீப் பரவலாக விவாதித்துள்ளார். அதற்காக இந்தியா, உலக நாடுகளில் நடைபெற்ற ஜகாத் மாநாடுகளில் கலந்துகொண்டு திறனாய்வுகளை சமர்ப்பித்துள்ளார். 'இந்தியா 2047: இந்திய முஸ்லிம்களுக்கான செயல்திட்டம்' எனும் திறனாய்வுக் கட்டுரையை சமரசம் இதழின் மூலம் சமர்ப்பித்துள்ளார்.

சிறந்த எழுத்தாளராகவும், சிந்தனையாளராகவும் திகழ்பவர். மஸ்ஜிதுகளை மக்கள் சேவை மையங்களாக்குங்கள், அழைப்பியல் சிந்தனைகள் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். தமிழ், உர்து, ஆங்கில மொழிகளில் நூல்களையும், முன்னணி பத்திரிகைகள், இதழ்கள், காட்சி ஊடகங்கள், வலைதளங்கள் மூலமாக ஏராளமான கட்டுரைகள், உரைகள், திறானாய்வுகள் என இஸ்லாமியப் பொருளாதாரம், இஸ்லாமிய வங்கியியல் சார்ந்த பல்வேறு சிறந்த கருத்துகளை எழுதி இளம் தலைமுறையினரிடம் கொண்டு சேர்த்துள்ளார்.

2008இல் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய அமைப்பின் முதல் மாநில மாநாட்டில், H.அப்துர் ரகீபுக்கு சிறந்த பத்திரிகையாளர் விருது வழங்கப்பட்டது. தொழிலதிபராக, தோல் ஏற்றுமதியாளராக சிறந்து விளங்கிய இவருக்கு 1987 இலிருந்து பலமுறை சிறந்த ஏற்றுமதியாளருக்கான விருது வழங்கப்பட்டது. இவருடைய வெற்றிப் பயணத்தில் SDPI வழங்கிய தமிழ்ச்சுடர் காயிதே மில்லத் விருதும் அணிசேர்ந்துள்ளது.

# சமரசம் புதிர் போட்டி 16

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை 2026 ஆகஸ்ட் 31ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, 73050 40386 என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, samarasam.article @gmail.com என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந் தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகிய வற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி, G Pay எண் ஆகிய வற்றை அவசியம் குறிப்பிட வேண்டும்.

1. ‘மேலும் அவர்கள் எத்தகையோர் எனில், மானக்கேடான செயலைச் செய்துவிட்டால் அல்லது (ஏதேனும் பாவங்கள் செய்து) தமக்குத்தாமே அநீதி இழைத்துக் கொண்டால், உடனே அவர்கள் அல்லாஹ்வை நினைத்து, தம் பாவங்களுக்காக அவனிடம் மன்னிப்புக் கோருவார்கள். (ஏனெனில்) அல்லாஹ்வைத் தவிர பாவங்களை மன்னித்தருள்பவன் வேறு யார்? மேலும் தாம் செய்தவற்றில் அறிந்து கொண்டே பிடிவாதமாக இருக்கமாட்டார்கள்’ இந்த வசனம் இடம் பெற்றுள்ள திருக்குர்ஆன் அத்தியாயம்

   அ) அத்தவ்பா ஆ) ஆல இம்ரான்

2. தாவூத் (அலை) அவர்களின் தொழுகைதான் அல்லாஹ்வுக்கு விருப்பமானதாகும். அவர்கள் பாதி இரவு வரை உறங்குவார்கள். பிறகு எழுந்து தொழுது விட்டு மீண்டும் உறங்கு வார்கள். நள்ளிரவில் விழித்தெழுகின்ற போது இரவின் மூன்றிலொரு பகுதி வரை தொழுது கொண்டிருப்பார்கள்’ என்ற நபிமொழி இடம் பெற்றுள்ள நபிமொழித் தொகுப்பு

   அ) புகாரி ஆ) முஸ்லிம்

3. அலக் என்ற சொல்லின் பொருள்

   அ) பற்களால் மெல்லப்பட்ட இறைச்சித் துண்டு
   ஆ) அட்டை

4. தி டெவலப்பிங் ஹ்யூமன் நூலின் ஆசிரியர்

   அ) வில்லியம் ஹென்றி
   ஆ) டாக்டர் கீத் எல்.மூர்

5. சிப்பாய்க் கலகம் நடந்த ஆண்டு

   அ) 1806 ஆ)1857

6. விடுதலை இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர்

   அ) ரபி அஹமத் கித்வாய்
   ஆ) மௌலானா அபுல்கலாம் ஆசாத்

7. அரசமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமை களுக்கும், வழிகாட்டும் நெறிமுறைகளுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டால் எதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்?

   அ) வழிகாட்டும் நெறிமுறைகள்
   ஆ) அடிப்படை உரிமைகள்

8. இறைவனின் கண்காணிப்பை உணரும் விழிப்பு உணர்வு

   அ) முஹாஸபா ஆ) முராக்கபா

## புதிர் போட்டி பதினான்கிற்கான விடைகள்

1. ஆ) அல் ஹஜ் 2. ஆ) அவனுக்காகப் பிரார்த் திக்கும் பிள்ளை 3. அ) ஓதுவீராக! 4. ஆ) 33 அத்தியாயங்களில் 52 முறை 5. ஆ) சஞ்சீவ் பட் 6. ஆ) 6310 7. அ) செயிண்ட் பீட்டர் அண்ட் பால் நிறுவனம் 8. அ) ராமின் ரேசியன்

### சரியான விடையை எழுதியவர்கள்:

1. ஸ்ரீமதி, மஞ்சக்குப்பம் 2. T.A.அயானா, கடைய நல்லூர் 3. ந.அனிபா, நாமக்கல் 4. ஜா.ஜுனைதா பேகம், பரங்கிப்பேட்டை 5. G. அன்பழகன், ஆற்காடு 6. பிர்தௌஸ், திருநெல்வேலி 7. A.முஸ்பிரா தஸ்னீம், திண்டுக்கல் 8. H.ஷாகுல், திட்டக்குடி 9. பாலா அமீனத், சிக்கல் 10. முஹமம்து பெரோஸ் கான், நெல்லிக்குப்பம் 11. அஹமது நிஷா, சென்னை 12. ப.சையத் அஹ்மத், துளசேந்திரபுரம் 13. வி.எஸ்.சம்சுத்தீன் பைஜி, கடையநல்லூர் 14. H.M. அஜீம், காரைக்கால் 15. R. கார்த்தி, ஆக்கூர் 16. G. கிருஷ்ணன், ஆற்காடு

**பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:**

**பிர்தௌஸ், திருநெல்வேலி**

• *சிறுகதை*

# குடிமகன்

**- ஏ.ஆர்.கமாலுதீன்**

வீடு சூனியம் வைத்தது போல் இருந்தது. மங்கிய டியூப்லைட் வெளிச்சம் அதை மேலும் அதிகப்படுத்திக் காட்டியது. அறை இருட்டில் கட்டிலில் சாந்தி முனகியபடி இருந்தாள். காய்ச்சல் வந்திருந்தது. மூன்று மணிக்குப் படுத்தவள் இப்போதுதான் விழிப்பு வருகிறது. உடல் முழுக்க வலி. காலை எடுத்து வைக்க முடியவில்லை. பத்து நாள்கள் கடந்தும் வலியும் வேதனையும் குறையவில்லை.

எல்லாம் சுரேஷால் வந்தது. பெற்ற மகன் கொடுத்த வலி. அவனுடைய போதையால் வந்த வேதனை. இளம் வயதிலேயே அவனுக்குப் போதைப் பழக்கம் வந்திருக்க வேண்டும். கவனிக்காமல் விட்டுவிட்டது இப்போது மலையாக எழுந்து அச்சுறுத்தி நிற்கிறது. பள்ளிப்படிப்பை முடித்தவன் எவ்வளவு சொல்லியும் கல்லூரியில் சேர மறுத்து விட்டான். எஸ்டேட்டில் சுரேஷ் வேலைக்குச் சேர்ந்த நாளிலிருந்து அவனுக்குக் குடிப்பழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். சனிக்கிழமை வாங்கிவரும் சம்பளம் பாதி அவன் குடிக்கே சரியாகவிடும்.

ஒரே மகன் எனப் பார்த்துப் பார்த்து வளர்த்தது இப்போது இந்த நிலையாகி விட்டது. எத்தனையோ நாள்கள் அவன் கடைவீதியில் படுத்துப் புரண்டுகொண்டு கிடந்திருக்கிறான். நடு ரோட்டில் கிடக்கும் அவனை இரண்டு பேர் கை கால்களைப் பிடித்துத் தூக்கி ஓரமாகப் போட்டிருக்கிறார்கள். இருட்டில் அவன் கிடப்பதைக் கண்டு சிலர் அவன் முகத்தில் டார்ச் அடித்து ‘தெரிந்தவனா இவன்’ எனப் பார்ப்பார்கள். அந்த கோணலாகக் கிடக்கும் உடலை தெரிந்தவர்கள் பார்த்தாலும் அடையாளம் தெரியாமலே போவார்கள்.

சிலர் இரக்கப்பட்டு அவன் முகத்தில் தண்ணீர் தெளித்து எழுப்ப முயற்சிப்பார்கள். அவனோ கத்துவான். கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துவான். அதிகபட்சம் அவனை ஒரு சுவரில் சாய்த்து உட்கார வைத்து விட்டு நகர்ந்து போவார்கள். முகம் முழுவதும் மண் அப்பியிருக்கும். வாயில் எச்சில் ஒழுகும். தலைமுடி சப்பிய பனம்பழம் போல காட்சி அளிக்கும். காலணிகள் தூரதூரமாகக் கிடக்கும். லஞ்ச் பேக் தலைகீழாகக் கவிழ்ந்து கிடக்கும்.

நான்கு வீடு தள்ளி இருக்கும் பவானி வந்து சொன்னாள். ‘உம் மவன் அங்க ரோட்டில் புரண்டுகிட்டுக் கிடக்கிறான் போய்ப் பாரு’ என்று. சாந்தி அப்போதுதான் வீடு வந்து சேர்ந்திருந்தாள். பிளாஸ்டிக் கம்பெனியில் இருந்து ஆறு மணிக்குக் கிளம்பி ரயிலைப் பிடித்தால் அவள் வீடு வர மணி எட்டு ஆகும். அவன் எங்கு இருக்கிறான் என்று கேட்டு ஓடி வந்தாள். அலங்கோலமாகக் கிடக்கும் அவனை, பலம் கொண்டு தூக்கி நிறுத்தி ஆட்டோவில் ஏற்றிக் கொண்டு வீடு வந்தாள்.

ஆனந்தன் சுரேஷின் அப்பா. டெய்லர். பள்ளிக்கூடத் தெருவில் கடை. இரவு ஒன்பது மணிக்கு வரும் ஆனந்தன் மகனின் நிலையைப் பார்த்து ‘இவனைப் பெத்ததுக்கு ஒருபிடி நல்லதாவது நடந்திருக்கா இவன் இருந்தா என்ன செத்தா என்ன. இத்தனை நரக வேதனை தேவையா நமக்கு’ என்று கூறிக்கொண்டே போய் விடுவார்.

சுரேஷ் சிலநாள் சண்டையை இழுத்துக் கொண்டு வருவான். நண்பர்கள் சேர்ந்து குடித்துவிட்டு அவர்களிடையே சண்டை மூண்டு விடும். அடிதடி ஏற்பட்டு, கைகலப்பு ஆகி ரத்தக் காயத்துடன் வீடு வருவான். சாந்தி திட்டித் தீர்ப்பாள். ‘ஏன்டா உனக்கு இந்த வேலை. இப்படி குடித்து நாசமாப் போனதுமில்லாம வெட்டுகுத்துன்னு வந்து நிக்கறியே. நீ எல்லாம் மனுசனாடா.. ஏன்டா வயித்துல நெருப்ப அள்ளிப்போடுற. ஒழுங்கு முறையா வேலைக்குப் போனியா வீட்டுக்கு வருவியா. அதை விட்டு, குடி சண்டைன்னு கொஞ்ச உசுரையும் எடுக்கிற’ என்பாள். பிறகு காயத்துக்கு மருந்து வாங்கப் போவாள்.

ஒரு நாள் மணி பத்துக்கும் மேல் ஆகியும் அவன் வீடு வந்து சேரவில்லை என்று சாந்தியும் ஆனந்தனும், ஊர் முழுக்கத் தேடியும்

அவன் எங்கேயும் கிடைக்கவில்லை. போன் போட்டாலும் மணி அடித்து எடுக்கவில்லை. ‘எங்கு போய் தொலைஞ்சான் இந்த நாய்’ என அவனைத் திட்டிக் கொண்டே தேடினார் ஆனந்தன்.

மறுநாள் சுரேஷ் விடிந்தும் விடியாத வேளையில் வீட்டினுள் நுழைந்தான். தலையில் பெரிய மருத்துவக் கட்டு. தாடையைச் சேர்த்து இழுத்துக் கட்டியிருந்தது. ‘என்னடா ஆச்சு. தலையில கட்டு. எங்க போய் சண்டை போட்டுத் தொலைச்ச’

‘சண்டையெல்லாம் போடல. ட்ரெயின்ல இருந்து கீழே விழுந்துட்டேன். கூட்ட நெரிசல். உள்ளே போக முடியல. கை நழுவி முள்புதர்ல விழுந்துட்டேன். தலை லேசா அடி, நாலு பேரு தூக்கிட்டு போய் G.H.ல சேர்த்தாங்க..’ வருத்தமோ கவலையோ இல்லாத பதில் அவனிடமிருந்து வந்தது.

இரண்டு ஆண்டுகளுக்குமுன் பேட்டை காவல் நிலையத்தில் இருந்து போன் வந்தது. ‘உங்க மகன் இங்க இருக்கான். வந்து கூட்டிட்டு போங்க’ என்று.! ஆனந்தன் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. பீடை சாகட்டும்’ என நினைத்தார். சாந்தி அவரைத் திட்டி, காலில் விழுந்து அழாதகுறையாக அழைத்துப் போனாள். காவல் நிலையம் முன்னால் இடது ஓரத்தில் சுரேஷ் நின்று கொண்டிருந்தான். அவன் கழுத்தில் ஓர் அறிவிப்புப் பலகை தொங்கியது. அதில் ‘நான் ஒரு வழிப்பறி திருடன்’ என எழுதப் பட்டிருந்தது. முகம் வீங்கி பழுத்திருந்தது.

இந்தக் காட்சி சாந்தி மனதில் இடியை இறக்கியது. பீரிட்டு வரும் அழுகையை அடக்க முடியாமல் முகத்தில் அடித்துக் கொண்டு கதறி அழுதாள். இருவரும் உள்ளே சென்றார்கள். இவர்களைத் தெரிந்து கொண்டு ஆய்வாளர் பேசினார். ‘இவன் என்ன செஞ்சிருக்கான் தெரியுமா. ட்ரைன் விட்டு இறங்கிப் போன பெண்ணோட பையைத் திருடிட்டு ஓடியிருக்கான். மாட்டிக் கிட்டு தர்ம அடி வாங்கியிருக்கான். என்ன செய்யலாம் சொல்லுங்க..’ காவல் ஆய்வாளர் இவர்களைப் பார்த்துக் கேட்டார்.

ஆனந்தன் முந்திக்கொண்டு, ‘தொலையட்டும் சார். அவனைத் தூக்குல போட்டாலும் இங்க கேட்க யாருமில்லை. நாங்க நிம்மதியா இருப்போம். இவன் இருந்தும் ஒன்னுதான் இல்லாததும் ஒன்னுதான். ஜனங்க இவனை அடிச்சே கொன்னு போட்டிருந்தாலும் நாங்க ஏன்னு கேட்க மாட்டோம். தோ.. இருக்காளே எல்லாம் இவ செஞ்ச தப்பு. வளர்ப்பு சரியில்லை. போடா நாயேன்னு விரட்டி விட்டிருந்தா, எங்கயாவது போய் தொலைஞ்சிருக்கும். இன்னும் இது காலச்சுத்தி வருது. ச்சே...’ அவர் பேசப் பேச சாந்தி முறைத்துப் பார்த்தாள் அவரை.

'வாயை மூடிட்டு இருங்க செத்தே’ என்றாள் கோபமாக.

‘சார் இந்த ஒரு தடவை அவனை மன்னிச்சு விட்டுருங்க. இனிமே அவன் இது மாதிரி செய்யாம நான் பார்த்துக்கிறேன். அவர் பட்ட அவமானம் இதுவே கடைசியா இருக்கட்டும்.. எல்லாம் தொலையட்டும்..’ என்றாள் வழியும் கண்ணீரைத் துடைத்தபடி.

‘சரி கூட்டிட்டுப் போங்க. டேய் தம்பி.. வா உள்ள’ ஆய்வாளர் வெளியே நிற்கும் சுரேஷை அழைத்தார். அவன் உள்ளே வந்து நின்றான். ‘போர்டை கழற்று’ என்றார்.



அதைக் கழற்றி மேசையில் வைத்தான். அவர்களுடன் திரும்பத் தயாரானான். சாந்தி ஆனந்தனைப் பார்த்தாள். அவர் சட்டைப் பையில் கைவிட்டு சிலநூறு ரூபாய் நோட்டுகளை ஆய்வாளரிடம் கொடுத்தார். அவர் அதை வாங்க மறுத்து ‘முதல்ல அவனைக் கூட்டிப் போங்க’ என்றார்.

அவனைக் கூட்டிக் கொண்டு வீடு வந்து சேர மணி பதினொன்று ஆகிவிட்டது. மறுநாள் பாட்டி, சாந்தி, ஆனந்தன் மூவரும்

அவனைச் சூழ்ந்து கொண்டு எச்சரித்தார்கள். ‘இதுதான் உனக்குக் கடைசி. இத்தோட இந்தச் சனியனை விட்டுத் தொலை. இனியும் எங்களால பாடு எடுக்க முடியாது. ஒழுங்கு முறையா கவுரவமா வாழக் கத்துக்க. கண்ட கண்ட நாய்களோட சேர்ந்து குட்டிச்சுவரா போய்ட்ட. இனி புது மனுசனா வாழப்பாரு. நீ ஒழுங்கா இருந்தேனா ஒரு பொண்ணைப் பார்த்து கல்யாணம் பண்ணி வைக்கலாம். இல்ல நான் இப்படித் தான் குடிச்சிட்டு திரிவேண்ணு நீ முடிவெடுத்தா, நீ அநாதைப் பொணமாத்தான் ரோட்டில் கிடப்ப. உன்னைச் சீண்ட ஒருத்தரும் வர மாட்டாங்க. பார்த்துக்க...’

அவன் சாந்தி சொன்னதைக் கேட்டு தலையை ஆட்டினான். நிமிர்ந்து பார்க்காமல்..!

சுரேஷ் எல்லாவற்றையும் புரிந்து கொண்டவனாக வேலைக்குச் சென்று கொண்டிருந்தான். வேலை முடிந்து ரயில் ஏறி வீடு வந்து சேருவதே தன் முதல் கடமை என எண்ணினான். நண்பர்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. போன்செய்து கூப்பிட்டாலும் மறுத்தான். சாந்திக்கு நிம்மதியாக இருந்தது. அவனுக்காகத் தினமும் வேண்டிக் கொண்டாள். இவன் இப்படி மாறுவான் என ஆனந்தன் நம்பவில்லை. அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவனைப் பற்றி ஒரு நம்பிக்கை வந்தது.

எல்லோரும் நம்பிக்கையும் நிம்மதியுடன் இருக்கையில் ஒரு நாள் ஆனந்தனுக்கு போன் வந்தது. 'ஏம்பா ஆனந்தா. உம் மகன் இங்க திருமுல்லைவாயில் ரயில்வே ஸ்டேசன்ல விழுந்து கிடக்கிறான். என்ன ஆச்சு அவனுக்கு. சீக்கிரம் வந்து பாரு’ பக்கத்து பேன்சி கடை முனீர் போனில் சொன்னது ஆனந்தனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது. அவரைச் சுற்றி இருள் சூழ்ந்து கொண்டது. கீழே விழுந்து விடுவோமோ என்ற அச்சம் அவரைப் பிடித்துக் கொண்டது.

வேதனையும் ஆத்திரமும் உடம்பில் ஏறிக் கொண்டது. சாந்திக்கு போன் போட்டு விஷயத்தைச் சொன்னார். அவளுக்கு உலகமே காலடியில் சரிந்து விழுந்து விட்டது போலிருந்தது. சுரேஷ் இப்போது போதை மாத்திரையை பழக்கமாக்கிக் கொண்டான். எஸ்டேட்டில் பழைய கம்பெனியில் இருந்து விலகி வேறு ஒரு கம்பெனியில் சேர்ந்திருந்தான். அங்குதான் இதற்குப் பழகிவிட்டிருக்கின்றான்.

வீடு மறுபடியும் அல்லோலப்பட்டது. பக்கத்து குடித்தனக்காரர்கள் எல்லாம் வீட்டின் உரிமையாளரிடம் புகார் தெரிவிக்க ஆரம்பித்து விட்டார்கள். ‘தினமும் ஒரே ரகளையா இருக்கு. நிம்மதியா தூங்க முடியல.. வெளில வர முடியலை. அவனோட காட்டுக் கத்தல் தாங்க முடியல. காலைல எழுந்தவுடனே கெட்ட வார்த்தையும், ஆபாசமான பேச்சும்தான் கேட்க வேண்டியிருக்கு.. அவங்களை வீட்டைக் காலி பண்ணச் சொல்லுங்க’ என்றார்கள். வீட்டின் உரிமையாளரும் சாந்தியை அழைத்து வீட்டைக் காலி செய்ய உத்தரவு போட்டு விட்டார்.

மூன்று மாதங்களுக்கு முன் அவனை வேலையை விட்டு நீக்கி விட்டார்கள். வருமானம் இல்லை. ஆனாலும் வெளியே போவான். போதையோடு தள்ளாடிக் கொண்டு வீடு வருவான். காம்பவுண்டில் நுழையும் போதே அவனுடைய கத்தல் ஆரம்பித்து விடும். பாட்டியிடம் வந்து ‘சோறு போடு’ என்று அதிகாரம் பண்ணுவான்.

உண்டு முடித்த பின் ‘பாட்டி உனக்குத்தான் பென்சன் ரூபாய் வருதே. என்ன பண்ற அதை... ஒனக்கு என்ன செலவா இருக்கு.. எங்கிட்ட கொடுத்து வை. நா மொத்தமா சேர்த்துத் தரேன். சரியா..’ என்பான். ஆனந்தனுக்கு வியாபாரம் நொடிந்து விட்டது. ஏற்கனவே புலம்புவார். யார் இப்போ துணி எடுத்துத் தைக்கிறா. எல்லாமே ரெடிமேடா ஆகிடுச்சி. தைக்கிற கூலிக்கு ரெண்டு கோடி சட்டை பேண்ட் எடுக்கலாம்’ என்று! தையல் மிஷினை வீட்டில் கொண்டு வந்து போட்டு விட்டார்.

இப்போது அவர் செக்யூரிட்டி வேலைக்குப் போய் வந்து கொண்டிருக்கிறார். பகல் இரண்டு மணிக்கு வீட்டிலிருந்து கிளம்பினால். மறுநாள் காலை எட்டு மணிக்கு வருவார். சாந்திக்கு கட்டாயத்தின் பேரி

லேயே வேலைக்குப் போக வேண்டியிருந்தது. சோர்வும் கவலையும் அவள் உடலை மெலிந்து போக வைத்திருந்தது. காலையில் கிளம்பி இரவு வீடு வர அவளுக்குச் சிரமமாக இருந்தது. தூங்கி எழுந்தவுடனே படுத்துக் கொள்ளலாம் போல உடம்பு இருந்தது. வேறு வழி இல்லை. மாநகரத்தின் செலவினங்கள் அவளை ஓய்வெடுக்க விடுவதில்லை. வீட்டு வாடகை ஒரு பக்கம் என்றால் விலைவாசி துரத்திக்கொண்டு வந்தது அவளை. போதாக்குறைக்கு வீட்டில் ஒன்று உள்ளது. அது வெளியே போய் நாலு காசு கொண்டு வந்தாலும் சமாளிக்கலாம்.

இதற்கு நடுவே அவள் சுரேஷுக்குத் தெரியக்கூடாது என்பதற்காக மறைவிடத்தில் பணத்தைப் போட்டு வைத்திருந்தாள். இதை எப்படியோ மோப்பம் பிடித்தவன், இடத்தைத் தெரிந்து கொண்டு சிறு தொகையாக சந்தேகம் வராதபடி அடித்துக் கொண்டிருந்தான். அப்போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது. ஆனந்தன் வேலைக்குக் கிளம்ப தயாராகிக் கொண்டிருந்தார். வீட்டு சன்னலில் மாட்டியிருந்த முகம் பார்க்கும் கண்ணாடியைப் பார்த்துக்கொண்டு ஷேவிங் செய்தார். முடித்து விட்டு தாடையில் இடது கை விரல்களால் சரியாக வந்திருக்கிறதா எனச் சோதித்தார். ரேசரில் இருந்து பிளேடை அகற்றி விட்டுத் திரும்பினார்.

அறை கட்டிலில் சுரேஷ் புரண்டு கொண்டிருந்தான். அவனைப் பார்த்துச் சொன்னார். ‘இன்னும் ஏன்டா இந்த வீட்டுல இருக்க. தண்டச் சோறு சாப்டுகிட்டு, எங்கயாவது போய் உழைச்சி நாலுகாசு பெத்தவனுக்குக் கொடுக்கனும்னு அக்கறை இருக்கா.. நீ எங்க தரப் போற..? நீதான் ராஜ வாழ்க்கை வாழ்றியே. எவன் எப்படிப் போனாலும் உனக்கு என்ன கவலை. எப்படியோ பிச்சை எடுத்தாவது ஊத்திக்கிட்டு வந்துடுற. ஒனக்குன்னு நாலு பேரு இருக்கானுங்க பாரு... அவனுகளச் சொல்லணும்..’

அறையை விட்டு வெளியே வந்து அவரை முறைத்துப் பார்த்தான் சுரேஷ். சட்டை கீழே முனையை வாயில் கவ்விக் கொண்டு கைலியை இடுப்பில் இறுக்கிக் கொண்டான். மயக்க நிலையில் நின்ற அவன் தடுமாறினான். என்ன நினைத்தானோ, தன் வலது காலைத் தூக்கி அவர் மார்பில் எட்டி உதைத்தான். அவர் ‘ஐயோ அம்மா’ என்று அலறியபடி மல்லாக்க விழுந்தார். அவர் தொடையிலும் காலிலும் மாறி மாறி மிதித்தான். அவர் மரண ஓலமிட்டபடி எழும்ப முயன்றார். அவர் நெஞ்சில் இவன் இரண்டு கைகளாலும் எத்தி விட்டு மறுபடியும் கீழே தள்ளினான்.

> ‘தொலையட் டும் சார். அவனைத் தூக்குல போட்டாலும் இங்க கேட்க யாருமில்லை. நாங்க நிம்மதியா இருப்போம். இவன் இருந்தும் ஒன்னுதான் இல்லாததும் ஒன்னுதான். ஜனங்க இவனை அடிச்சே கொன்னு போட்டிருந்தாலும் நாங்க ஏன்னு கேட்க மாட்டோம்.

இரண்டாவது வீட்டில் தொலைக்காட்சி சீரியல் பார்த்துக் கொண்டிருந்த பாட்டி, அலறி அடித்து ஓடிவந்தாள் ‘டேய் நிறுத்துடா. நிறுத்து. குடும்பத்தை அழிக்க வந்தவனே. எங்கயாவது போய்த் தொலையேண்டா..! இன்னும் இதுதான் பாக்கி. இதையும் செஞ்சுடு. அடிச்சே கொன்னுடு எங்களை...’ என்று இரு கைகளாலும் பலம் கொண்டு அவனை இழுத்துப் போய் வீட்டின் வெளியே தள்ளினான். அவன் எழுந்து வெளியே ஓடிவிட்டான்.


ஆனந்தனுக்குத் தலையில் பலமான இரத்தக் கசிவு. வலது கையால் தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டு அழுதபடி மருத்துவமனைக்கு ஓடினார். பாட்டி சாந்திக்கு போனில் விஷயத்தைச் சொன்னாள். அவள் ஐந்து மணிக்கு அபிராமி மருத்துவமனையில் போய் பார்த்தபோது ஆனந்தன் தலையில் பெரிய கட்டு போடப்பட்டு படுத்துக் கிடந்தார்.

பதினைந்து நாள்களாயிற்று. சுரேஷ் வீட்டிற்கு வரவில்லை. ‘அவன் போய்த் தொலையட்டும்.. அவனைத் தேடிச் செல்ல வேண்டாம்’ என்று ஆனந்தன் வைராக்கியமாய்ச் சொல்லிவிட்டார். ‘இனி அவன் திருந்த மாட்டான். அப்படியே தொலையட்டும்’ என்று ஆனந்தன் நினைத்தாலும் சாந்தியின் மனசு கேட்கவில்லை. அவன் ஒருநாள் குடி போதையிலிருந்து மீண்டு வருவான் என்ற நம்பிக்கையைச் சுமந்து நின்றாள்.

# போதைக்கு எதிரான போர்
# ஆபரேஷன் தூஃபான்




இந்திய மாநிலங்களில் போதைப்பொருள் புழக்கத்தில் மிக அதிகம் பாதிக்கப்பட்டுள்ள மாநிலம் கேரளா. இம்மாநிலத்தில் போதைப்பொருள் பயன்பாடும் அது சார்ந்த குற்றங்களும் தேசிய சராசரியை விட ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது.







அண்மையில் பள்ளிக்கூட ஆசிரியைகள் இருவர் போதைப் பொருள் விற்பனை செய்ததாகக் கைது செய்யப்பட்ட போது போதை மாஃபியாக் கும்பலின் ஆபத்தான அணுகுமுறை வெளிச்சத்திற்கு வந்தது. பணத்துக்கு ஆசைப்பட்டு பெண்கள் கூட இதுபோன்ற குற்றச்செயலுக்குத் துணை போவதும், இவர்கள் மூலம் மிக எளிதாகப் பள்ளி கல்லூரி மாணவர்களுக்குப் போதை தரக்கூடிய பொருட்கள் கொண்டு சேர்கிறது என்பதும் கேரளாவை அதிர்ச்சிக்குள்ளாக்கிய சம்பவம்.

இதுபோன்ற சம்பவங்களை முடிவுக்குக் கொண்டு வர புதிதாக பொறுப்பேற்ற காங்கிரஸ் கட்சியின் உள்துறை அமைச்சர் ரமேஷ் சென்னித்தலா குழந்தைகள், பள்ளி கல்லூரி மாணவர்கள், பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்குக் காரணமான போதைக் கலாச்சாரத்தை முடிவுக்குக் கொண்டு வர உள்துறை, காவல்துறை, சுங்கத்துறையை ஒருங்கிணைத்து 'ஆபரேஷன் தூஃபான்' எனும் பெயரில் போர்ப் பிரகடனத்தை அறிவித்தார்.

இந்தத் திட்டத்தை மக்களிடம் கொண்டு சேர்க்க நடிகர் மோகன்லால் உட்பட பிரபலங்கள் அரசுடன் இணைந்து பரப்புரை செய்து வருகின்றனர். ஆபரேஷன் தூஃபான் எனும் திட்டத்தில் அரசின் பல்வேறு துறையினர் இணைந்து அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஜூன் 6ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் மாநிலம் முழுவதும் நடத்திய சோதனைகள் மூலம் பல கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கடந்த இரண்டு மாதங்களில் 5500 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ஆறாயிரத்துக்கு அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாநிலம் முழுவதும் பள்ளி கல்லூரி மாணவர்கள் மத்தியில் போதையின் தீமை குறித்து விழிப்பு உணர்வு பரப்புரைகள், வீதி நாடகங்கள், சமுதாய இயக்கங்களை ஒருங்கிணைத்து தொடர் பரப்புரை முடுக்கி விடப்பட்டுள்ளது. போதையால் பாதிக்கப்பட்ட நபர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு உளவியல் ஆலோசனை, மறுவாழ்வுத் திட்டங்களைக் கேரள அரசு மேற்கொண்டு வருகின்றது.

ஆபரேஷன் தூஃபான் திட்டத்தில் இணைந்து போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கையில் இணைந்து செயல்பட தமிழ்நாடு உள்பட அண்டை மாநில அரசுகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**– குளச்சல் அசீம்**

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

# ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

## WE NOW ACCEPT
# TO PAY & COD
## BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of
WCA INTER GLOBAL

**044-61266666**

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 16 - 31 AUGUST 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

TRADITIONAL TRUST SINCE 1925
LKS
100 YEARS

- மது தீமைகளின் தாய்
- போதை தரக்கூடிய ஒவ்வொன்றும் கம்ர் (மது) ஆகும். போதை தரக்கூடிய ஒவ்வொன்றும் தடை செய்யப்பட்டது (ஹராம்) ஆகும்

– முஹம்மது நபி(ஸல்) அவர்கள்

கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்
35. கதீட்ரல் ரோடு, சென்னை - 600 086.
போன் : (044) 2811 3611


If undelivered, please return to : **Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.**